
கல்கி

வைரவிழா ஆண்டு

KALKI 7.7.2002
ரூ. 6.00



விருதுநகர் சிறப்பிதழ்

அதிக பக்கங்கள்



"நான் அரசியல் பண்ணவில்லை!"

– ஜயேந்திரர்



www.digicinema.ne
டிசினிமா
the perfect entertaine
தமிழில் முதல் முழு வண்ண சினிமா இதழ்
(மாதம் இருமுறை)
ஜூலை 1-15, 02
ரூ.10/-
வணக்கம்!
கடந்த மாத இதழொன்றை
என் கணவர் வாங்கி வந்தார்.
சினிமா புத்தகம் என்ற உடனே.
'எங்க கண்ட கண்ட புத்தகத்தையெல்லாம்
வாங்கி காசைக்கரியாக்குறீங்கன்னு'
திட்டினேன். என் கணவரோ மிகப்
பொறுமையாக.. இந்த புத்தகத்தை ஜஸ்ட்
புரட்டிப் பாரேன் என்றார். சீ! வேற
வேலை இல்லை எனக்கு? பொம்பளைய
கண்ட மாதிரி படம் போட்டு
வச்சிருப்பாங்க! இதைப் போய் ஒரு
பொம்பளை நானும் பார்க்கணுமாக்கும்?
வரவர உங்களுக்கு விவஸ்தையே இல்லாம
போச்சு! என எகிற, ஏண்டி! என்னைக்காவது
ஒரு தரமில்லாத புத்தகத்தை நான் வாங்கிட்டு
வந்திருக்கேனா? சினிமா புக்குன்னா எல்லாம்
அப்படியேதான் இருக்கணும்னு ஏதாவது
இலக்கணமா? புரட்டிப்பார்த்துட்டு நல்லா
இல்லைன்னா தூக்கியெறியேன் என்றார்.
புரட்டிப் பார்த்தேன்... புரட்டிப் புரட்டிப்
படித்தேன், இப்போது பத்திரமாக
வைத்திருக்கிறேன்! இந்த நல்ல
புத்தகத்தைப்பற்றி எனக்கு என் கணவர்
எடுத்துச் சொல்லிப் புரியவெச்சிட்டார்.
என்னைப் போன்ற பெண்களுக்கு யார் புரிய
வைப்பார்கள் என்று தான் தெரியவில்லை!
என்போன்ற பெண்மணியினரும் விரும்பிப்
படிக்கத்தகுதியான, நல்ல புத்தகம் கொண்டு
வந்த உங்களுக்கும், அதை எனக்கு
அறிமுகப்படுத்திய என் கணவருக்கும்
இக்கடிதம் மூலம் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.
இப்படிக்கு
பார்த்திபனின்
கிறுக்கல்கள்
DNet Services,
7B-5th Street, Kumaran Colony, Vadapalani,
Chennai-26. Tel : 372 8186, 372 9186, 473 5186
e-mail : dnet@vsnl.net www.digicinema.net



ஆட்டோகிராஃப் கேட்டார்கள்!

உலகக் கோப்பைக் கால்பந்தாட்டப் போட்டிகளுக்கு உதவி நடுவராக இருந்துவிட்டுத் திரும்பியிருக்கிறார் தமிழகத்தைச் சேர்ந்த சங்கர். தமது அனுபவங்களை நம்மோடு பகிர்ந்து கொண்டார்.

● சென்னையிலிருந்து புறப்படும்போதே தடங்கல். நான் செல்ல வேண்டிய விமானம் ரத்தாகி, ஒரே டென்ஷன். அடுத்து, வேறு விமானம் பிடித்து, மலேசியா போய் சேர்ந்தது லேட். கனெக்டிங் பிளைட்டை மிஸ் பண்ணி ஒரு வழியாக கொரியா போய்ச் சேர்ந்தேன்.

● தூக்கமின்மை, டென்ஷன் காரணமாக, கண்கள் சிவந்து, ஒரே எரிச்சல். கண்களிலிருந்து நீர் வடிந்தது. ஒரு வாலண்டியர், கண் டாக்டரிடம் அழைத்துப் போனார். ஏராளமான பேர் காத்திருந்தனர். உலகக் கோப்பை போட்டி ரெபரி என்றதும், உடனே பார்த்துவிட்டார் டாக்டர். என்னை பீஸ் கொடுக்க விடாமல் தடுத்து, தாமே கொடுத்தார் அந்தக் கொரிய கால்பந்துக் கழக வாலண்டியர். டாக்டர் பீஸ் எவ்வளவு தெரியுமா? சுமார் ஏழாயிரம் ரூபாய்!

● உலகெங்குமிருந்து வந்திருந்த 72 ரெபரிகளுக்கும் ஒரு வாரம் பயிற்சி வகுப்பு எடுத்தார்கள். விதிமுறைகளை விளக்கிச் சொல்லி, எத்தகைய டென்ஷனான சூழ்நிலைகளிலும், எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று ஆலோசனைகள் கொடுத்து நிறைய வீடியோ கிளிப்பிங்குகளைப் போட்டுக் காட்டி விளக்கம் அளித்தார்கள். மிக உபயோகமாக இருந்தது.

● நான் நடுவராக இருந்த மூன்று போட்டிகளுமே ஜப்பானில்தான் நடைபெற்றன. உலகின் பல நாடுகளிலிருந்தும், ரசிகர்கள் திரளாக வந்திருந்தார்கள். ஜப்பானிய ரசிகர்கள் தங்கள் நாட்டு அணி ஆடினாலும், ஆடாவிட்டாலும் எல்லா போட்டிகளையும் உற்சாகமாக ரசித்தார்கள். என்னை மிகவும் கவர்ந்த ஒரு விஷயம், அவர்களது கட்டுப்பாடு, ஒழுக்கம். ஒரு மேட்ச் முடிந்து, அரை மணி



நேரம் கழித்து, ஒரு கால்பந்து மைதானத்துக்குப் போனபோது, மைதானம் வெறிச்சோடிக் கிடந்தது. அங்கே ஒரு குப்பை கிடையாது. அத்தனைச் சுத்தம்.

● உணவைப் பொறுத்தவரை, பிரச்னையே இல்லை. சைனீஸ் உணவு, சூப் வகைகள், அரிசி உணவு, பழங்கள், எது வேண்டுமானாலும் கிடைத்தது.

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

● போட்டிகளின்போது அணியும் நடுவர் சீருடை தவிர, மற்ற சமயங்களிலும் நடுவர்கள் வேறு ஒரு சீருடை, அடையாள அட்டை அணிய வேண்டியிருந்தது. அதனால், எங்கே போனாலும், "ஓ! நீங்கள் கால்பந்தாட்ட நடுவரா?" என்று விசாரித்து, ஆட்டோகிராப் கேட்டார்கள்; போட்டோ எடுத்துக் கொண்டார்கள்.

● ஜப்பானில் பல்வேறு இடங்களையும் சுற்றிப் பார்த்தாலும், சூமோ மல்யுத்த வீரர்களின் பயிற்சிக் கூடத்துக்குச் சென்றது மறக்க முடியாத அனுபவம். மாமிச மலை போன்ற அவர்களைப் பார்த்துச் சிரித்து விடக்கூடாது என்ற எச்சரிக்கையுடன் அங்கே அழைத்துச் செல்லப்பட்டோம். அவர்களின் பிரம்மாண்டமான சைஸ், அவர்களின் பயிற்சி மற்றும் மல்யுத்த டெக்னிக்குகளை சுமார் ஒரு மணி நேரம் பார்த்து, பிரமித்து, ரசித்தோம்.

● மற்ற நடுவர்களுடன் சங்கர்



இந்த இதழில் இடம் பெற்றுள்ள
விருதுநகர் சிறப்பிதழ் கட்டுரைகள்
ஆர்.சி.ஜெயந்தன்.
படங்கள் : **ராஜன்**

கிருஷ்ண கிருஷ்ணா -
தொகுப்பு : **சுந்தரா**

அதன்பின் அவர்கள் தாங்கள் வழக்கமாகச் சாப்பிடும் சூப் மற்றும் மூலிகை உணவை எங்களுக்குப் பரிமாறினார்கள். அவர்களது அன்பான உபசரிப்பில் திணறிப் போனோம்.

● உலகின் டாப் கிளாஸ் கால்பந்து வீரர்கள் அனைவரும் வந்திருந்தாலும், ஒருவருடன் கூட தனித்துப் பேச முடியாமல் போய் விட்டது. காரணம், போட்டி நடுவர்கள், எந்த அணியின் வீரருடனும் தனிப்பட்ட முறையில் பேசக் கூடாது என்பது ஒரு விதி. சில ரிடையர்டு பிளேயர்கள், கோச்களைச் சந்தித்துப் பேச வாய்ப்பு கிடைத்தது.

● ஷீபா என்ற நகரத்திலிருந்து, டோக்கியோ சென்ற அனுபவம் வித்தியாசமானது. கடலுக்கு மேல் பதினைந்து கிலோ மீட்டர் மேம்பாலத்தில் பயணம். அதனை யடுத்து, கடலுக்குக் கீழே சுரங்கப் பாதையில் சாலைப் பயணம். அதேபோல ஜப்பானின் புல்லட் ரயில் என்கிற அதிவேக ரயில் பயணமும் ஆயுசுக்கும் மறக்காது. விமானத்தில் பறப்பது போன்ற, கொஞ்சமும் அசைவு இல்லாத, சுகமான பயணம் அது.

● கடைசியில், இந்தியா திரும்புகிற போது, ஒரு வருத்தமான அனுபவம். எனக்கு விமானத்தில் அனுமதிக்கப்பட்ட முப்பது கிலோவுக்குக் கூடுதலாக பதினெட்டு கிலோ லக்கேஜ் சேர்ந்துவிட்டது. விமான நிலையத்தில் கூடுதல் லக்கேஜுக்கு, கட்டணம் கட்டச் சொன்னார்கள் நான் உங்கள் நாட்டு விருந்தினர்; உலகக் கோப்பை ரெபரி: என்று ஏதேதோ சொல்லிப் பார்த்தேன். அவர்கள் மசியவில்லை. எனக்கும், எதையும் அங்கேயே விட்டு விட்டு வர முடியாத சூழ்நிலை. அழுதுகொண்டே கூடுதல் கட்டணம் கட்டினேன். எவ்வளவு தெரியுமா? நாற்பதாயிரம் ரூபாய்! சென்னை - டோக்கியோ விமானக் கட்டணமே அவ்வளவு இல்லை.

— மௌலி

கல்வித் தொண்டுக்குக் கனிவுடன் உதவுங்கள்!

● அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரியில் முதுகலை இரண்டாம் ஆண்டு வரலாற்றுத் துறையில் பயின்று வருகிறேன். பல்கலைக் கழகத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று வகுப்பில் முதன்மையாக இருக்கிறேன். மதிப்பெண் நகல்களை இணைத்துள்ளேன். என் தந்தை கூலி வேலை தான் செய்து வருகிறார். குடும்பத்தின் பொருளாதாரம் நலிவுற்ற நிலையிலும் ஆர்வத்தின் காரணமாக படிப்பைத் தொடர்கிறேன்...

-பி.எஸ். புனிதா, பழனி.

● நூருல் இஸ்லாம் பொறியற் கல்லூரியில் இறுதி ஆண்டு படித்து வருகிறேன். சிறு வயதிலேயே தந்தையை இழந்தவன். என் தாய் படிப்பறிவற்றவர். வேலை ஏதும் இல்லை. அறக்கட்டளைகள், பொது நலச் சங்கங்கள் போன்றவற்றின் உதவியோடு படிப்பைத் தொடர்ந்து வருகிறேன். இவ்வாண்டு ரூ.14, 730 கட்ட வேண்டிய நிலையில் திகைத்து நிற்கிறேன்...

- வி.அன்டொனி கிரேட்டஸ்,
நாகர்கோயில்.

● என் தந்தை ஒரு பலசரக்குக் கடையில் வேலை பார்த்து வருகிறார். என் தாயாருக்கு வேலை ஏதும் கிடைக்கவில்லை. பாலிடெக்னிக்கில் பயில பாளையங்கோட்டை வரை சைக்கிளில் சென்று பிறகு இரண்டு பஸ் மாறி சென்று வருகிறேன். மூன்றாவது செமஸ்டரில் 90.60 சதவீதம், நான்காவது செமஸ்டரில் 91.33 சதவீதம் மதிப்பெண் பெற்றுள்ளேன்...

- க. செந்தில்குமார், படப்பக்குறிச்சி.


கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளைக்கு இது போன்ற விண்ணப்பக் கடிதங்கள் ஆயிரக்கணக்கில் ஆண்டுதோறும் வந்து சேர்கின்றன. அறங்காவலர்கள் அனைத்தையும் கவனமுடன் பரிசீலித்து உதவித்தொகை பெறத் தகுதியுடையவர்களைத் தேர்வு செய்கின்றனர்.

உதவித்தொகைகள் ஆண்டுதோறும் அதிகரித்து நடப்பு ஆண்டுக்கு ரூ.2,00,000 விநியோகமாவதையும், உதவித் தொகைகளைப் பெறுவதற்கான விதிமுறைகள் குறித்தும் சென்ற இதழ் கல்கியில் படித்திருப்பீர்கள்.

அமரர் கல்கி அவர்களின் நினைவாக நடைபெறும் இந்த நற்பணியில் பங்கேற்க விரும்பி, கல்கி வாசகர்கள் தங்களால் இயன்ற அளவில் சிறிதும் பெரிதுமாக நன்கொடைகள் அனுப்பி வருகிறார்கள். ரூ. 1000 அல்லது அதற்கு மேற்பட்ட நன்கொடைகள் மூலதன நிதியில் சேர்க்கப்பட்டு அரசு அனுமதிக்கிற பத்திரங்களில் முதலீடாகி அதிலிருந்து கிடைக்கும் வருவாய், உதவித்தொகைகளாக விநியோகமாகின்றது.



• புனிதா



• கிரேட்டஸ்



• செந்தில்குமார்


சிறப்பு மிக்க இந்தக் கல்வித் தொண்டில் ஈடுபட விரும்புகிறவர்கள், **DD, M.O,** அல்லது **Cheque** அனுப்பலாம். **KALKI KRISHNAMURTHY MEMORIAL TRUST** என்ற பெயருக்கு **A/C Payee** காசோலைகள் வரவேற்கப்படுகின்றன. நன்கொடைகளுக்கு 80.G பிரிவின்கீழ் வருமான வரிச் சலுகை உண்டு.

விலாசம்:

Managing Trustee,
Kalki Krishnamurthy Memorial Trust,
Old # 35; New # 14, Fourth Main Road,
Kasthurba Nagar, Adyar,
Chennai 600 020.

நன்றி.

கல்கி ராஜேந்திரன்,
(நிர்வாக அறங்காவலர்)


• ஜயேந்திரர்
“
தனிப்பட்ட அக்கறை
என்று எதுவும்
கிடையாது.
தேசத்துக்காக,
கடவுளுக்காக,
மதத்துக்காக நான்
அக்கறை
செலுத்துகிறேன்.
”

"நான் அரசியல் பண்ணவில்லை!"

புது டெல்லி ஸ்ரீகாமாட்சி ஆலய வளாகத்தில் மீண்டும் ஒருமுறை பரபரப்புத் தொற்றிக் கொண்டது. சாலையின் இருபுறங்களிலும் மைல் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்ட வாகனங்கள். பல அரசியல் பெரும்புள்ளிகள் மற்றும் மத்திய அமைச்சர்களின் வருகைகள். அதைத் தொடர்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக முளைத்த போலீஸ் தலைகள். கேமரா உபகரணங்களுடன் மீடியா பட்டாளங்கள். வாகன நெரிசல். போக்குவரத்து நெருக்கடி.

இவ்வளவும் காஞ்சி மடாதிபதி ஜயேந்திரரின் டெல்லி வருகையை ஒட்டி நிகழ்ந்த பரபரப்பு. ஆலயத்தின் நிர்வாகிகளான பொள்ளாச்சி கணேசன், உச்சநீதிமன்ற வழக்கறிஞர் கிருஷ்ணகுமார், சுப்புராமன், எம்.டி.என்.எல். சுந்தரேசன் ஆகியவர்கள் சுவாமிகளைச் சந்திக்க வந்த அரசியல்வாதிகள் மற்றும் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பை ஒழுங்கு படுத்த சிரமப்பட்டுக் கொண்டிருந்தனர். இவ்வளவு களேபரங்களுக்குமிடையே ஜயேந்திரர் நமக்களித்த பேட்டி.

• பெர்ணாண்டஸ்



விஸ்வ ஹிந்து பரிஷத்தும் ராம் ஜன்மபூமி நியாஸ் அமைப்பின் சன்யாசிகளும் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று இப்போது அறிவித்துள்ளார்களே?

அவர்கள் அப்படிச் சொல்லவில்லை. நீதிமன்றத்தால் தீர்கக் கூடிய விஷயம் அல்ல இது. நீதிமன்றத்தின் தீர்ப்பு என்பது ஏதாவது ஒரு பக்கத்துக்கு ஆகிவிடும். அப்போது மேலும் சண்டைதானே வளரும்? இது இரு பக்கத்தின் தரப்பையும் பார்க்க வேண்டிய விஷயம். இது முழுக்க நம்பிக்கைகள் சார்ந்த விஷயம். எனவே பேசித் தீர்த்தால் எல்லாம் சரியாகிவிடும் என்றுதான் சொல்கிறார்கள்.

'நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம்' என்று தீர்மானமாகச் சொல்லியிருக்கிறார்களே?

ஏற்றுக் கொள்ள முடியாது என்றால் என்ன அர்த்தம்? நீதிமன்றத்தால் தீர்மானம் செய்யமுடியாது என்று அர்த்தம். மற்ற விஷயங்களுக்கு நீதிமன்றம் போகலாம். இது நம்பிக்கை சார்ந்த பிரச்னை. இதற்கு நீதிமன்றம் போக முடியுமா? பேசித்தான் தீர்க்க முடியும் என்று சொல்கிறார்கள். நீதி மன்றமே வேண்டாம் என்று அவர்கள் சொல்லவில்லை.

• சிங்கால்



சென்றமுறை இந்த விஷயத்தில் நீங்கள் காட்டிய அக்கறையை மத்திய அரசு சரியாக மதிக்கவில்லை என்ற குறையை வெளிக் காட்டியிருந்தீர்கள்...

இல்லை. நல்ல அக்கறை காட்டினார்கள். நல்ல பலனும் கிடைத்தது. திருப்தியாகத் திரும்பிச் சென்றோம்.

உங்களால் இந்தப் பிரச்னையில் ஒரு சுமுகமான தீர்வு காண முடியும் என்று நம்புகிறீர்களா?

அவ்வளவு சுலபமாகத் தீர்வு காண முடியாது. ஆனாலும் தீர்வு காண முடியும் என்கிற நம்பிக்கை இருக்கிறது.

இந்தப் பிரச்னையில் உங்களுக்கேன் தனிப்பட்ட அக்கறை?

தனிப்பட்ட அக்கறை என்று எதுவும் கிடையாது. தேசத்துக்காக, கடவுளுக்காக, மதத்துக்காக நான் அக்கறை செலுத்துகிறேன்.

பொதுவாக மதகுருமார்கள் அரசியலிலிருந்து விலகி நிற்பதுதான் மரபு. ஆனால் நீங்கள் இப்படி வெளிப்படையாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறீர்களே?

நான் எப்போதும் அரசியல் ரீதியாக பேசவில்லையே? மதரீதியாகத்தானே பேசிக் கொண்டிருக்கிறேன். நான் என்ன காங்கிரஸ் கட்சியிலோ கம்யூனிஸ்ட் கட்சியிலோ சேர்ந்து அவர்களுக்கு வோட்டுப் போடுங்கள் என்றா கேட்டுக் கொண்டிருக்கிறேன்? அரசியல்வாதிகளிடம் நானா போய் பேசிக் கொண்டிருக்கிறேன்? எல்லாக் கட்சிக்காரர்களும் அவர்களாகத்தான் என்னிடம் வருகிறார்கள். நான் என்னுடைய எண்ணங்களை அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். அவர்கள் தங்களுடைய எண்ணங்களை என்னிடம் பரிமாறிக் கொள்கிறார்கள். இதில் அரசியல் எங்கிருந்து வந்தது?


ஆனால் நீங்கள் ஈடுபாடு காட்டிவரும் இந்தப் பிரச்னை அரசியல் ரீதியாக விஸ்வ ரூபம் எடுத்து வருகிறதே?

அரசியலில் இருந்து இதனைத் தூர விலக்கி வைக்கத்தான் பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால் இந்தப் பிரச்னை அரசியலில் இருந்து விலகினால்தான் உருப்படும். அரசியலாக இருக்கும் வரை தீர்வே காண முடியாது. அரசியல்வாதிகள் எல்லாம் வெகு தூரம் விலகி நின்றால்தான் ஒரு தீர்வு கண்டிப்பாகக் கிடைக்கும். இல்லையென்றால் குழப்பமும் சச்சரவுகளும்தான் மிஞ்சும்.

ஜயேந்திரர் நம்முடன் பேசிக் கொண்டிருக்கும்போதே விஸ்வ ஹிந்து பரிஷத் தலைவர் அசோக் சிங்கால் உள்ளே நுழைந்து ஜயேந்திரரை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து உட்கார, மீண்டும் உள்ளே பரபரப்பு. நம்முடன் இருந்த வேறு இரண்டு பத்திரிகையாளர்களோடு நாமும் அன்புடன் வெளியேற்றப்பட்டோம்.

"பல ஊழல் வழக்குகளில் மாட்டியுள்ள என்னை, அரசியலில் கத்துக்குட்டி என்று எதிர்க் கட்சித் தலைவர் கூறுவது கேலிக்குரிய விஷயமாகும்."

- சாயம் வெ. ராஜாராமன்



மூடியிருந்த கதவுக்கு வெளியே கேமராக்களுடன் மீடியாக்காரர்களின் முற்றுகை. அசோக் சிங்காலின் சந்திப்பு வெகு நேரம் நீண்டது. ஒரு வழியாக முகத்தில் சிரிப்பே இல்லாமல் வெளியே வந்த சிங்கால், ஜயேந்திரரைச் சந்தித்து முன்னர் விஸ்வ ஹிந்து பரிஷத், எழுத்து வடிவில் கொடுத்த உறுதிகள் அடங்கிய கடிதத்தை அரசாங்கத்திடம் இருந்து மீண்டும் பெற்றுத் தருமாறு தாம் கேட்டுக் கொண்டதாகக் கூறினார்.

"விஸ்வ ஹிந்து பரிஷத் முன்னர் எடுத்த நிலைப்பாட்டில் இருந்து ஏன் மாறுபடுகிறது?" என்று கேட்டபோது "எங்கள் முந்தைய கோரிக்கை மூன்று அம்சங்கள் அடங்கியது. நீதிமன்றத்தின் தீர்ப்பினை ஏற்றுக் கொள்வது, புனிதத் தூண்களின் பூஜையை அனுமதிப்பது மற்றும் ஜூன் 2ம் தேதிக்குள் சர்ச்சைக்குரிய நிலத்தை ராம் ஜன்மபூமி நியாஸிடம் ஒப்படைப்பது. இப்படி எந்தக் கோரிக்கையையும் அரசு நிறைவேற்றவில்லை. எனவேதான் நாங்கள் அரசுக்கு அளித்த உடன்படிக்கையை மீண்டும் திரும்பப் பெறக்கோரி ஜயேந்திரரைக் கேட்டுக் கொண்டோம்" என்றார்.

அசோக் சிங்கல் அந்த வளாகத்தை விட்டு வெளியேறிய மறு நிமிஷம் ஆரவாரம் ஏதுமின்றி ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ் ஜயேந்திரரைச் சந்திக்க மீண்டும் அந்த அறைக்குள் நுழைந்தார். குறுகிய நேரத்திலேயே வெளியே வந்த ஃபெர்னாண்டஸ் பத்திரிகையாளர்களைச் சந்திக்க மறுத்து தலைகுனிந்த வண்ணம் அவசரமாக வெளியேறினார்.

பத்திரிகையாளர்களின் வேண்டுகோளை ஏற்று ஜயேந்திரர் அவர்களைச் சந்தித்தார்.

ஃபெர்னாண்டஸ் வருகையைப் பற்றிக் கேட்டபோது, அதில் ஒரு விசேஷமும் இல்லை. ஜார்ஜின் மகனுக்குத் திருமணம் நிச்சயமாகியுள்ளது என்றும் அதற்காக ஆசி வாங்க வந்தார் என்றும் சொன்னார். அசோக் சிங்கல் முன்வைத்த கோரிக்கையைப் பற்றி கேட்டதற்கு, "விஸ்வ ஹிந்து பரிஷத் பதற்றத்திலும் ஏதோ வருத்தத்திலும்தான் முன்னர் கொடுத்த உடன்பாட்டைத் திரும்ப வாங்கித் தருமாறு கேட்கிறது. இப்பிரச்னையில் அவ்வமைப்பு முன்னர் எடுத்த முயற்சிகள் அவ்வளவாக பயன் தரவில்லை என்றாலும் வேறு பல ஏஜென்ஸிகள் மூலம் என்னுடைய முயற்சி தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது" என்றார். 'யார் அந்த ஏஜென்ஸிகள்?' என்பதைச் சொல்ல மறுத்துவிட்டார்.

டெல்லியிலிருந்து **ராகவன்தம்பி,**

அட்டை, படங்கள் : **யோகா**

- சீறுகிறார் இளங்கோவன்

"நான் பதவியேற்ற இந்த இரண்டு வருட காலமாக த.மா.கா, மீண்டும் காங்கிரஸுடன் இணைய வேண்டும் என்று முயன்று வந்தேன். அதற்கு இப்போது தான் பலன் கிடைத்திருக்கிறது. இந்தப் பெரிய திருப்பத்தை ஒப்பிடும்போது, நான் பதவியில் நீடிப்பது, இல்லாமல் இருப்பது என்பதெல்லாம் மிகச் சிறிய விஷயங்கள்" என்கிறார் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்.



இந்தப் பதவிக் காலத்தில் மன நிறைவு தந்த பணிகளைப் பற்றிச் சொல்லுங்கள்:

தொண்டர்கள் எப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். காங்கிரஸ் ஊழியர் கூட்டங்களில் வழக்கமாக கை கலப்புகள் நடக்கும்; கதர் சட்டைகள் கிழியும். ஆனால் நான் பங்கேற்ற ஊழியர் கூட்டங்களில் எந்தவிதமான வன்முறையும் நடக்கவில்லை. தொண்டர்கள் நூற்றுக்கு நூறு சதவிகிதம் தமிழகத்தில் காமராஜ் ஆட்சியை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தில் உறுதியாக இருக்கிறார்கள். என்னைப் பெருமைப்படுத்திய விஷயங்கள் இவை. விரல்விட்டு எண்ணக்கூடிய சில தலைவர்களின் செயல்பாடு இதற்கு மாறாக இருக்கிறது என்பது வருத்தமளிக்கும் ஒன்று. அடுத்ததாக காங்கிரஸை விட்டுப் பிரிந்து சென்ற குமரி அனந்தன், வாழப்பாடி, தஞ்சை ராமமூர்த்தி, பழ. கருப்பையா போன்றவர்கள் திரும்பியிருக்கிறார்கள். ப. சிதம்பரமும் காங்கிரஸுடன் மீண்டும் இணைவார். இதற்கு என் பதவிக்காலம் உதவியாக இருந்தது என்பது ஒரு மன நிறைவு.

த.மா.கா இணைப்பு பற்றிய பேச்சு வார்த்தைகளில் நீங்கள் ஓரங்கட்டப் பட்டதாகச் சொல்கிறார்களே!"

த.மா.கா தலைவர் வாசன், இணைப்பு பற்றிய பேச்சுவார்த்தையை நேரடியாக ரமேஷ் சென்னிதாலாவுடன் நடத்தியதில் எனக்கு மனச்சங்கடம் எதுவும் கிடையாது. ஏனென்றால் அதன் விவரங்கள் உடனுக்குடன் எனக்குத் தெரிவிக்கப்பட்டன. எந்த இடத்தில்? எப்போது? எப்படி? என்பதுதான் பேச்சுவார்த்தையின் மையக் கருத்தாக இருந்ததே தவிர, யார், யாருக்கு எந்த பொறுப்பு?

“நான் காகிதப் புலியா?”

என்ற வியாபார பரிவர்த்தனை நடைபெற வில்லை.

எந்தவிதமான அரசியல் நிலை எடுக்க வேண்டும் என்று தெளிவான வழிகாட்டுதல் இல்லாமல் இருப்பது வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைதானே!

“கடந்த இரண்டு மாத காலமாக, தில்லி தலைவர்கள், தமிழகத்தில் காங்கிரஸ் இழந்த பெருமையை மீட்கும் வகையில் செயல்பட வழி காட்டத் துவங்கியிருக்கிறார்கள். குறிப்பாக வர்த்தகர் காங்கிரஸ் நிகழ்ச்சிக்குச் சோனியாகாந்தி அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் “சுயநலவாதிகள் கையில் தமிழகம் சிக்கிக்கொண்டுவிட்டது” என்று அ.தி.மு.க ஆட்சியைப் பற்றிச் சொல்லியுள்ளார். தமிழக காங்கிரஸ் தலைவர்கள், யாரை நோக்கி அம்புகளை வீச வேண்டும் என்பதை உணர்த்தும் நடவடிக்கைதானே இது. சில பேருக்குத் தனிப்பட்ட கருத்துக்கள் இருக்கலாம். அது எடுபடாது.

ஆனால் தேர்தல் வந்தால் சில சீட்டுகளுக்காக ஏதாவது ஒரு கழகத்தோடு ஒட்டிக்கொள்கிறீர்களே?

திராவிட இயக்கங்களுக்கு மாற்று இயக்கமாக காங்கிரஸைக் கொண்டு வருவதுதான் எங்கள் வேலைத் திட்டத்தில் முதலாவதாக உள்ள அம்சம்.

இந்த இரண்டு வருட காலத்தில் புண்படுத்திய மற்றும் சந்தோஷப்படுத்திய விஷயம்...?

ஜெயலலிதாவின் தூண்டுதல் காரணமாக அ.தி.மு.க தலைவர்கள் என் மீது அறிக்கைப் போர் தொடுத்ததைச் சொல்லலாம். குறிப்பாக என் தாயே என்னைத் தாக்கி அறிக்கை விட்டார்... உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க, தி.மு.க கட்சிகளுக்கு அடுத்தபடியாக காங்கிரஸ் வோட்டு வாங்கியது மகிழ்ச்சியளித்த விஷயம். அதிலும் சென்னை மேயர் தேர்தலில் ஒரு லட்சத்திற்கும் மேல் காங்கிரஸ் வோட்டுக்கள் வாங்கியது, காங்கிரஸ் தொண்டர்களைக் குஷியில் ஆழ்த்தியது.

பத்திரிகை, டெலிவிஷன் ஆகியவற்றில் பேட்டி, அறிக்கை தவிர இளங்கோவன் உருப்படியாக எதுவும் செய்யவில்லை. அவர் ஒரு பேப்பர் டைகர் என்று குற்றம் சாட்டப்படுகிறதே?

“என் தாயே என்னைத் தாக்கி அறிக்கை விட்டார்...”



“காங்கிரஸ் தலைவர்களாக இருந்தவர்களில் என் அளவுக்கு மக்களைச் சந்தித்தவர்கள் யாரும் கிடையாது. ஆங்காங்கே போகும்போது பத்திரிகையாளர்கள் நாட்டு நடப்பை பற்றிக் கேட்டால் பதில் சொல்கிறேன். அவ்வளவுதான். விளம்பரம் தேடி நான் ஓடுவது கிடையாது; மற்றபடி நிர்வாகத்தைப் பொறுத்தவரை, 95 சதவீத மாவட்டத் தலைவர்கள் திறமையானவர்களே. மாநில அளவில் எங்கள் தலைமை நிலையத்தில் நிர்வாகிகள் இல்லாமல் இருந்தது ஒரு சங்கடமான நிலைதான். ஆகஸ்ட் மாதத்தில் எல்லாம் சரியாகிவிடும்.

சந்திப்பு: ப்ரியன்
படங்கள்: ராஜன்

கல்கி சந்தாதாரருக்குப் பரிசு மழை!


★ ஓராண்டுச் சந்தா ரூ.330/- செலுத்துவோருக்கு (அயல்நாடு ரூ.2000 ஏர் மெயில்) இரு பரிசுகள் :

- ரூ.70 பெறுமானமுள்ள கல்கி வைர விழா மலர் 2002
- மற்றும் அதன் ஓர் அங்கமாக "சுபம்-சிவம்" - எம்.எஸ். அவர்களின் இன் குரலில் அற்புதமான பாடல்கள் அடங்கிய ஆடியோ கேஸட்!

★ இரண்டு ஆண்டுச் சந்தா ரூ.660/- செலுத்துவோருக்கு (அயல்நாடு ரூ.4000 ஏர் மெயில்) மூன்று பரிசுகள் :

- ரூ.70 பெறுமானமுள்ள கல்கி தீபாவளி மலர் 2002
- ரூ.70 பெருமானமுள்ள கல்கி வைரவிழா மலர் 2002
- மற்றும் அதன் ஓர் அங்கமாக எம்.எஸ். அவர்களின் இன் குரலில் அற்புதமான பாடல்கள் அடங்கிய ஆடியோ கேஸட்

★ குறிப்பிட்ட சில பிரதிகள் மட்டுமே சந்தாதாரர்களுக்காக இவ்வாறு ஒதுக்கப்படுகின்றன. எனவே மலர் ஸ்டாக் உள்ள வரைதான், இந்தத் திட்டத்தின்படி சந்தா தொகைகளை ஏற்க முடியும்.



★ முந்துங்கள். கடைசி தேதி ஜூலை 22, 2002.

★ ஏற்கெனவே சந்தாதாரராக உள்ளவர்களும் உடனடியாக சந்தா தொகை செலுத்தி இத்திட்டத்தால் பயன் பெறலாம். அவர்கள் சந்தா முடிவு தேதியிலிருந்து புதுப்பிக்கப்படும்.

★ DD அல்லது MO அனுப்பவும்.

★ வெளியூர் Cheques ஏற்கப்படமாட்டா.

★ ஏற்கெனவே சந்தாதாரராக உள்ளவர்கள் சந்தா எண் குறிப்பிட்டு எழுதவும்.

★ பின்கோடு உள்பட முழு விலாசம் தெளிவாக எழுதவும்.

★ 'கல்கி சந்தாதாரர் பரிசுத் திட்டம் 2002' என்று குறிப்பிடவும்.


★ DD, MO அல்லது Cheque (சென்னை மட்டும்) KALKI என்ற பெயருக்கு அனுப்பவும்.

★ அயல்நாட்டு சந்தாதாரருக்கு மலர் மற்றும் கேஸட் இந்திய விலாசத்துக்கு மட்டுமே அனுப்ப இயலும்.

★ நண்பர்கள், உறவினர்களுக்குப் பரிசாகவும் நீங்கள் சந்தா கட்டலாம். மலர், கேஸட் ஆகியன உங்கள் நண்பர், உறவினருக்கே அனுப்பப்படும்.

★ சந்தா தொகை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர்,
கல்கி,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



2002 ஜூலை 7
சித்ரபானு ஆனி 23
மலர் : 60
இதழ் : 49

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ஜெ. அறிக்கைக்கு ஜே!


தஞ்சை விவசாயிகளுக்குப் பல கோடி பெறுமானமுள்ள நிவாரணத் திட்டங்களை அறிவித்திருக்கிறார் ஜெயலலிதா.

"இவை ஏற்கெனவே பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டவைதாம்; புதிதாக ஒன்றுமில்லை; போதிய அளவிலும் இல்லை" என்பது எதிர்க்கட்சிகளின் வாதம். நிவாரணப் பணி குறித்த அரசியல் எப்படியாயினும் கர்நாடக அரசை நோக்கி முதல்வர் விடுத்திருக்கும் திறந்த அறிக்கை, அனைவராலும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.

தமிழக விவசாயிகளின் உரிமைகளை மதியாமல் கர்நாடக அரசு யதேச்சாதிகாரமாக நடந்துகொள்கிறது என்று கூறியிருக்கும் முதல்வர், தமிழகத்துக்கு அளிக்கும் அளவுக்குக் காவிரியில் தண்ணீர் இல்லாமல் போனதற்கான காரணத்தையும் பிட்டு வைத்துவிட்டார்.

"இதுநாள் வரை தமிழகத்தில்தான் இரண்டு போக சாகுபடி நடைபெற்று வந்தது; கர்நாடக மாநிலத்தில் ஒரு போகம்தான் விவசாயம். ஆனால், சமீப ஆண்டுகளில் கர்நாடகா விவசாயிகள் இரண்டாம் போகம் சாகுபடியைத் தொடங்கிவிட்டனர். அம்மாநிலத்தில் காவிரி பாசனத்தின் கீழ் வருகின்ற நிலப்பரப்பின் அளவும் அதிகரித்துவிட்டது. இதனால்தான் தமிழகத்துக்குத் தண்ணீர் கேட்டால் கர்நாடகம் எப்போதும் 'இல்லை' பாட்டே பாடுகிறது" என்கிறார் ஜெயலலிதா.

தமிழக முதல்வரின் இந்த அறிக்கையில் நூற்றுக்கு நூறு உண்மை இருப்பதுடன் அவரது



வாதங்களில் துல்லியமான நியாயமும் இருக்கிறது:

"காவிரி நதி ஆணையம் என்பதாக ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறதேயொழிய, மத்திய அரசு அதன் செயல்பாட்டைக் கண்காணிக்கவில்லை. ஆணையம் செயல்பாடின்றி உறங்கிக் கொண்டிருக்கிறது. கர்நாடக அரசோ ஆணையம் தப்பித் தவறி உத்தரவு பிறப்பிக்கும் காலத்திலும் அதை அலட்சியமே செய்கிறது; உச்சநீதிமன்றத் தீர்ப்பைக்கூட அம்மாநில அரசு மதிப்பதில்லை. எனவே ஆணையத்தை தமிழகம் இனி புறக்கணிக்கும்" என்கிறார் ஜெயலலிதா.

வழக்கம்போல் கர்நாடக முதல்வர், 'தண்ணீர் இருந்தால்தானே கொடுப்போம். காவிரியில் நீர் வரவைக் கண்காணிக்க குழு நியமித்துள்ளோம்' என்றெல்லாம் நொண்டிச் சமாதானம் கூறியிருப்பதோடு சரி. பிரதமரே கேட்டுக் கொண்ட பிறகும் அவர் மசியவில்லை.


தமிழகத்தில் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டு விவசாயிகளின் பாடு படுதிண்டாட்டமாகியிருக்கிறது.

"தென்மேற்குப் பருவமழை சரியாகப் பெய்யாததால் நீர்வரத்து இல்லை; அதனால் தண்ணீர் திறந்துவிட இயலவில்லை" என்ற வாதத்தையும் தவிடுபொடியாக்கியிருக்கிறார் தமிழக முதல்வர்:

"கர்நாடக அரசு காவிரியில் புதுப் புது அணைகளைக் கட்டி தண்ணீரைத் தேக்கிக் கொண்டுவிட்டால் தமிழகத்துக்கு எவ்வாறு தண்ணீர் வரும்? எத்தனை மழை பெய்தாலும் ஒவ்வொரு அணையாக நிரம்பிய பின் மிச்சமாகும் நீர்தானே தஞ்சை டெல்டா பகுதியை அடையும். அந்தச் சொற்ப நீரைக் கொண்டு தமிழக விவசாயிகள் என்ன செய்வார்கள்?" என்று கேட்டிருக்கிறார்.

கர்நாடக விவசாயிகளுக்கு மட்டும் காவிரி நீரை உபயோகிக்க உரிமை இல்லையா? விவசாய முறைகளை மாற்றிக் கொள்ள உரிமை இல்லையா? என்று கேட்கலாம். அந்த உரிமைக்குத் தமிழக விவசாயிகளின் அனுபவ பாத்தியதையை விலையாகத் தர முடியாது.

நதிக்கரைகளில் வாழ்ந்து அந்நீரின் பயனை அனுபவித்து வந்தவர்களுக்கு ஆயக்கட்டு உரிமை (அனுபவ பாத்தியதை) என்பதாக ஒன்று உண்டு. இது உலகெங்கிலும் ஏற்கப்பட்டு மதிக்கப்படுகிற விஷயம்.



இதற்கான உள்நாட்டு உதாரணத்தை நர்மதை அணை விவகாரத்தில் காண்கிறோம்.

நர்மதையில் அணை கட்டி மின் உற்பத்தி செய்யும் திட்டத்தைப் பல விதங்களிலும் கடுமையாக எதிர்க்கிறார் மேதா பட்கர். அணை அமைக்கும் முயற்சி காரணமாக பல்லாயிரக்கணக்கான கிராம மக்கள் வெளியேற்றப்பட வேண்டி வரும்; அவர்களுடைய வாழ்வும் பணியும் பாதிக்கப்படும் என்று சுட்டிக்காட்டுகிறார்.

அவ்வாறு வெளியேற்றப்படுகிற மக்களுக்கு மாற்று நிலம் அல்லது நஷ்ட ஈடு வழங்கப்படும் என்று உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த மாற்று ஏற்பாடுகள் திருப்திகரமாக இல்லை என்பதுடன் பல தலைமுறைகளாக வாழ்ந்து அனுபவித்த இடத்திலிருந்து எளிய மக்கள் வெளியேற்றப்படுவது மனித உரிமை மீறல் என்று வாதிடுகின்றனர் நர்மதை அணை எதிர்ப்பாளர்கள்.

குஜராத்திலாவது மாற்று ஏற்பாடு குறித்து பேச்சு இருக்கிறது. தமிழக விவசாயிகளின் அனுபவ பாத்தியதை பறிக்கப்படுகிறபோது அதற்கு ஈடு செய்ய, கர்நாடகா அரசா முன்வரப் போகிறது? அந்தச் செலவும் சுமையும் தமிழகத்தினுடையதுதான்!

கர்நாடக அரசைத் தற்போது பகைத்துக் கொண்டால் கொஞ்சம் நஞ்சம் உடனடியாகக் கிடைக்கக்கூடிய நீரும் இல்லாமல் போய்விடப் போகிறதே என்ற தஞ்சை விவசாயியின் பயம் நியாயமானதே. ஆனால், பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதும் அதைவிட முக்கியமானது.

இரு மாநிலங்களிலும் அடுத்தடுத்து பதவியேற்ற பல்வேறு அரசுகளும் காவிரிப் பிரச்னையில் தமிழகம் நியாயம் பெற உதவவில்லை. மத்திய அரசும் கர்நாடக அரசை வற்புறுத்தாமல் அரசியல் ஆதாய நோக்கிலேயே செயல்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் உச்சநீதிமன்றத்திடமாவது நிரந்தரமாக தமிழக விவசாயிக்கு நியாயம் கிடைக்காதா என்ற நோக்கில் தமிழக முதல்வர் குரல் கொடுக்கும்போது, கட்சிக் கண்ணோட்டம் கடந்து தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளும் அவரை ஆதரிக்க வேண்டும். குறிப்பாக, மைய அரசின் கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகள் இப் பிரச்னையை முனைப்புடன் எதிர்கொள்ள தோள் கொடுக்க வேண்டும். கட்சி நலன்களைவிட தமிழகத்தின் நலன் பெரிது. ○



ஓவியம் : மணியம்
(கல்கி தீபாவளி மலர் 1973)

கல்கி
வைரவிழா
மலர்

அன்று முதல்
இன்று வரை
உங்கள்
கல்கி
கடந்து வந்த
பாதையில்
மீண்டும்
நடந்து மகிழுங்கள்



அன்பளிப்பாக

சுபம்–சிவம்

எம்.எஸ்.குரலில்
கல்கி சதாசிவம்
நூற்றாண்டு அஞ்சலி
ஆடியோ காஸெட்
(தயாரிப்பு எச்.எம்.வி. -
ஆர்.பி.ஜி.)

விலை ரூ.70 :
உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு
செய்யுங்கள்
அல்லது
தபால் / கூரியரில் பெற ரூ.100
சேர்த்து அனுப்பவும்.

Yet another Show Room Opening

NARAYANA PEARLS NATURAL PEARLS GEMS & JEWELS SINCE : 1920

NARAYANA PEARLS
GEMS & JEWELS

Shree
Sakthi Plaza
Shop No. 7, 8, 9, Basement
No. 70, Pondy Bazaar,
Next to Maya Plaza,
T. Nagar,
Chennai - 600 017.
Ph : 8150144

On 04.07.2002 at 10.56 a.m.

NARAYANA PEARLS GEMS & JEWELS™

Surprise Gift for Every purchase


Sudha's Paradise,
No. 62, Pondy Bazzar,
T. Nagar,
Chennai - 600 017.
Opp. Saravana Bhavan
Ph : 4322644, 4331060

10 % to 20 % Discount

All Major Credit Cards Accepted



முற்போக்கு எழுத்தாளர் சங்க இலக்கிய ஆர்வலர்களும், எழுத்தாளர்களும், த.மு.எ.ச. மாவட்ட நிர்வாகி தேனி வசந்தன் தலைமையில் மாலை ஆறு மணிக்கெல்லாம் இங்கே கூடி விடுவார்கள். இலக்கியம், அரசியல் என்று இங்கே விவாதிக்கப்படாத விஷயங்களே இருக்காது. விவாதம் இரவு பத்துமணி வரை



• எஸ். ராமகிருஷ்ணன்



• மேலாண்மை பொன்னுசாமி



• விஜயன்

'பாபா' படத்தின் திரைக்கதை சிறப்பாக அமைய, கதை விவாதத்தில் இவர் அவசியம் இருக்க வேண்டும் என்று விரும்பி, விருதுநகருக்குத் தமது காரையே அனுப்பி வைத்தார் ரஜினி. அட! யார் அந்த சூப்பர் பவர் ஆசாமி என்பது தானே உங்கள் கேள்வி. புரிகிற மாதிரி(!) மேஜிகல் ரியலிசக் கதைகள் எழுதிவரும் எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன்தான் அவர். பத்திரிகையாளர், நவீன தமிழ்ச் சிறுகதையில் தனக்கென ஓர் இடம் தேடுபவர் என்று இவரை, இலக்கிய உலகில் எல்லோரும் அறிவார்கள். தற்போது கவிதாலயா பட நிறுவனம் தயாரித்து வரும் ஆல்பம் படத்திற்கு வசனம் எழுதி திரையுலகிலும் கால் வைத்திருக்கும் எஸ். ராமகிருஷ்ணன், உருவான பட்டறை ஒரு காப்பிக்கடை!

விருதுநகரின் வடக்கு ரத வீதியில் இருக்கிறது சக்தி காப்பி பார். தமிழ்நாடு



கலை இரவு; பாபா உறவு!

- காப்பிகடை இலக்கியம்!



• எஸ்.ஏ. பெருமாள்



• மா. மணிமாறன்



• தேனி வசந்தன்

களைக்கட்டும். வெளியூரிலிருந்து விருது நகர் இலக்கியவாதிகளைத் தேடி வருகிறவர்களுக்கு இந்த காபி பார்தான் வேடந்தாங்கல். ஒருநாள் இலக்கிய சந்திப்பு இல்லையென்றால் கடை உரிமையாளர் விஜயனுக்குக் கல்லாப்பெட்டி கலகலத்துப் போனது மாதிரி முகத்தில் சோகம் முகாம் போட்டு விடும்! காரணம், நிலத்தடி நீரை உறிஞ்சும் வேலிக்கருவை மரங்களுக்கு எதிராகப் போராடி வரும் இவர், இங்கே இலக்கியம் வளர்வதில் தமக்கும் கொஞ்சம் பங்குண்டு என சந்தோஷப்படும் ரகம். இந்த காப்பிக்கடை பொட்டல்தான், எஸ். ராமகிருஷ்ணனைக் கண்டுபிடித்துக் கொடுத்த இலக்கிய பட்டறை. எஸ். ராமகிருஷ்ணனை விட்டால் இங்கே வேறு யாரும் இல்லையா?

ஏன் இல்லை? உயர்நிலைப்பள்ளிக்கே போக முடியாத மேலாண்மைப் பொன்னுசாமியின் சிறுகதைகள், இன்று தமிழகத்தின் எல்லா பல்கலைக்கழகங்களிலும் பாடமாக வைக்கப்பட்டிருப்பதை எப்படி மறப்பது? எழுபதுகளில் எழுதத் தொடங்கிய இவருக்கு விருது நகரின் அருகாமையில் உள்ள மேலாண்மறைக்காடு கிராமம் சொந்த ஊர். சின்னஞ் சிறு பலசரக்குக் கடையை ஜீவனோபாயத்திற்காக நடத்தி வந்தாலும், பாமரனுக்கும் புரிகிற எளிய கதைகளால் யதார்த்த சிறுகதை இலக்கியம் தலை நிமிர்ந்து நிற்கிறது.

பாரதி பா. கிருஷ்ணகுமார் பேசுகிறார் என்றால், பட்டிக்காட்டிலிருந்தும் எட்டு வைத்து கூடிவிடும் கூட்டம். விருதுநகர் அருகேயுள்ள கருமாத்தூரில், த.மு.எ.ச. நடத்திய கலை இலக்கிய இரவில், கிருஷ்ணகுமாரின் அபாரப் பேச்சாற்றலைக் கண்டு இயக்குனர் பாரதிராஜா, கிருஷ்ணகுமாரைத் தமது இணை இயக்குனராக ஆக்கிக் கொண்டார்!


மா. மணிமாறன். சிறுகதையில் ஆர்வம் என்றாலும் தென்மாவட்டங்களில் வீதி நாடகங்களை விழிப்புணர்வு ஆயுதமாக்கிய பள்ளி ஆசிரியர். பிரளயன் எழுதிய, 'கடையாணி' வீதி நாடகம் இவரது குழுவால் ஆயிரத்து ஐந்நூறு முறை நிகழ்த்தப்பட்டது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். 'பால காண்டம்' என்ற சிறுகதைத் தொகுப்பு மூலம் கவனத்திற்கு உள்ளாகியிருக்கும் லட்சுமணபெருமாளுக்கு விருதுநகரையடுத்த சாத்தூர். இன்னும் முகம் காட்டப் போகிற படைப்பாளிகளை வளர்த்தெடுக்கும், விருதுநகர் த.மு.எ.சவின் பின்னணியில் தேனி வசந்தனும், எஸ்.ஏ. பெருமாளும் ஆர்வமாய் உழைக்கிறார்கள்.



• பாரதி கிருஷ்ணகுமார்

இவ்வொரு ஆண்டும் ஜூன் முதல் தேதியன்று விடிய விடிய இவர்கள் நடத்தும் கலை, இலக்கிய இரவுக்கு, ஆயிரக் கணக்கில் நன்கொடைகளை அள்ளித்தருகிறார்கள் விருதுநகர் வியாபாரப் பெருமக்கள். லேட்டஸ்ட் தகவல், இந்த காப்பி கடை இலக்கியப் பட்டறையிலிருந்து வந்திருக்கும் வசந்த பாலன் என்ற இளைஞர் 'ஆல்பம்' படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார். ○

காபியோடு இலக்கியமும் பருகப்படும், சக்தி காபி பார்



ஊரின் நடுவே இருக்கிறது தெப்பக்குளம், ஆழம், அகலம், கட்டுமானம் எல்லாவற்றிலுமே கலையழகோடு காட்சி தரும் அதன் நடுவே ஓர் அழகிய நீராழி மண்டபம். எந்த மாதம் தெப்பத் திருவிழா? என்று மட்டும் கேட்டுவிடாதீர்கள். 1862ல் ஊர் மக்கள் இணைந்து உருவாக்கிய இந்தக் குளத்தில், இதுவரை ஒருமுறைகூட, அப்படியொரு உற்சவம் நடந்ததில்லை. பிறகெதற்கு இந்தத் தெப்பக்குளம்?


சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகளாக வாணிபத்தில் சிறந்து விளங்கினாலும், ஆரம்ப காலந்தொட்டே குடிநீருக்காக விருதுநகர் வாசிகள் பட்ட கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. 'விருதுநகர்காரனுக்குப் பெண் கொடுக்காதே' என்று சொல்கிற அளவிற்குத் தண்ணீர் பஞ்சம் தலைவிரித்து ஆடிய ஊர். இந்தக் களங்கத்தை எப்படித் துடைப்பது...? பார்த்தார்கள். ஊரின் நடுவே குடிதண்ணீருக்கென்றே ஏன் ஒரு குளம் வெட்டக்கூடாது? அதுவும் ஒரு மெகா சைஸ் தெப்பக்குளம்! ஊர் மக்களின் நன்கொடை ஒரு சில தினங்களிலேயே குவிய, அந்தப் பணம் முழுவதும் அன்று விருதுநகரில் தாசில்தாராக இருந்த சரவண முத்துப்பிள்ளையிடம் கொடுக்கப்பட்டது. அவர், அதை கலெக்டரிடம் கொடுக்க, விருதுநகரின் மத்தியில் ஒரு குட்டிக் கடலை கொட்டி வைத்தது போல இருபத்தோரு அடி ஆழமும், முந்நூற்று இருபத்து மூன்று அடி நீளமும், இருநூற்று தொண்ணூற்று நான்கு அடி அகலமும் கொண்டு குடிநீருக்கென்றே குளம் உருவாக்கப்பட்டது.

தெப்பக்குளம் ரெடி! ஆனால் தண்ணீருக்கு எங்கே போவது?

மழைநீர் அறுவடை என்ற சொல்லாட்சியையே அறியாத அன்றைய விருதுநகர் மக்கள், அதற்கும் ஓர் அற்புத வழியை ஏற்படுத்தினார்கள். விருதுநகரில் இருந்து ஏழு கிலோமீட்டர்

• மாட்டு மடை






இப்படியும் ஒரு தெப்பக்குளம்!

தொலைவில் உள்ள 'பேராலி' என்ற மலைப்பாங்கான கிராமத்தில் பெய்யும் மழையை, சிறு சிறு மண் கரைகள் அமைத்து மடக்கினார்கள். அந்த மழை நீரை அங்கேயே தேக்கிவிடாமல் 'வேலாயுத மடை' என்ற நீர் வழிப் பாதையின் வழியே விருதுநகரின் மெயின் பஜாருக்கு அழைத்து வந்து, பூமிக்குள் அமைக்கப்பட்ட பாதைகள் வழி மாட்டு வாய் போன்ற (மாட்டு மடை) நீர்ப் பாதை மூலம், கடைசி சொட்டு தண்ணீரும் தெப்பக்குளத்தில், விழும்படி செய்தார்கள். அன்று மாதம் மும்மாறி பெய்த மழையால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை விருதுநகரின் தாகத்தைத் தீர்க்கிற அட்சய பாத்திரமாய் இருந்தது குளம்.

பருவ மழை பொய்க்கத் தொடங்கிய பிறகு, விருதுநகரையொட்டி ஓடும் கவுசிகா மாநதி தண்ணீரை (இன்று இந்த நதி விருதுநகரின் கூவமாகி விட்டது பெரிய சோகம்!) மழைக்காலத்தில் தெப்பக்குளத்திற்கு பம்ப் செய்யும் திட்டமும் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பே நகராட்சியால் நிறைவேற்றப்பட்டது. ஆனால் கடந்த பத்து வருடங்களில் தெப்பக்குளம், எண்ணி இரண்டே முறைதான் நிறைந்தது. அப்போது ஊரே திரண்டு வந்து வேடிக்கை பார்த்தது. தெப்பக்குளத்தில்



• சாரி சாரியாக பி.வி.சி. பந்தம்



• நிறையப் போகும் தெப்பக்குளம்

ஐந்தடியாவது தண்ணீர் நின்றால்தான், குளத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருக்கும் ஆழ்க்குழாய்க் கிணறுகளில் தண்ணீர் இறைத்து தெப்பத்தைச் சுற்றியுள்ள பதினைந்து வார்டுகளின் தாகத்தைத் தணிக்க முடிந்தது. இன்று அந்த ஐந்தடி தண்ணீருக்கும் ஆபத்து வந்துவிட, தெப்பக்குளத்திற்கான தண்ணீர் ஆதாரத்திற்கு ஏதேனும் செய்தே ஆக வேண்டும் என்ற தொண்டை வரளும் நெருக்கடி.

இந்த நேரத்தில் விருதுநகரில் நடைபெற்ற ரோட்டரி மாநாட்டில் ஒரு மாதிரித் திட்டத்தை அறிவித்தபோது முதலில் எல்லோரும் 'கொல்'லென்று கூட்டணி அமைத்துச் சிரித்தார்கள்.

இன்று.... இந்திய தேசமே தனது புருவத்தைக் கேள்விக் குறியாக வளைத்து இதை எப்படிச் சாத்தியப்படுத்தினார்கள்? என்று வியப்பாய்ப் பார்க்கிறது. அப்படி என்ன செய்து விட்டார்கள் விருதுநகர்க்காரர்கள்...?



• சொக்கர்



• பாலகிருஷ்ணசாமி



• அமுதா தர்மராஜன்

தெப்பக்குளத்தைச் சுற்றி சுமார் ஒன்றரை இலட்சம் சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள கடைகளை, பி.வி.சி குழாய்கள் மூலம் இணைத்து, அந்தக் கடைகளின் மேற்பரப்பில் (மொட்டை மாடி) பெய்யும் மழை நீரைத் தெப்பக்குளத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பதுதான் அந்தத் திட்டம்.


''இந்தத் திட்டம் முதலில் பலரின் கிண்டலுக்கும் கேலிக்கும் ஆளானது. ஆனால் முதல் கட்டமாக ஆறாயிரம் சதுரடியில் குழாய்கள் பதித்து இணைக்கப்பட்டபோது, அரை மணி நேர மழையில் இணைப்புக்குழாய்கள் மூலம் கைகோத்தபடி அருவியாய் தெப்பக்குளத்திற்குள் மழைநீர் சீறி விழுந்தது. ஊரே மூக்கின் மேல்விரல் வைத்தது'' என்கிறார் மழைநீர் சேமிப்பு சங்கத்தின் ப்ரவலரான எஸ். பால கிருஷ்ண சாமி.

''தற்போது இரண்டாவது கட்டமாக இருபத்தைந்தாயிரம் சதுர அடிகளை இணைத்து விட்டார்கள். மூன்றாவது கட்டப்பணி நடக்கிறது. இப்படி ஒன்றரை லட்சம் சதுர அடிகள் இணைக்கப்படும்போது இந்த ஆண்டு இறுதிக்குள் ஒரே ஒரு மணி நேர மழைக்கு விருதுநகர் தெப்பக்குளம் நிறையப் போகிறது'' என்று மகிழ்ச்சிப் பொங்கச் சொல்கிறார், இந்தத் திட்டத்திற்கு சிமெண்ட் குழாய்கள் உள்ளிட்ட பல்வேறு உதவிகளை வழங்கி வரும் நகர்மன்றத் தலைவி அமுதா தர்மராஜன்!

இலட்சக்கணக்கில் செலவாகும் இந்தத் திட்டத்திற்கான நிதியைத் தெப்பக்குளத்தைச் சுற்றியுள்ள கடைகளின் உரிமையாளர்களே வாரி வழங்கி வருகிறார்கள். பற்றாக்குறையை விருதுநகர் இந்து நாடார்கள் தேவஸ்தானமும், விருதுநகர் பலசரக்குக் கடை மகமையும், ரோட்டரி சங்கமும் கொடுக்கின்றன. இந்த முன்மாதிரி திட்டத்தின் மூளையாக இருந்து செயல்படுபவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரான சொக்கர்.

''முதலில் நாம் செயலில் காண்பித்து விட்டு பிறகு ஊருக்கு உபதேசம் செய்ய வேண்டும்'' என்று சொல்லும் சொக்கர் தனது வீட்டிலிருந்து மழை நீர் அறுவடையைத் தொடங்கியிருக்கிறார். விருதுநகர் மழைநீர் சேமிப்பு சங்கத்திற்கு இவர்தான் தலைவர். இவரோடு டி.கே.எஸ்.பி. சங்கர பாண்டியன், மாவட்ட ஆட்சியர் கோபால் என்று தன்னலமற்ற கூட்டணி உழைத்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் முதல்முறையாக யாருமே எண்ணிப் பார்க்க முடியாத இந்த அதிசயம், காமராஜர் நூற்றாண்டில் தேசத்திற்கான தலைசிறந்த அர்ப்பணம்!







• தேசபந்து மைதானம்

‘சென்னை ராஜதானி’ என்றும் ‘மெட்ராஸ் ஸ்டேட்’ என்றும் அறியப்பட்ட தமிழகத்திற்குத் ‘தமிழ்நாடு’ என்று பெயரிட்டு அழைக்க வேண்டும் என்ற கோரிக்கையை, கிட்டதட்ட ஐம்பது ஆண்டுகளுக்கு (1958) முன்பு உறுதியோடு முன் வைத்து, ஐம்பது நாள் உண்ணா விரதம் இருந்து உயிர் துறந்த ஒப்பற்ற தியாகி சங்கரலிங்க நாடார். அவரை நேரில் பார்த்தவர், அவருக்குக் கொஞ்சம் பரிச்சயமானவர் எண்பத்து நான்கு வயது சீனிவாசன்.

“அவர் மாதிரி ஓர் உறுதியான மனுசனை இனி பார்க்க முடியாது” என்றபடி தமது பழைய நினைவுகளை உயிர்ப்போடு சொல்லத் தொடங்கினார் சீனிவாசன்.

விருது நகரில் முன்பு தலித் மக்கள் அதிகம் வசித்து வந்த காந்திபுரம் தெருவில் நான் டீ கடை நடத்தி வந்தேன். காலை ஐந்து மணி தொடங்கி, இரவு ஒன்பது மணி வரை கடை. அப்போது பிளவு படாத கம்யூனிஸ்ட் கட்சியில் நான் விருதுநகர்

• சங்கரலிங்கனார்



விருதுநகர் மறந்த மாமனிதர்!

தோழர் பி. சீனிவாசனின் 'லைவ்' நினைவுகள்!

செயலாளர். கட்சி அலுவலகம் என்று எதுவும் கிடையாது. டீ கடைதான் எல்லாம். காமராஜர் முதல்வராகப் பொறுப்பு வகித்து வந்த நேரம். ஜனார்த்தனம் என்ற மில்தொழிலாளி எங்களிடம் வந்தார். "தமிழ்நாடு என்று பெயர் சூட்டக்கோரி, சூளைக்கரையில் தனியொரு மனிதனாக ஒரு காங்கிரஸ் தொண்டர் சாகும் வரை உண்ணாவிரதம் தொடங்கி விட்டார். அவரது பத்து அம்சக் கோரிக்கைகள் ஆச்சர்யமும், துணிச்சலும் மிக்கதாக இருக்கிறது. ஆனால் சாலையில் செல்லும் பலர் அவரைக் கிண்டலும் கேலியும் செய்து விட்டுப் போகிறார்கள்'' என்று வருந்தினார்.

உடனே விருதுநகர் கம்யூனிஸ்ட் கட்சியில் அன்று பிரபல தலைவர்களாக இருந்த உலகநாதன், பரிவேக் மாரியப்பா, வீராசாமி போன்ற தோழர்கள் விரைந்து சென்று சங்கரலிங்கனாரை மூன்றாம் நாள் உண்ணாவிரதத்தில் சந்தித்தார்கள். எழுதிய துணி பேனரோடு, பந்தல் எதுவுமின்றி வெட்டவெளியில் தனது வீட்டருகே உண்ணாவிரதம் இருந்தவரிடம் பேசினார்கள். 'உங்கள் கோரிக்கைகள் நியாயமானவை, ஆனால் நீங்கள் உண்ணாவிரதம் இருப்பது ஊருக்குத் தெரிய வேண்டுமானால், நகரின் மையப்பகுதியில் மக்கள் கூடும் இடமான தேசபந்து மைதானத்திற்கு வந்து உண்ணாவிரதம் இருங்கள்' என்று கேட்டுக் கொண்டார்கள். சூளைக்கரை என்பது விருதுநகர், சாத்தூர் சாலையில் அன்று குடிசைகளும், சிறுசிறு வீடுகளும் இருந்த மக்கள் நெருக்கமற்ற பகுதி. தொடக்கத்தில் பிடிவாதமாக மறுத்தாலும், பிறகு ஒப்பு கொள்ளவே, இரவோடு இரவாக தேசபந்து மைதானத்தில், சுதந்திரதின நினைவு ஸ்தூபியை ஒட்டி கிழக்குப் பார்த்தபடி சிற்றுப் பந்தல் போடப்பட்டுக் கோரிக்கை பேனரும் மாட்டப்பட, மறுநாள் ஏழரை மணிக்கெல்லாம் சங்கரலிங்கனார் அங்கே இடம் மாறினார். தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்பதுதான் பிரதான கோரிக்கை. அதுதவிர பாராளுமன்ற அவைகளில் உறுப்பினர்கள் அவரவர் தாய்மொழியிலேயே பேச அனுமதிக்க வேண்டும், கல்வி முறையில் தமிழ் மொழிதான் முதன்மை பயிற்று மொழி. கால தாமதம் இன்றி உடனடியாகத் தமிழ் ஆட்சி மொழி ஆகவேண்டும்... என்று துணிச்சலாகக் கோரி, உயிர் துறக்கும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்ட சங்கரலிங்கனாரை காங்கிரஸ்காரர்களே வெறுப்போடு பார்த்தார்கள்.

'இந்த ஆள் ஏன் தமிழ் தமிழ் என்று சாகிறான்?' என்று கோபமுற்று அவரை அடியோடு கைவிட்டார்கள். அவரது உறுதியையும் உண்ணாவிரதத்தையும் எப்படியாவது கலைத்து விட வேண்டும் என்று கங்கணம் கட்டிய விருதுநகர் காங்கிரஸ்காரர்களில் பலரும் கூலிகளை ஏவி, உண்ணாவிரதப் பந்தல்




• தோழர் சீனிவாசன்

அருகே கூச்சலையும் குழப்பத்தையும் ஏற் படுத்திப் பார்த்தார்கள்.

உண்ணாவிரதப் பந்தலில் இருந்து எனது டீ கடை, நூறடி தூரத்தில் இருந்தது. லட்டு நாடார் என்பவரும், அவரது சகாக்களும், அல்வா பொட்டலங்கள், பிரியாணி பொட் டலங்கள் போன்றவற்றை உண்ணாவிரதப் பந்தலின் மேற்குப்புறத்தில் அடிக்கடி போட்டு அவமானப்படுத்துவதாகத் தோழர் கள் வந்து சொன்னார்கள். கொதித்துப் போனேன். டீ கடையை அப்படியே போட்டுவிட்டு உண்ணாவிரதப் பந்தல் அரு கேயிருந்த ஸ்தூபியின் பக்கம் ஒளிந்திருந் தேன். லட்டு நாடார் அல்வா பொட்டலத் தோடு வந்து தூக்கியெறியப் போகும் தரு ணத்தில் பாய்ந்து சென்று அவரின் தலை முடியைக் கொத்தாகப் பிடித்துத் தாக்கி னேன். அதன் பிறகு தெப்பக்குளம் வரை துரத்திச் சென்று அவரை விரட்டி அடித்து விட்டு வந்தேன்.

உண்ணாவிரதம் பதினைந்து நாட் களைத் தாண்டியபிறகு, சங்கரலிங்கனார் உட்காரச் சக்தியற்றுப் படுத்துவிட்டார். தினமும் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடி வேடிக்கை பார்க்கத் தொடங்கிவிட்டார்கள். நாங்கள் தினசரி காலை பதினோறு மணிக் குச் சென்று, அவரைத் தூக்கி உட்கார வைத்து நீராட்டி, கொஞ்சம் எலுமிச்சை சாறு மட்டும் கொடுப்போம். ஜனசக்தியிலும், தினத்தந்தியிலும் இன்று முப்பதாவதுநாள் உண்ணாவிரதம், இன்று முப்பத்து ஓராவது நாள் என்று செய்தி வந்து கொண்டிருக்கும். நீங்கள் நேரில் வந்து கேட்டுக் கொண்டால் சங்கரலிங்கனார் உண்ணாவிரதத்தைக் கைவிடுவார்' என்று காமராஜரிடம் கட்சி மூலமும் தொழிற்சங்கம் மூலமும் கேட்டுப் பார்த்தோம். அவர் கடைசிவரை மசியவே யில்லை. முப்பது நாட்கள் கடந்த பிறகு வெறும் மூச்சு மட்டும் வந்து கொண்டிருந் தது. அறிஞர் அண்ணா, கே.பி.ஜானகி அம்மா போன்றவர்கள் எல்லாம் வந்து பார்த்துவிட்டுக் கண்ணீரோடு திரும்பினார் கள். ஒருநாள் இரவு ஒன்பது மணிக்கு போலீசார் சங்கரலிங்கனாரை மதுரை அரசு மருத்துவமனைக்கு வேனில் தூக்கிச் சென்றார்கள். ஆனால் மருத் துவமனையில் அவர் இறந்து போனார். ஒரு மாபெரும் கோரிக்கைக்காக, ஒரு சாதாரண மனிதர் நீண்ட, நெடிய உண்ணாவிரதம் இருந்து மாண்ட செய்தியைத் தமிழக வரலாறு பதிவு செய்து கொண்டது.

நினைவுடன் இருந்தபோது 'எனது உடலை கம்யூனிஸ்டுகளிடம்தான் ஒப்படைக்க வேண்டும்' என்று சங்கரலிங்கனார் எழுதி வைத்த உயில் காரணமாக, அவரது உடலை எங்களிடம் ஒப்படைத்தார்கள். மதுரையில் கம்யூனிஸ்ட் கட்சி அப்போதே வளர்ந்திருந்த தால் அவரது இறுதி ஊர்வலத்தில் ஐயாயிரம் தொண்டர்கள் கலந்து கொண் டார்கள். காங்கிரசுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அண்ணா அரசு, சங்கரலிங்கனாரின் தியாகத்தை மதித்து 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டியது. ஆனால் சங்கரலிங்க னாருக்கு விருதுநகரில் சிலையோ, நினைவு மண்டபமோ இல்லை. விருதுநகர்க்காரர்கள் மட்டுமல்ல, தமிழர்களும் அவரை மறந்தே போனார்கள். சட்டசபையில் அவருக்கு ஆண்டுதோறும் செலுத்தப்பட்டு வந்த அஞ்சலியையும் அ.தி.மு.க. அரசு நிறுத்தி விட்டது." கண்ணீர் மல்கச் சொல்கிறார் தோழர் சீனிவாசன். ○



"இது க்ரைம் கதாசிரி யர் வீடா?"
"எப்படி தெரிஞ்சது?"
"செய்யும் தொழிலே மர்மம்னு வீட்டு வாசல்ல எழுதிப் போட்ருக்காரே!"
– அம்பை தேவா

பவளம் பச்சை ரூபி

Introducing

Close Neck Chocker

9th

ANNIVERSARY SALE CELEBRATION



ALL MAJOR
CREDIT CARDS
ACCEPTED

Discount
10% to 20%
an attractive
gifts

கோமேதகம்

புஷ்பராகம்

முத்து, பவளம், குந்தன், ஜெய்பூர் மாலைகள், பிறந்த நாள் ராசி கற்கள், அமெரிக்கன் டைமெண்ட் நகைகள், *Coral Flower Sets, Japan Cutting beads in all Colours, Hyderabad Gold Foil Beads, Jade, Ruby, Emerald & Blue Sapphire Necklace Sets, Theva Sets, Polki Sets,* இவை அனைத்தும் எங்களிடம் கிடைக்கும்.

NARAYANA pearls & gems

MAIN SHOWROOM
Basement, KASI ARCADE,
(Boag Road Junction),
Next to G.R.T. Hotel
116, Sir Thyagaraya Road,
T. Nagar, Chennai - 17.
Ph : 8153457 / 8155624
Open on all Sunday
11a.m. to 5 p.m

PONDY BAZZAR
FATHIMA PLAZA, (Singapore Plaza)
98, Pondy Bazzar
(Between Hotel Hameedia &
Blue Star Opticals),
Chennai - 17.
Ph : 8155094

PURASAWALKAM
Basement, WAIKIKI COMPLEX,
Doveton Signal,
Purasawalkam,
Chennai - 7.
Phone : 6400414

SUNDAYS OPEN 11 AM TO 8 PM

நீலம் முத்து வைடூரியம்

வாஸந்தி

"எனக்கு ஏன் நீ தகவலே சொல்லல்லே?" கம்ப்யூட்டரில் புதிய விளம்பர லே அவுட்டுக்கான டிஸைனை வடிவமைக்கும் மும்முரத்திற்கிடையே, மௌஸை வலது கையால் நகர்த்தியபடி ஸ்கிரீனைப் பார்த்தபடி, தொலைபேசியின் மறுமுனையில் அவளைக் குற்றம் சாட்டிக் கொண்டிருந்த சோனியாவை சமாதானப்படுத்த வேண்டியிருந்தது. ஆனால் அந்தக் குரலே தெம்பையளித்தது. குற்றச்சாட்டுக்குப் பின்னால் இருப்பது அவளை ஆதரிக்கும் குரல் என்ற பிரக்ஞை கொடுத்த தெம்பு.

"ஸாரி" என்று ஐந்தாவது முறையாகச் சொன்னபோது சகுந்தலாவின் உதடுகளில் இலேசான புன்னகை அரும்பிற்று.

"நான் எப்படிப்பட்ட நெருக்கடியிலே இருந்தேன்னு உனக்குத் தெரியாது. சாப்பிட்டேனா தூங்கினேனான்னு கூட நினைவில்லே."

"அதனாலேதான் கேக்கறேன், என் ஞாபகம் எப்படி வராம போச்சு? இந்த மாதிரி சமயத்திலே தானே ஃப்ரெண்ட்ஸ் உதவணும்? நான் ஏதாவது ஒரு வகையிலே உனக்கு ஆறுதல் தந்திருப்பேன்."

சகுந்தலா சிரித்தாள்.

"இப்பவும் உன் ஆறுதல் தேவை சோனியா. இன்னிக்கு லஞ்ச் சாப்பிடலாம், வர்றியா?"

"ரைட்டோ! கனாட்பிளேஸ் கோவில் ரெஸ்டாரன்ட் போலாமா? எனக்கு இன்னிக்கு மதராஸி சாப்பாடு சாப்பிடணும் போல இருக்கு."

"ஓ.கே. ஃபைன்" என்றாள் சகுந்தலா. "ஒரு மணிக்கு உன்னை அங்கே பார்க்கறேன். உன்னோட நிறைய பேசணும்."

ஃபோனை வைத்துவிட்டு மறுபடி கம்ப்யூட்டரில் லே அவுட்டுக்குத் திரும்பியபோது சோனியாவுடன் தொடர்பு கொள்ளாமல் போனது எப்படி என்று அவளுக்கு உறுத்திற்று. ராஜாவுக்கு விபத்து என்று அறிந்த வினாடியிலிருந்து மூளை பீதியில் உறைந்து போனதும் ராஜா மட்டுமே அவள் சிந்தையை நிரப்பிவிட்டதையும் சொன்னால் நெருக்கமானவர்களுக்குக்கூட அதன் பரிமாணத்தைப் பூரணமாக உணரமுடியாது. தனிக்கட்டையான சோனியாவுக்கு நிச்சயம் புரியாது.

லே-அவுட்டை முடித்து இலாகாவுக்கு ஈமெயில் செய்துவிட்டு அவள் எழுந்தாள். விவேக் உபதேசித்தபடி இன்று ஆஸ்பத்திரிக்குப் போகவில்லை. அலுவலகத்துக்குச் சென்றாள். லிஃப்ட் அடெண்டென்டிலிருந்து சேர்மன் வரை அவளைக் கண்டதும் கேட்ட கேள்வி, "கைஸே ஹைஹன்? ஹௌ இஸ் ஹி?" ராஜாவுக்கு இப்பொழுது தேவலை என்றதும் எல்லாரும் சாமாதானமாகி அவரவர் வேலையைப் பார்க்கச் சென்றது நிம்மதியாக இருந்தது. அவளது மேஜையில் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய வேலை காத்திருந்தது. அதில் சுபாவமான சுறுசுறுப்புடன் ஆழ்ந்தபோது ஆஸ்பத்திரி நினைவும், ஏமாற்றங்களும் விலகிக் கொண்டன. காபி ப்ரேக்கில் எல்லாவற்றையும் மறந்து நண்பர்களுடன் சிரித்துப் பேச முடிந்தது, சிரித்து எத்தனை நாளாகிவிட்டது என்று எட்டிப் பார்த்த திகைப்புக்கிடையே. வழக்கமான ஜீன்ஸ் டீ ஷர்ட் உடைக்கு மாறியதே சகஜ நிலைக்குத் திரும்பியதுபோல சமாதானமேற்பட்டது. இரண்டு நாட்களாக ராஜாவின் பெற்றோருக்காகப் போட்ட வேஷம் தண்டம் என்று நினைத்து அவளுக்குச் சிரிப்பு வந்தது. கனாட்பிளேஸில், காரை ஈ பிளாக் பார்க்கிங் லாட்டில் நிறுத்திவிட்டு அவள் 'கோவில்' ரெஸ்டாரண்ட் நோக்கி நடந்தாள். மதிய உணவு நேரம் என்பதால் கனாட் ப்ளேஸ் வட்டச் சுற்றின் தாழ்வாரங்களில் அலுவலக ஊழியர்கள், ஷாப்பிங் வந்தவர்கள், மத்யவர்க்க இளைஞர் இளைஞிகள் ஃப்ரெஞ்ச்ஷிபான் உடுத்திய சீமாட்டிகள் என்று உற்சாக அலை மோதிற்று. மனத்தின் சந்தேகங்களை, பயங்களை, நிராசைகளை அடித்துக் கொண்டு கரைத்து விடும் உற்சாக அலை. 'கோவிலின் வாசலில் நின்றிருந்த சோனியா "ஹாய்!" என்று பிரகாசமாகச் சிரித்து அணைத்துக் கொண்டாள்.

"என்ன இது? இத்தனை இளைச்சுட்டே?" என்று துக்கம் விசாரித்தாள்.


பொய்யில் பூத்த நிஜமே..

உள்ளே ஒரே ஓர் இடம் காலியாக இருந்தது. தயிர் வடைக்கும் ஆனியன் ரவா தோசாவுக்கும் ஆர்டர் கொடுத்துவிட்டு சோனியா அவளைப் பார்த்து, "சொல்லு என்ன ஆச்சு?" என்றாள்.

நான்கு நாட்களின் கதை, சொல்லச்சொல்ல நீண்டது மகாபாரதம் போல. அத்தனைக்குறுகிய காலகட்டத்துள் விதியும் சதியும் ஊடகமாகிப் போன விந்தையாக. அமானுஷ்யமான ஏதோ ஒரு கை அவளது கண்ணைக் கட்டிக் காயை நகர்த்தி வேடிக்கை பார்ப்பதாக. ஆச்சரியமாகக் கண்களில் நீர் வரவில்லை. சஞ்சயன் குருட்டு திருதராஷ்டிரனுக்குச் சலனமில்லாமல் குருக்ஷேத்திர யுத்தத்தை ஞானக் கண்ணால் பார்த்து விவரித்தது போல வார்த்தைகள் விழுந்தன. முடித்தபோது குருட்டு மன்னனின் பரிதவிப்பும் இயலாமையும் அவளை ஆட்கொண்டன - களத்தில் வெற்றி பெற்றவர் யாருமில்லை என்ற தெளிவில்.

சோனியா விழிகள் விரியப் பார்த்தாள்.

13



"என்னால் நம்பமுடியல்லே" என்றாள் திரும்பத் திரும்ப.

சகுந்தலா இலேசாகச் சிரித்தாள்.

"குற்ற உணர்விலேயே நா செத்துருவேன் போலிருக்கு. ராஜா பிழைச்சுட்டான். அதுக்கு நான் சந்தோஷப்படணும். ஆனா எனக்குச் சந்தோஷமேற்படல்லே. அவனுக்கு நினைவு திரும்பாமலேயும் இருக்கலாம்னு டாக்டர் சொன்னப்ப, அதைவிட அவன் செத்துரலாம்னு நான் நினைச்சேன்."

சோனியா மேஜைமேல் பதிந்திருந்த சகுந்தலாவின் இடது கையை இலேசாக அழுத்தினாள்.

"எனக்குப் புரிகிறது." சகுந்தலா அவளை வெறித்துப் பார்த்தாள். "இதிலே பிரச்னை என்னன்னா, இப்ப முழிச்சுண்டிருக்கிற ராஜாவை எனக்குத் தெரியாது. அஞ்சு வருஷம் என்கிறது மிகப் பெரிய இடைவெளி. அவனே சொல்வான் - எண்ணங்கள் மாறலாம், கொள்கைகள் மாறலாம் - தலைகீழா. இப்ப நமக்குத் தப்பில்லேன்னு தோணுகிற விஷயங்கள், அஞ்சு வருஷத்துக்கு முன்னால் நினைச்சுக்கூட பார்க்க முடியாது அருவருப்பைத் தரலாம். அவனுக்கு நினைவு திரும்பாம போனாலும் காதல் மறுபடி புதுசா மலரலாம்னு டாக்டர் ஜோக் கடிக்கிறார். என்னைக் கண்டா இப்ப வெறுக்க மாட்டான்னு என்ன நிச்சயம்?"

"ஏ, கமான், ஏன் இப்படியெல்லாம் விபரீதமாக் கற்பனை பண்ணிக்கிறே? உன்னை யாரால வெறுக்க முடியும்?"

சகுந்தலா சிரித்தாள்.

"தாங்க்ஸ். நிலைமை ரொம்ப சிக்கல் சோனியா. என்னைக் கண்டாலே பயந்துண்டு முகத்தைத் திருப்பிக்கிறான், கண்ணை மூடிக்கிறான். நான் ஒரு முட்டாள்தனம் செஞ்சேன். "எனக்கு உன்னைத் தெரியாது"ன்னு அவன் சொன்னதும் வந்துதே பாக்கணும் ஆத்திரம் எனக்கு. "நான் உன் குழந்தையோட அம்மாடாமிட்!"னு கத்தினதிலே அரண்டு போயிட்டான். என்னோட வாழ்ந்ததும் நினைவில்லே, குழந்தையைப் பெத்ததும் நினைவில்லே - நா எப்படி, எங்கேந்து ஆரம்பிக்கட்டும்?"

"நினைவு வந்துடும் சகுந்தலா," என்றாள் சோனியா இதமாக.

"வரலேன்னா என்ன சிக்கல் வரும்னு நான் யோசிக்கணும் சோனியா. சராசரி மனிதர்கள் மாதிரி நாம வாழலேன்னா, அசாதாரண கால கட்டத்திலே சராசரி உலகம் நம்மை ஏத்துக் காதுங்கறது நெருக்கடி வர்ற சமயத்திலேதான் புரியறது."

"எனக்கு உன் பிரச்னைப் புரியறது" என்றாள் சோனியா. "நெருக்கடி வரும் என்கிற எதிர்பார்ப்பிலே நாம சராசரிக்கு இறங்கணுங்கறியா?"

சகுந்தால சோர்வுடன் சிரித்தாள்.

"எனக்குத் தெரியல்லே. எது சரி எது தப்புன்னு தெரியல்லே. எந்தப் பிரச்னையுமில்லாம வாழ்க்கை ஓடறவரைக்கும் எல்லாம் சரின்னு தோணுது. உலகம் நமக்குத் துச்சமாய்ப் படுது. பிரச்னைவருதுன்னு வெச்சுக்க, வெறும் புல்கூட தடுக்கும். எழுந்திருக்கவிடாம வீழ்த்தும்."

"சேச்சே, நீ பேசற பேச்சாவே இல்லே இது" என்றாள் சோனியா கண்டிக்கும் குரலில், "தோத்துப் போனவளைப் போலப் பேசாதே."

சட்டென்று சகுந்தாலவின் கண்களில் நீர் நிறைந்தது.

"சோனியா, நீ சொன்னது சரி. நா தோத்துப் போயிட்டேன். ஐ திங்க் ஐ ஹால் லாஸ்ட் ஹிம். ராஜாவை நான் தொலைச்சுட்டேன்..."

"ஏய், என்ன இது?" என்றாள் சோனியா பதற்றத்துடன். "அவனுக்கு நினைவே திரும்பாதுன்னு நீ எப்படி முடிவுக்கு வரலாம்? நீ பொறுமையா இருக்கணும். அந்த முட்டாளுக்கு நாங்க சொல்றோம் மெள்ள மெள்ள."

"உங்களையே அவனுக்குத் தெரியாது."

"அதனாலே என்ன? ஞாபகப் படுத்துவோம். மறந்துபோனது அவனுடைய தப்பு இல்லேன்னு சொல்லுவோம். நீ பலவீனப்படக்கூடாது."

> **"இரத்தம் சோதிக்கணும்னு ஒரு பரிசோதனைச் சாலைக்குப் போனேன். நாலு மணி நேரம் காக்க வெச்சுட்டாங்க."**
>
> **"முதல்ல உன் பொறுமையைச் சோதிச்சிருப்பாங்க!"**
>
> **- வலங்கைமான் நூர்தீன்**

சகுந்தலா சற்று நேரம் மௌனமாக காப்பியை அருந்துவதில் கவனம் செலுத்தினாள். பிறகு மெல்லச் சொன்னாள்.

"நான் பெத்த குழந்தைக்கு அவன் தகப்பன் என்கிறதை டி.என்.ஏ. டெஸ்ட் மூலமா தெரிவிக்கலாம்ங்கறார் டாக்டர். எனக்கு அது மகாக் கேவலமாப்படுகிறது. நான் ஏதோ விபச்சாரி மாதிரி. அப்படியானும் என்னுடைய உறவை நிரூபிக்கணும் என்கிற நிலைமைக்கு இறங்கக்கூடாதுன்னு தோணுகிறது."

சோனியா அவளை யோசனையுடன் பார்த்தாள்.

"பின்னே என்ன பண்ணப்போறே?"

வலது ஆள் காட்டி விரல்மேல் அடுத்த விரலைக் குறுக்காகப் போட்டு சகுந்தலா உதட்டைப் பிதுக்கிச் சிரித்தாள்.

"இதப்பார், மனசைத் தளர விடாதே. டாக்டர்கள் அவனுடைய நிலைமையை அவனுக்கு விளக்கித்தான் ஆகணும். அவன்

பொறுப்பை மறுபடி ஏத்துக்க வேண்டாமா? அவனுடைய அப்பா அம்மாவுக்கும் அதை அவர்தான் புரியவைக்கணும்."

கிளம்பும்போது சோனியா அவளை அணைத்து, "ரொம்ப கவலைப்படாதே. எல்லா சிக்கலும் தன்னைப்போல அவிழ்ந்துவிடும், நீ அதில் கை வைத்தால் அவிழ்க்க முடியாத சிக்கலாகலாம்'' என்றாள், நிர்வாகத்துறை பட்டறையில் பிரச்னைகளைச் சமாளிப்பது எப்படி என்ற தலைப்பில் சொற்பொழிவாற்ற வந்த ஒரு தொழிலதிபர் பாணியில்.

அதைப் பற்றியே நினைக்கக்கூடாது என்ற வைராக்கியத்தில் சகுந்தலா அலுவலகத்து வேலையில் ஆழ்ந்து போனாள். மாலையில் வீடு திரும்பும் வழியில் க்ரெஷ்ஷுக்குச் சென்றபோது மிஸஸ் மல்ஹோத்ரா சாயி பஜனுக்குத் தயார் செய்து கொண்டிருந்தாள். ஆளுயர சாய் பாபாவின் உருவப்படத்துக்கு சிரத்தையாக மாலை சாற்றிக் கொண்டிருந்தாள்.



''எப்படியிருக்கிறார் பரத்துடைய அப்பா?'' என்றாள், படத்தில் பாபா புன்னகைப்பது போலவே புன்னகைத்து. கையையும் தூக்கி அபய ஹஸ்த முத்திரைக் காட்டுவாள் என்று தோன்றிற்று.

"இப்பத் தேவலை. ஐ.ஸி.யு. விலேர்ந்து தனி வார்டுக்கு வந்தாச்சு."

மிஸஸ் மல்ஹோத்ரா ஒரு விநாடி கண்ணை மூடித் திறந்து பாபாவின் படத்தைப் பார்த்து "எல்லாம் அவர் க்ருபை" என்றாள். பாபா அதை அங்கீகரித்ததாகத் தோன்றிற்று.

தன்னுடைய பிரச்னையைச் சொல்லவாமா என்று சகுந்தலா நினைத்தாள். பிறகு எத்தனை பலவீனமாகிப் போனேன் என்ற உணர்வுடன், தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

இரவு பரத் தூங்கிப்போனதும், தானும் சாப்பிட்டுவிட்டுக் கதைப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொள்கையில் பக்கங்களும் வரிகளும் கண்ணிலேயே படாமல் நழுவிப் போயின. தொலைக்காட்சித் திரையில் உருவமும் தெரியவில்லை. ஒலியும், செவியில் விழவில்லை. இனி தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வது சாத்தியமில்லை என்று அவள் விவேக்கிற்கு டெலிபோன் செய்தாள்.

அவன் ஸ்டார் டி.வியை அணைத்துவிட்டு 'போலோ!' என்றான்.

''உன் உபதேசப்படி நடந்துண்டேன். ஆபீசுக்குப் போனேன்'' என்றாள், அவள்.

''குட்!'' என்றான் விவேக். ''நானும் இன்னிக்கு ஆஸ்பத்திரிக்குப் போகல்லே. கதிரும் போயிருக்கமாட்டான். ரெண்டு நாள் விட்டுப் பிடிக்கலாம். ராஜாவுடைய அப்பா அம்மா கவனிச்சுப்பாங்க."

''இன்னிக்கு சோனியாவோட லஞ்ச் சாப்பிட்டேன். ஒரேயடியா சண்டைக்கு வந்தா, ஏன் தனக்கு இதுவரை விபத்தைப் பத்திச் சொல்லல்லேன்னு. என்னாலே ஆன உதவி செஞ்சிருப்பேனன்னா. ஆனா இப்ப ஏற்பட்டிருக்கிற பிரச்னை சரியான ஆன்டி க்ளைமாக்ஸ்னு ஒப்புக்கிட்டா. இப்ப யாராலே எனக்கு உதவி பண்ணமுடியும் விவேக்?"

விவேக் சிறிது மௌனத்துக்குப் பிறகு மெல்லச் சொன்னான்.

"இது விநோதமான சிக்கல்தான். நாங்க உனக்குத் தார்மீக ஆதரவு கொடுக்க முடியும். நாம அவசரப்படக் கூடாதுன்னு நினைக்கிறேன்."

"ஆஸ்பத்திரியிலேந்து அவனை வீட்டுக்கு அழைச்சிட்டு வரணுமே, என்ன செய்யப் போறோம்? பரத்தைத் தூக்கிண்டு போய் அவன் முன்னால நிக்கலாமான்னு பார்க்கறேன். அவனுடைய அப்பா அம்மாகூட சினிமாவுலே வர்ற மாதிரி கொஞ்சம் மனசு மாறலாம் குழந்தையைப் பார்த்த உடனே!''

விவேக் மெல்லச் சொன்னான்.

"அந்த மனுஷன் ஒரு மாதிரியான ஆள். எதைச் சொன்னாலும் சண்டைக்கு வர்றமாதிரி பேசறார்."

"எப்படிச் சொல்றே?"

"நான் அவங்களைப் பார்த்தேன் நேத்து..."

அடிவயிற்றில் ஏதோ சுழண்டதுபோல் இருந்தது. அந்தச் சந்திப்பைப் பற்றி இதுவரை விவேக் தன்னிடம் சொல்லவில்லை என்றால் அது நல்ல செய்தி இல்லை என்று அர்த்தம்.

"என்ன சொன்னார், சொல்லு!"

விவேக் தயங்கிக் கொண்டே சொன்னான். "அவனுக்கு நினைவு திரும்பல்லேன்னாலும் வீட்டிலே அவனுக்கு ஒரு மனைவியும் குழந்தையும் இருக்கிறதை நீங்கதான் எடுத்துச் சொல்லணும்னேன். எங்களுக்கே தெரியாத ஒரு விஷயத்தை நாங்க எப்படிச் சொல்ல முடியும்னு கேட்டார். கல்யாண ஃபோட்டோவையோ, மாரேஜ் சர்டிஃபிக்கேட்டையோ கொண்டுபோய் அவன்கிட்டக் காண்பிக்கச் சொல்லு அந்தப் பெண்ணைன்னார்!''

ரிசீவரைப் பிடித்திருந்த விரல்களில் தோன்றிய மெல்லிய நடுக்கமும் மார்பின்

படபடப்பும் அவளைப் பலவீனப்படுத்தின.

ஆனால் பெரிதாகச் சிரிப்பு வெடித்தது. "இது ரொம்பப் பெரிய ஜோக்! நீ என்ன சொன்னே?"

"ஒண்ணும் சொல்லல்லே, பேசாம எழுந்து வர்றதைத் தவிர வேற என்ன செய்ய முடியும்?"

"அது சரி" என்றான் ஆயாசத்துடன்.

மேலே பேச சங்கடப்படுபவன்போல விவேக், ''ரிலாக்ஸ்'' என்ற வழக்கமான வார்த்தையைச் சொல்லிவிட்டு, "நாளைக்கு உன்னை ஆபீஸிலே வந்து பார்க்கறேன்'' என்றான்.

அவள் புத்தகத்தை மூடி வைத்து விளக்கை அணைத்துவிட்டு "ரிலாக்ஸ்" என்று சொல்லிக் கொண்டாள். விவேக்கின் குரலிலிருந்த தயக்கம் புதிதாக இருந்தது. அவர்களது வட்டத்தில் மிகத் தீவிரமான நவீன பார்வை கொண்டவன். ராஜாவுக்கும் அவனுக்கும் எத்தகைய கருத்து வேற்றுமையும் இருந்த தில்லை. ராஜா அவளை அவனது நண்பர் வட்டத்துக்கு அறிமுகம் செய்வதற்கு முன்பே அவர்களுடைய கருத்துக்களுடன் அவளுக்கு உடன்பாடு ஏற்பட்டுப் போயிருந்தது. ராஜா வின் பேச்சில் இருந்த பாசாங்குத் தனமற்ற தன்மையா, சொன்ன விதத்தில் இருந்த நேர்மையா, எது தன்னைக் கவர்ந்தது என்று அவளுக்குத் தெரியாது. அதைப் பற்றி அவள் ஆராய்வதற்கு ஏதும் அவசியம் ஏற்பட வில்லை. அன்று, அந்த மிகத் தனிமையான இரவு நேரத்தில் மக்காய்கி ரோட்டியை பஞ்சாபி டாபாவில் மென்று கொண்டிருந்த போது எதிரில் அமர்ந்த அந்த மனிதன். அவ

ளுடைய வாழ்வில் மிகப் பெரிய நம்பிக்கை ஒளியை ஏற்றுவான் என்று அவள் நினைத் திருக்கவில்லை. அவன் சாதாரணமாகத்தான் பேச்சுக் கொடுத்தான். அங்கிருந்து எழுந்து செல்லும்போது, தனக்குள் சொல்லிக் கொள்பவள் போல "எனக்கிருந்த ஒரே ஓர் உறவு இன்று மறைந்துவிட்டது'' என்றாள், அந்த இடத்தை நிரப்ப அவன் வருவான் என்று தெரியாமல். உறவுக்காக அவனும் காய்ந்திருப்பது அறியாமல். அதனாலேயே அந்த பரஸ்பர ஈர்ப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். அது தந்த அறிவார்த்த தரிசனத்தில் நேற்றும் நாளையும் துச்சமாயின. உலகத்து மூத்த பொய்மைகளைத் தூசாக்குவது வாழ்க்கையின் நியதியாக, இயல்பாக, விகல்பமற்றதாகப் பரிணமித்தது.

'எந்தத் திருமணச் சடங்கும் ஒரு பித்தலாட்டம்' என்றான் அவன், 'தேவை யற்றது. ஆண் பெண் உறவுக்கு அது உத்தர வாதமாகப் போனால் அது ஒரு கமை. என் பெற்றோர்கள் ஒருவரையொருவர் வெறுக் கிறார்கள். ஆனால் சேர்ந்து வாழ்கிறார்கள் பாரத்தை இழுப்பதுபோல - நம்மிடையே இருக்கும் அன்புதான் நமக்கு உத்தரவாதமாக இருக்கணும். நான் உன்னை நேசிக்கிறேன். நீ என்னை நேசிக்கிறாய். இதைவிட வேற என்ன முக்கியம்?"

வேறு எதுவும் முக்கியமாகப் படாததால் அவள் அவனுடன் குடும்பம் நடத்தினாள். நிச்சிந்தையாக.

[illegible]

கிருஷ்ண கிருஷ்ணா!



குருசேஷ்த்திர யுத்தத்தின்போது ஒரு நாள் மாலை போர் முடிந்தது. எல்லோரும் பாசறைத் திரும்பி விட்டனர்.


அர்ஜுனனும் தன் இருப்பிடம் சென்றுவிட்டு சந்தியா வந்தனத்திற்குப் பிறகு கிருஷ்ணனைத் தேடி வந்தான்.

அவர் அப்போது பாசறையில் இல்லை. எங்கே போய் இருப்பார் என்று தேடியபோது, குதிரை லாயத்தில் இருந்தார். அங்கே, தான் ஓட்டும் ரதத்தின் குதிரை களுக்குத் தண்ணீர் காட்டி, உணவளித்துவிட்டு அவற்றைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

அதைக் கண்ட அர்ஜுனன் ''என்ன கிருஷ்ணா இது. நீ தேரோட்டியாக இருக்கலாம். அதற்காக இவற்றை எல்லாம் செய்ய வேண்டுமா? இந்த வேலைகளைச் செய்ய எத்தனையோ பேர் இருக்கிறார்களே'' என்றான்.

கிருஷ்ணன் சிரித்தார். ''அர்ஜுனா தான் ஏற்றுக் கொண்ட வேலையை ஒழுங்காகச் செய்வதுதான் 'கர்ம யோகம்' என்பது. ஒரு தேரோட்டி அவன் குதிரை களையும் கவனிக்க வேண்டும். அப்போது தான் அதற்கு தன் எஜமானனிடம் ப்ரிதி ஏற்படும். கர்ம யோகத்தில் கவனமாக இருப்பவனே வெற்றி பெறுவான்'' என்று விளக்கினார்.

அபராதம் போடணும்!



✉ 'மமதிக்கு 'மகா' ப்ரமோஷன்!' அட்டைப்படக் கட்டுரை படித்தேன். பாகிஸ்தான் பிரச்னை, இலங்கைப் பிரச்னை, உள்நாட்டில் குஜராத் பிரச்னை, ஜனாதிபதி தேர்தல் என்று எழுத வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கும்போது, மமதி சினிமாவில் நடிப்பதுதான் உங்களுக்கு முக்கியச் செய்தியாக இருக்கிறதாக்கும்?

மொரட்டுப்பாளையம், கு.நா. இராஜேஸ்வரன்.

✉ 'சுவடுகள்' அருமையாகப் போய்க் கொண்டிருக்கிறது. பரவலாக வெளியில் தெரியாத பிரபல எழுத்தாளர்களின் குணநலன்கள்கூட அவர்களுக்குப் பெருமையே சேர்க்கின்றன. திருப்பூர் கிருஷ்ணனின் எழுத்தில் ஒரு 'கிக்' இருக்கவே செய்கிறது.

மதுரை -1, பாலசுப்ரமணியம் ஹேமலதா.

✉ 'தலையங்கம், அண்ணன் அமெரிக்காவுக்குச் சரியான நெற்றியடி! பயங்கரவாதம் பற்றி இரு வெவ்வேறான கொள்கைகளை இந்தியா - பாகிஸ்தான் விஷயத்தில் கையாண்டு வரும் அமெரிக்காவின் 'கபட வேஷத்தை' நன்றாகவே வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டீர்கள்!

திருச்சி - 21, ஆர். அப்துல் சலாம்.

✉ அபராத ஹீரோ ரிவால்டோ படத்துக்குப் பதிலா ரொனால்டோவோட படத்தைப் போட்ட உமக்கும் அபராதம் போடணும்!

மதுரை, சி.எம். குமார்.

✉ 16.6.02 கல்கியில் "தேவதாஸுக்கு 50 கோடி தேவைதானா?" என்ற கேள்வி நியாயமானது. கோடிக்கணக்கான மக்கள் உண்ண உணவின்றி, படுக்க இடமின்றித் தவிக்கும் இந்நாட்டில், கோடி கோடிகளாக சினிமா உலகில் செலவழிக்கப்படுகிறது. தற்போது கோலிவுட்டிலும் பாலிவுட்டிலும் பன்றி, குட்டிகள் போடுவது போல் படங்கள் தயாராகின்றன. ஒரு படத்திலாவது தர்மம், அன்பு, காருண்யம்,மனிதாபிமானம் என்பதைச் சித்திரிக்கும் காட்சிகளே கிடையாது.

மும்பை, மல்லிகாசிவன்.

✉ ஜனநாயகத்தில் தேர்தல் என்பது உயிர்நாடி. தேசத்தில் மிக உயர்ந்த பதவியான ஜனாதிபதி பொறுப்புக்குப் போட்டி அவசியம்தான். சுதந்திரம் பெற்று 11 ஜனாதிபதிகளைக் கண்டுள்ள இந்தியா, ஒரு பெண் ஜனாதிபதியைக் கூட பார்க்காத நிலையில், இடதுசாரிகளின் நிலை நியாயமானதே!

கேரளா, அ. உமர்பாரூக்.

✉ 23.6.02 கல்கி இதழில் குருபெயர்ச்சி பலன் - நவக்கிரக பாராயணம் தரப்பட்டுள்ளது. அதில் 'சோமாய' என்ற வார்த்தைக்குப் பின் 'மங்களாய' என்று வர வேண்டும். 'செவ்வாய் கிரகம்' விடுபட்டிருக்கின்றது. ஒரு கிரகத்தை விட்டுவிட்டுச் சொன்னால் பலன் எப்படி உண்டாகும்?

திருச்சி-8, பி.வி. குப்புஸ்வாமி

✉ கல்கி வைர விழா ஆண்டில் குருப் பெயர்ச்சிப் பலன்களா? தாங்க முடியவில்லை! பூனைகளைப் பார்த்துப் புலிகள் கோடுகளை அழித்துக் கொண்டதாய்க் கேள்விப்பட்டதுண்டா? சிந்திக்க வேண்டும்.

சென்னை, சுப்ர. பாலன்.



"ஆகோ... அய்யகோ... ஆத்தா... பெரியாத்தா... அம்பது மக்களைப் பெத்தாத்தா... எனக்கு நாழி போடாத்தா!"

- கோஷம் வானைப் பிளக்கும். உறுமி மேளம் ஊரையே உலுக்கும். இடுப்பில் காவியும், கழுத்தில் மாலையும், கையில் அக்னிச் சட்டியும் ஏந்திக் கொண்டு, அருள் வந்து ஆடிக் கொண்டு, ஒரே நேரத்தில் இரண்டாயிரம் பேர் வளைய வந்தால் எப்படியிருக்கும்?

இந்த பக்தி பரவசக் காட்சியைக் கற்பனை செய்து பார்க்க வேண்டியதில்லை. விருதுநகர் ஸ்ரீபராசக்தி மாரியம்மன் கோவில் பங்குனிப் பொங்கல் திருவிழாவிற்குப் போனால் பார்த்துப் பரவசப்படலாம். காலம் காலமாய் வறட்சியின் பிடியில் உள்ள ஊரில் மழைக்குரிய (மாரி - மழை) தெய்வமாகவும், ஆயிரம் கண்ணுடையாள் எனவும் விருது நகர் பக்தர்களின் கண் கண்ட தெய்வமாக விளங்கும் ஸ்ரீமாரியம்மனுக்கு, இருபத்து நான்கு நாள் திருவிழா கொண்டாடும் வழக்கம் இங்கே தான் இருந்து வருகிறது.





• தேரோட்டம்

சாதி வேறுபாடுகளை மறந்து மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும் இந்தத் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக உலகின் எந்த மூலையில் இருந்தாலும் விருது நகர்க்காரர்கள் குடும்பத்தோடு விடுப்பில் வந்து சேர்ந்து விடுகிறார்கள். திருவிழாவின் போது விரதம் இருந்து, புலால் ஒதுக்கி தூய்மையைக் கடைபிடித்து, அம்மனுக்குப் பொங்கல் வைத்து, பண்டிகை காலம் போல புத்தாடை அணிகிறார்கள். அக்னிச் சட்டி தவிர கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி வேடமிட்டுச் செல்லுதல், அலகு குத்துதல், கயிறு குத்துதல், ஆயிரங்கண் அக்னிப்பானைச் சுமத்தல், முதுகில் கொக்கிப் போட்டு ரதம் இழுத்தல், மாறு வேடம் போட்டுக் கொண்டு 'உருமாறி வருதல்', என்று விதம் விதமான வேண்டுதல்களைப் பக்தி சிரத்தையோடு நிறை

பொருட்காட்சித் திடலில் பெண்பார்க்கும் படலம்!



* அக்னிச் சட்டி எடுத்தல்



* ஸ்ரீபராசக்தி மாரியம்மன் கோவில்

வேற்றும் பாங்கை, பங்குனிப் பொங்கல் திருவிழாவில்தான் பார்க்க முடியும். பக்தர்களை நோக்கி தெய்வங்கள் தேரில் வரும் தேரோட்டம், பொங்கல் தினத்தி லிருந்து மூன்றாம் நாள் திருவிழா வாகக் களை கட்டும். தேரோடும் வீதி முழுவதும், வீடு, கடை வாசல்களில் பெஞ்ச், நாற்காலி போட்டுத் திருவிழாவை திகட்டாமல் வேடிக்கை பார்ப்பார்கள்.

பங்குனிப் பொங்கல் திருவிழாவை யொட்டி விருதுநகர் சத்திய வித்யாசாலா பள்ளி நிர்வாகத்தினர் நடத்தும் இந்த நான்கு நாள் பொருட்காட்சி முன்பு, தமிழக அரசு நடத்தும் சுற்றுலா பொருட்காட்சிகள் எல்லாம் ஒன்றுமில்லை. பெரும்பான்மையான விருது நகர் நாடார் குடும்பங்களில் பெண் பார்க்கும் படலம் என்பது பாரம்பரியமாக இந்தப் பொருட்காட்சியில்தான் நடக்கிறது என்றால் எத்தனை ஆச்சர்யம்?

திருமண வயதில் இருக்கும் பெண்களை, அவர்களின் பெற்றோர், பொருட்காட்சியை வேடிக்கை பார்த்து, கண்டு களிக்க வருவது போல் அழைத்து வருவார்கள். மாப்பிள்ளை வீட்டாருக்கு, பெண்ணும், பெண் வீட்டாரும் பொருட்காட்சில் குறிப்பிட்டக் கடையில் இருக்கிறார்கள் என்று தகவல் அனுப்பப்படும். உடன் மாப்பிள்ளை பையன் தனது தோழர் களோடு வந்து பார்த்துவிட்டு பிடித்திருந்தால் முறையாக வீட்டில் சென்றுப் பார்த்துத் திருமணம் பேசி முடிப்பார்கள். பொருட் காட்சியில் பெண் பார்க்க வருகிறார்களா? வேடிக்கை பார்க்க வருகிறார்களா? என்பது, சம்பந்தப்பட்ட பெண்ணுக்கும், பையனுக்குமே கூட தெரியாது. வீட்டிற்கு வந்து பெண்ணைப் பார்த்துவிட்டு, பிடிக்கவில்லை என்று நேரடியாகக் கூறுவதை அநாகரிகமாக கருதி இந்த முறையைக் கடைபிடித்து வரும் முறைக்குக் கைமேல் பலன் கிடைத்துவிடுவ தால்தான் இந்த முறை இன்னும் அங்கே வாழ்கிறது. ●



விருதுநகர் கடைத் தெருவுக்குள் புதிதாய்ப் பிரவேசிப்பவர்கள் கவனிக்க.. பல சரக்குக் கடை தொடங்கி, ஐஸ்கிரீம் கடை வரையிலும், கல்லாவிலோ, கடைச் சிப்பந்தி யாகவோ எளிய தோற்றத்தில் இருப்பவர் களைப் பார்த்து, படிக்காத பட்டிக்காடுகள் என்று நினைத்தால் ஏமாந்து போவீர்கள். குறைந்த பட்சம் ஓர் இளங்கலை பட்டப் படிப்பையாவது ஃபஸ்ட் கிளாசில் பாஸ் செய்துவிட்டு, கூலாக ஃபேமிலி பிஸினசைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சாம்பி ளுக்குச் சிலரைச் சந்திக்கலாம் வாங்க.

வெற்றிவேல் எம்.பி.ஏ. *(ஹோட்டல் பர்மா கடை அதிபர்) :*

அப்பா பர்மாவிலிருந்து தாயகம் திரும் பியவர். இங்கே வந்ததும் 'பர்மா கடை' என்ற பெயரில் சின்னதாய் டீ கடை வைத் துப் பொருளீட்டியவர். நாங்கள் மொத்தம் ஏழு சகோதரர்கள். மூத்த அண்ணன் அமெரிக்காவில் செட்டிலாகிவிட்டார். ஒரு அண்ணன் எம்.எஸ்.சி., எம்.பில்., மற்ற தம்பிகள் பி.இ. படித்த என்ஜினியர்கள். நான் நான்காவது ஆள். விருதுநகர் வி.எச்.என். எஸ். கல்லூரியில் எம்.பி.ஏ. முடித்தேன். எங்கள் ஹோட்டலை விரிவாக்க இந்த நிர் வாகப் படிப்பு உதவும் என்று நினைத்தேன். ஆனால் அந்தப் படிப்பு கம்பெனி நிர்வாகம் பற்றித்தான் அதிகம் கற்றுக் கொடுத்தது. என்றாலும் உபயோகமான படிப்புத்தான். அப்பாவுக்கு உடல் நிலை சரியில்லாததால் இப்போது நிர்வாகத்தை நான் கவனிக் கிறேன். அப்பா தொடங்கிய ஒரு கடையை மூன்று கடையாகப் பெருக்கியிருக்கிறோம். விருதுநகர் பரோட்டா என்றால் தமிழகம்


* மணிகண்டன்


* பாலமுருகன்

பொட்டலம் மடிக்கும் பட்டதாரிகள்!

முழுக்க பிரசித்தம். அதிலும் பர்மா கடை பரோட்டா என்றால் தரமும் சுவையும் ருசித்தவர்களுக்குப் புரியும்.

மணிகண்டன் பி.ஏ., பி.எல். *(சிமெண்ட், விதைகள் வியாபாரம்)*:

ஒரு வழக்கறிஞர் ஆகணும்கிற இலட்சியத்தோடதான் சட்டம் படிச்சேன். ஆனால் சின்ன வயதிலேயே அப்பா, என்னைக் கொள்முதல் செய்ய அனுப்புவார். ஃபேமிலி பிசினஸ்ங்கிறதாலே தட்ட முடியாமல் ஏத்துக்கிட்டேன். காலப் போக்குலே பிஸினசில் ஈடுபாடு வந்துடுச்சி. இதனால் கொஞ்ச நான் வழக்கறிஞரா? வியாபரமா?ன்னு இருதலைக் கொள்ளி எறும்பு மாதிரி இருந்தேன். இப்போ ரொம்பத் தெளிவாயிட்டேன். முழு நேர பிஸினஸ்க்குத்தான் முதலிடம். என்னோட வியாபாரம், அப்புறம் உறவினர்கள், நண்பர்கள் கேட்டுக்கிட்டா கோர்ட் படி ஏறுவேன். எந்தத் தொழில் செஞ்சாலும் சுத்தமா செய்யணும்.. அதுக்காக இப்போ எம்.எல் லும் ஒரு பக்கம் படிச்சிட்டு இருக்கேன்.



• ராஜதிலீப்

ராஜ திலிப் பி.காம். *(ஜவுளி வியாபாரம்)*:

அரசாங்க வேலைக்குப் போகணுங்கிற ஆசையெல்லாம் கொஞ்சம் கூடக் கிடையாது. சின்ன வயசிலேர்ந்தே வியாபாரத்துலே பெரிய ஆள் ஆகணும், ஒரு ரூபாய் சம்பாதிச்சாலும் சுய சம்பாத்தியமா இருக்கணும்னு முடிவு பண்ணிட்டேன். நான் கே.வி.எஸ். பள்ளியில் படிக்கும்போது ஸ்கூல் கண்காட்சியில் குளிர்பானக் கடையைத் துணிச்சலா ஐயாயிரம் ரூபாய்க்கு ஏலம் எடுத்து நடத்தினேன். நல்ல அனுபவம் கிடைச்சது. ஜவுளி வியாபாரம்தான் பேமிலி



• வெற்றிவேல்



• புவனேஸ்வரி



பிசினஸ். ஜவுளி கொள்முதல் பண்றதுக்காக மும்பை, டெல்லி, பூனா, சூரத் வரைக்கும் போயிட்டு வருவேன். எந்தத் தொழில் செய்தாலும் பிரேக் ஈவன் பாய்ண்ட் ரிச்சா இருக்கணும். ஒரு ரூபாய் நஷ்டம் வந்தா அவன் வியாபாரியே இல்லே. என்னோட படிப்பு, வரவு செலவு கணக்குக்கு ரொம்ப உதவியா இருக்கு.

பாலமுருகன் பி.ஈ. *(கம்ப்யூட்டர் சயின்ஸ் மிளகாய் வற்றல் ஏற்றுமதி) :*

தமிழகம் மெச்சுகிற மாதிரி சாப்டுவேர் என்ஜினியர் ஆகணும்னு நினைத்தேன். எல்லோருக்கும் அமெரிக்காவின் சிலிகான் வேலி மீது குறியென்றால் எனக்கு ஆஸ்திரேலியா மீது குறி. இதற்கென்றே படிப்பு முடித்ததும் பெங்களூரில் ஆறுமாத காலம் தங்கியிருந்து வேலைக்கு முயற்சி செய்தேன். வேலையும் கிடைத்துவிட்ட நிலையில் ஊரி விருந்து அழைப்பு. மறுக்க முடியவில்லை. பத்தாம் வகுப்பு படிக்கும் போதிலிருந்தே வற்றல் வியாபாரம் பற்றி தாத்தாவின் அனுபவத்திலிருந்து கற்றுக் கொண்டேன். இதனால் எனக்குச் சிரமமாகத் தெரியவில்லை. மிளகாய் வற்றல் கொஞ்சம் ரிஸ்கான வியாபாரம் தான். கொள்முதலில் கவனமும், ஏற்றுமதியில் தரமும் ரொம்ப அவசியம். மும்பை, நாக்பூர், குண்டூர் பகுதிகளிலிருந்து மிளகாய் வற்றல் தருவித்து, அதே ஊர்களுக்கும் கூட விற்று விடுவோம்.

மிளகாயின் நீளம், நிறம், உறைப்பு இந்த அம்சங்களைப் பொருத்து விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. கம்ப்யூட்டர் தெரியுமென்பதால் சந்தை நிலவரம், ஆன்லைன் இன்வாய்ஸ் போன்றவற்றுக்காக ஈமெயிலை பயன்படுத்துகிறேன். இப்போதெல்லாம் ஆஸ்திரேலியா பற்றி நினைக்கவே நேரமில்லை. வற்றல் வியாபாரம் திருப்தியாக இருக்கிறது.

புவனேஸ்வரி எம்.எஸ்.சி. பி.எட் *(பலசரக்குக் கடை) :*

ஆசிரியர் தொழில் என்றால் நாம் மட்டும்தான் வருமானம் ஈட்ட முடியும். சொந்தத் தொழில் என்றால் பத்து பேருக்கு வேலை கொடுக்கலாம் என்று தோன்றியது. இதைக் கணவரிடம் சொன்னபோது கடை நிர்வாகத்தை என்னிடம் ஒப்படைத்து விட்டார். ஆனால் இடையில் நான் படித்த படிப்பு வீணாகிறதே என்ற உறுத்தல் எனது கணவருக்கு வந்துவிட, ஆசிரியர் வேலைக்குச் செல்வதென்றால் ஏற்பாடு செய்கிறேன் என்றார். எனக்குத்தான் விருப்பமில்லை. வியாபாரத்தில்தான் ஆர்வம் என்றேன். அவரும் எனது எண்ணத்தைப் புரிந்து கொண்டு விட்டார். இப்போது ஒரு நாள் கடைக்கு வரா விட்டாலும் தூக்கம் வராது. வியாபாரமும் திருப்தியாக இருக்கிறது. எனது படிப்பு, பிள்ளைகளுக்கு டியூசன் சொல்லிக்கொடுக்க ஒரு வகையில் உதவியாக இருக்கிறது.

கிருஷ்ண கிருஷ்ணா!

கிருஷ்ணர் அடிக்கடி கர்ணனின் கொடைத் திறனைப் புகழ்வது அர்ஜுனனுக்கு பிடிக்கவில்லை.

ஒரு முறை நேரடியாகவே கேட்டு விட்டான். "என்ன கிருஷ்ணா நீ



கர்ணனை இப்படி புகழ்கிறாய்? செல்வமிருந்தால் நான்கூடத்தான் அவனைவிட அதிகமாய் அள்ளி வழங்குவேன்" என்றான்.

அவனின் மனோபலத்தை மாற்ற நினைத்த கிருஷ்ணர், "அப்படியா இதோ உனக்கு ஒரு தங்க மலையையும் வெள்ளி மலையும் உருவாக்கித் தருகிறேன். அதை இன்று சூரிய அஸ்தமனத்திற்குள் தீர்த்துவிட்டால் நீ கர்ணனைவிட பெரிய கொடை வள்ளல் என்று ஒப்புக் கொள்கிறேன்" என்றார்.

"செய்து விடுகிறேன்" அர்ஜுனன். ஒரு தங்க மலை, வெள்ளி மலை இரண்டையும் உருவாக்கி தந்தார் கிருஷ்ணர். உடனே அர்ஜுனனும் ஒரு கோடாலியை எடுத்து வந்து மலையை வெட்டி எல்லோரையும் அழைத்து ஆளுக்கு ஒன்றாய் வழங்கினான். சூரியன் மறையும் முன்பாக கிருஷ்ணர் வந்து பார்த்தார்.

"என்ன அர்ஜுனா சூரியன் அஸ்தமிக்க போகிறது. நீ பாதி மலைகூட கொடுக்க வில்லையே" என்றார்.

காலை முதல் கொடுத்து சளைத்து போயிருந்த அர்ஜுனன் "நானாவது இவ்வளவு கொடுத்து விட்டேன். அந்த கர்ணனால் இதுகூட முடியாது" என்றான்.

"அப்படி சொல்லாதே." என்றான் கிருஷ்ணன்.

"அதெல்லாம் முடியவே முடியாது" என்றான் அர்ஜுனன்.

உடனே கர்ணனை அழைத்து வரச் சொன்னார் கிருஷ்ணர். வந்தான். "கர்ணா சூரிய அஸ்தமனத்திற்குள் இந்த மலை தானம் செய்து விடு பார்க்கலாம்" என்றார்.

அவன் உடனே அந்த வழி போன இருவனை அழைத்து "ஆளுக்கு ஒரு மலையாக எடுத்துக் கொள்ளுங்கள்" என்றான். வேலை முடிந்தது. அர்ஜுனனை அர்த்தத்தோடு பார்த்தார் கிருஷ்ணர் அவன் தலை குனிந்து நின்றான்.



சப்தமேயில்லாமல் பெரிய பெரிய சாதனைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள், விளம்பர வெளிச்சம் விரும்பாத பல விருதுநகர் வாசிகள். அவர்களில் யாருக் கெல்லாம் விருது கொடுக்கலாம் என்று விசாரித்ததில் அதிக வாக்குகள் பெற்ற ஐந்து பேரை இங்கே அறிமுகம் செய்கிறோம்.

சர்ப்பம் முருகவேல்


கண்தானம் செய்வதில் தமிழகத்திலேயே முதலிடத்தில் இருக்கும் கும்பகோணத்தை விரைவில் விருதுநகர் வென்றுவிடும் என்பது உறுதி. காரணம் இந்த முப்பது வயது இளைஞர். சிடி லைப்ரரி நடத்திக் கொண்டு, சமூக சேவையில் தீவிரம் காட்டும் இவர் கடந்த 1998ல் தொடங்கி இதுவரை ஐம்பத் தெட்டு பேருக்குக் கண்ணொளி கிடைக்கச் செய்த காரணக் கண்மணியாக விளங்கு கிறார். விருதுநகரில் யாராவது இறந்துவிட் டால் அது நடு இரவு என்றாலும், அடுத்த பத்து நிமிடத்திற்குள் இவருக்குத் தகவல் கிடைத்து அங்கே பறந்துவிடுகிறார். இறந்தவ ரின் உறவினர்களிடம் இதமாக எடுத்துச் சொல்லி, இறந்து மூன்று மணி நேரத்துக்குள் உள்ளூர் டாக்டர்களைக் கொண்டு, அறுவை சிகிச்சை மூலம் கண்களை எடுத்து, மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்குக் கொடுத்துவிடுகிறார். இரவு எத்தனை மணிக்கு முருகவேல் கூப்பிட்டாலும் கண் களை இலவசமாய் அகற்றித் தருகிறார் களாம் கிரிதரன், கானிதாஸ் ஆகிய இரு மருத்துவர்கள். கண் தானம் செய்த குடும்பத் திற்கு, மறுநாளே பாராட்டுப் போஸ்டர் அடித்து, ஊரெங்கும் ஒட்டிவிடும் இவர், இதுவரை இரண்டாயிரம் யூனிட்டுகள் இரத்ததானமும் செய்திருக்கிறார். அதுவும் கூட அரசு மருத்துவமனைக்கு. இவரது முக வரி அட்டையில் எழுதியிருக்கும் வாசகம், "எடுத்துச் செல்ல எதுவுமில்லை, கொடுத்துச் செல்ல இருவிழிகள் உள்ளன." சர்ப்பம் முருகவேலை 09843098618 என்ற ஏர்செல் பேசியில் பிடிக்கலாம்.

டாக்டர் எஸ்.எம்.ரத்தினவேல்

விருதுநகர் கஸ்தூரிபா சாலையில் தனியார் மருத்துவமனை நடத்தி வரும் இவரைத் தேடி வந்து விடுகிறார்கள் குழந்தைகள் இல்லாத தம்பதிகள். குறிப்பாக காஸ்ட்லியான சிகிச்சை செய்து கொள்ள முடியாத ஏழைத் தம்பதிகள் பலரும் இவ ரைத் தெய்வமென்றே சொல்கிறார்கள்.



• இரத்த வங்கி



• சந்திரன்

சேலம், தர்மபுரி, திண்டுக்கல் பகுதிகளில், பெண் சிசுக் கொலை தடுப்பிலும் கண் காணிப்பிலும் ஈடுபட்டு வரும், அரசு சாராத சேவை நிறுவனங்களுக்கும் குழந்தை யில்லாத பெற்றோரை அறி முகம் செய்து வைக்கிறார். சிசுக்கொலையிலிருந்து மீட் கப்படும் பெண் குழந்தை களைச் சந்தோஷமாக தத்து எடுத்துச் செல்கிறார்கள்,



• சந்திரன் நடவு செய்த மரங்கள்

விருதுக்குரியவர்கள்!

சம்பந்தப்பட்ட பெற்றோர். "குழந்தைகளைக் கொடுக்கும், வரிய பெற்றோர், தத்தெடுக்கும் பெற்றோர் ஆகிய இரு தரப்பினரின் விவரங் களைக் குழந்தையின் எதிர்காலம் கருதி ரகசியமாக வைக்கிறோம்" என்று சொல்லும் இந்த மருத்துவரின் வழிகாட்டலில் இது வரை ஐம்பதிற்கும் அதிகமான குழந்தை களுக்குப் புதிய முகவரி கிடைத்திருக்கிறது.

வி. தனசாமி

'இவர் மட்டும் அரசியலுக்கு வந்திருந் தால் இன்னொரு காமராஜர்தான்' என்று தைரியமாய்ச் சொல்கிறார்கள் விருது நகர்க் காரர்கள். சிறு வயதில் படிக்கும் வசதி இல்லாமல், மும்பையில் சிறு கடையில் வேலைக்குச் சேர்ந்து உழைத்தவர். பிறகு குஜ ராத் மாநிலத்தில் உஞ்சா என்ற ஊரிலிருந்து சீரகம் ஏற்றுமதி செய்து செல்வந்தராக உயர்ந்தவர். தற்போது விருதுநகரில் எல்லோ ராலும் பாராட்டப்படும் இவரது சேவை களில் முக்கியமானது மெடிக்கல் டிரஸ்ட் மூலம் ஏழை மக்களுக்குச் செய்து வரும் இல வச மருத்துவ சிகிச்சை. வி. தனசாமி - பரிமளா தேவி இரத்த வங்கியும் நடத்து கிறார். 1995ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த இரத்த வங்கி, தமிழ்நாட்டில் உள்ள மூன்று முக்கிய இரத்த வங்கிகளில் ஒன்றாக விளங்குகிறது. எஞ்சிய இரண்டு இரத்த வங்கிகள் சென்னை மற்றும் கடலூரில் உள்ளன. இந்த இலவச இரத்த வங்கியில் எந்த நேரமும், எந்தப் பிரிவு இரத்த மும் கிடைக்கிறது. அறுபது சதவீதம் வெளியூர்களுக்குத்





• இரத்தினவேல்



• சர்ப்பம் முருகவேல்



• முகமது எகியா

தரப்படுகிறது. இரத்த வங்கி தவிர, விடோ டிரஸ்ட் மூலம் விதவைகளின் குழந்தைகளுக்குத் தேவையான அனைத்து உதவிகள், எஜுகேஷன் டிரஸ்ட் மூலம் உயர்கல்விக்கு உதவி, முதியோர் இல்லம், இலவச கல்யாண மண்டபம் என்று பெரிய பட்டியலே போடலாம்.

மு. முஹம்மது எகியா

மாவட்ட நுகர்வோர் உரிமைக் கமிட்டியின் மூலம் இவர் செய்து வரும் பணிகள் ஏராளம். கடந்த இருபத்து நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து, நகரசபை பள்ளி, மாணவ, மாணவிகளுக்கு இலவச சீருடைகள், நோட்டுப் புத்தகங்கள் வழங்கி வருகிறார். அரசு அலுவலகங்களில் ஏறி இறங்கி சான்றிதழ்களை வாங்க நேரமில்லாதவர்கள் இவரின் வீட்டைத் தட்டுகிறார்கள். ஒரு பைசா கூட இலஞ்சம் கொடுக்காமல் ரேசன் கார்டுகள் முதல் ஜாதி சான்றுகள் வரை வாங்கிக் கொடுத்து, எல்லோரது இதயங்களிலும் இடம் பிடித்திருக்கிறார். இரத்த தான முகாம்கள், மருத்துவ முகாம்கள் நடத்தி வரும் இவர், அடிக்கடி மத நல்லிணக்க கூட்டங்கள் நடத்தி, விருது நகரின் சமுதாய அமைதிக்குப் பெரிதும் துணை புரிந்து வருகிறார்

என். சந்திரன்

வெறும் ஆயிரம் ரூபாய் மாத வருமானம் ஈட்டும் இந்த இருபத்து நான்கு வயது இளைஞர், எல்லோரது கவனத்தையும் கவர்ந்துவிட்டவர். கடந்த ஐந்து ஆண்டுகளாகச் சாலையோரங்களில் மரம் நட்டு வரும் இவர், தொடர்ந்து அவற்றைக் குழந்தைகள் போல பராமரித்து வருபவர். இவர் நட்ட இருபத்து நான்கு மரங்கள், சாலை ஓரங்களில் இப்போது குளிர்ச்சியாக நிழல் கொடுத்துக் கொண்டிருக்கிறன. ●

கிருஷ்ண கிருஷ்ணா!

ஒருமுறை கிருஷ்ணரை விருந்துக்கு அழைக்க நினைத்தனர் பாண்டவர்கள். இது பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது, அர்ஜுனன் சொன்னான்.

"அதற்கென்ன நாளையே நீ விருந்துக்கு ஏற்பாடு செய். நான் கிருஷ்ணனை அழைத்து வந்து விடுகிறேன்."

மறு நாள் விருந்து ஏற்பாடாகியது. அர்ஜுனன் போய் கிருஷ்ணனை அழைத்தான். அதற்குக் கிருஷ்ணன் "இன்று எனக்கு முக்கிய வேலை இருக்கிறது. நான் வர இயலாது" என்று கூறிவிட்டார்.

அர்ஜுனன் வருத்தத்தோடு திரும்பி வந்து விஷயத்தைச் சொன்னான். உடனே தருமர் "நான் போய் அழைத்துப் பார்க்கிறேன். சமைத்தது வீணாகி விடுமே" என்று புறப்பட்டுப் போனார்.

ஆனால் கிருஷ்ணரோ தருமரின் அழைப்புக்கும் வரவில்லை.

உடனே பீமன், நான் அவரை வரவழைக்கிறேன் என்றான்.

"தருமரும் அர்ஜுனனும் கூப்பிட்டபோது வராதவர் நீ அழைத்தால் வந்து விடுவாரா?" என்று எல்லோரும் அவனைக் கேலி செய்தனர்.

ஆனால் அது குறித்து கவலைப்படாத பீமன், பக்கத்தில் இருந்த மைதானத்திற்குச் சென்று தனது 'கதை' ஆயுதத்தை வானத்தில் விட்டெறிந்தான்.

அதற்கு நேராய் தலையைக் கொடுத்த பீமன், "கிருஷ்ணா நீ இங்கு வர வேண்டும். இல்லை இந்தக் கதை என் தலையில் மோதி, என்னுயிர் போகட்டும்" என்று வேண்டிக் கொண்டான்.



வானில் வீசிய கதை வேகமாக பீமன் தலை நோக்கி கீழே விழுந்து கொண்டிருந்தது. பீமன் அசையாமல் நின்றான். கதை அவன் தலையில் மோதும் முன் கிருஷ்ணர் ஓடி வந்து தடுத்தார்.

கிருஷ்ணனை அணைத்து கொண்ட பீமன், 'வா கிருஷ்ணா அப்படியே சாப்பிட்டுப் போகலாம்' என வீட்டுக்குக் கூட்டி வந்து விட்டான்.

எல்லோருக்கும் ஆச்சரியமாகிவிட்டது. கிருஷ்ணர் சொன்னார். "எல்லோரிடம் நம்ம கிருஷ்ணன்தானே கூப்பிட்டால் வந்து விடுவார் என்ற அலட்சியமிருந்தது. பீமனோ நான் வராவிட்டால் உயிரை விடவே ஆயத்தமாக இருந்தான். அந்த அன்புக்குக் கட்டுப்பட்டே வந்தேன்" என்றார்.


உண்மையான அன்பு எதையும் சாதிக்கும். ●



ஆஸ்துமா, ஈஸ்னோபிலியா, அலர்ஜி, சைனஸ், காசநோய்களுக்கு தெய்வீக மூலிகை சிகிச்சை



பல வருட ஆராய்ச்சியின் மூலம், வேதங்களும், ஞானிகளும் போற்றியதும், கடவுளுக்கு சமமாகவும், நம் நாட்டின் பல பொக்கிஷங்களில் ஒன்றாகவும் கருதக் கூடிய பல தெய்வீக மூலிகைகளைக் கொண்டு பக்க விளைவுகள் இல்லாதவகையில், தாமே தயார் செய்த தெய்வீக மூலிகை மருந்துகள் மூலம் குழந்தைகளுக்கு வரும் பிரைமரி காம்ப்ளக்ஸ், எதிர்ப்பு சக்தி குறைவின் காரணமாக வரும் டஸ்ட் அலர்ஜி, சீதோஷ்ண நிலை மாற்றத்தால் வரும் மூக்கில் நீர் வடிதல், சளி, தும்மல், தொடர் இருமல், சுவாசிக்க முடியாதபடி மூக்கடைப்பு, சைனஸ், தொண்டை கரகரப்பு, தலைவலி, மலச்சிக்கல், ஈஸ்னோபிலியா, மூச்சு விடும் போது விசில் சத்தம் வருதல் (நின்றால் - நடந்தால் - படுத்தால் - மூச்சு வாங்குதல்) சாப்பிட முடியாமை, உடல் மெலிவு, உடல் வெளுத்து காணப்படுதல் போன்ற அறிகுறிகளை உடைய **ஆஸ்துமா** நோய்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கப்படுகின்றது மற்றும் **எய்ட்ஸ், எல்லாவித புற்றுநோய், BP இதய நோய், சிறுநீரக கோளாறு, சர்க்கரை வியாதி, ஆண்மைக் குறைவு, குழந்தையில்லாத குறை, அல்சர் மூட்டுவலி, சொரியாசிஸ்** போன்றவைகளுக்கு சிறப்பான ஆலோசனைகளுக்கும் & சிகிச்சைக்கும் அணுக வேண்டிய முகவரி.



தெய்வீக மூலிகை வைத்தியர்கள் **Chennai Cell : 9841045138 Vellore Cell : 9842369696**

தலைமை முகவரி : Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, Dr.M.சிவசக்தி, S/o Dr.C.K.மாணிக்கவாசகம்

P.B.No:30, No.3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர், வேலூர் Dt. - 635 601 ✆ 04179-20469, 22769

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 10

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7 ✆ 6424285, 6427638

ஒவ்வொரு மாதமும் வெளியூர்களில் டாக்டரை நேரில் சந்திக்க

வேலூர் 2ந் தேதி - 12 pm to 2 pm (N.S.R.லாட்ஜ்) 26/A, ஆரணி ரோடு, (கண் ஆஸ்பத்திரி அருகில்) ✆ : 0416 - 213159	**காஞ்சிபுரம்** 2ந் தேதி - 5 pm to 6 pm ராஜம் லாட்ஜ், (பஸ் நிலையம் அருகில்) காமராஜர் தெரு, ✆ : 04112 - 22519	**கடலூர்** (S.A.D.L) 4ந் தேதி - 9 am to 11 am ஆற்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல், ✆ : 04142 - 330707, 330717	**விழுப்புரம்** 4ந் தேதி - 2 pm to 3 pm ஹோட்டல் ஆனந்த், பஸ் நிலையம் எதிரில், ✆ : 04146 - 22962, 24960	**திருவண்ணாமலை** 4ந் தேதி - 5 pm to 6 pm ராஜா லாட்ஜ், (பஸ் நிலையம் எதிரில்) ✆ : 04175 - 22536
மும்பை 7 & 8ந் தேதி - 10 am to 8 pm The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga (CR), ✆ : 022 - 4011589,4083879	**பெங்களூர்** 9ந் தேதி - 11 am to 1 pm ஹோட்டல் பிரட்வே, (கல்பனா தியேட்டர் அருகில்) கெம்பகவுடா ரோடு. ✆ : 080-2296374,2873013	**ஓசூர்** 9ந் தேதி - 4 pm to 5 pm சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட், ✆ : 04344 - 42899, 43321	**சேலம்** 12ந் தேதி - 11 am to 1 pm ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில், ✆ : 0427 - 449333, 449332	**ஈரோடு** 12ந் தேதி - 4 pm to 6 pm ஹோட்டல் ஆக்ஸ்போர்டு, பஸ் நிலையம் எதிரில், ✆ : 0424 - 226611/12/13/14
கோயம்புத்தூர் 13ந் தேதி - 9 am to 1 pm சேரன் டவர்ஸ் லாட்ஜ் (சாந்தி தியேட்டர் பின்புறம்) ✆ : 0422 - 302211, 302220	**மதுரை** 14ந் தேதி - 9 am to 11 am ஹோட்டல் கிரண்ட்ஸ் சென்ட்ரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு, ✆ : 0452 - 743941	**தஞ்சாவூர்** 14ந் தேதி - 5 pm to 7 pm அசோகா லாட்ஜ், தஞ்சாவூர். ✆ : 04362 - 30021, 30022	**திருச்சி** 15ந் தேதி - 9 am to 11 am ஹோட்டல் ஆனந்த், (சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில்) ✆ : 0431 - 415545	**நாமக்கல்** 15ந் தேதி - 2 pm to 4 pm ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, நாமக்கல். ✆ : 04286 - 20433, 21336
நியூடெல்லி 18 & 19ந் தேதி - 10 am to 8 pm South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh. ✆ : 011-5717126,5723651	**தர்மபுரி** 22ந் தேதி - 8 am to 10 am ஸ்ரீ மாதேஸ்வரா லாட்ஜ், 103, அதியமான் கைபான் ரோடு, ✆ : 04342 - 60226, 61472	**திருப்பூர்** 22ந் தேதி - 2 pm to 3 pm ராமகிருஷ்ணா லாட்ஜ், ஈஸ்வரன் கோவில் தெரு, ✆ : 0421 - 740418	**உடுமலைப்பேட்டை** 22ந் தேதி - 6 pm to 7 pm ஹோட்டல் குறிஞ்சி, (பஸ் நிலையம் எதிரில்) ✆ : 04252 - 24353	**திண்டுக்கல்** 23ந் தேதி - 9 am to 11 am ஹோட்டல் குறிஞ்சி, பஸ் நிலையம் பின்புறம். ✆ : 0451 - 421056, 427017
தூத்துக்குடி 23ந் தேதி - 5 pm to 6 pm ஹோட்டல் ஆல்வின், தேவர்புரம் ரோடு, ✆ : 0461 - 327780	**திருநெல்வேலி** 24ந் தேதி - 8 am to 11 am ஹோட்டல் ஸ்ரீ சித்தபதி, மதுரை ரோடு, ✆ : 0462 - 333312	**நாகர்கோவில்** 24ந் தேதி - 2 pm to 3 pm ஹோட்டல் சஞ்சய், மீனாட்சிபுரம் ✆ : 04652 - 36078	**விருதுநகர்** 25ந் தேதி - 8 am to 10 am அண்டன் லாட்ஜ், மதுரை ரோடு, ✆ : 04562 - 45537	**கரூர்** 25ந் தேதி - 2 pm to 4 pm ஆதி லாட்ஜ், ஜவகர் பஜார் ✆ : 04324 - 63763, 62663

தகவல் : SUN, RAJ, VIJAY, DD T.V. களில் எமது பேட்டியை காணத் தவறியவர்கள். டாக்டரின் மூலிகைகள் பற்றிய 28 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய **"எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்"** இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய **"என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்"** என்ற இரு புத்தகத்தையும் பதிவுத் தபாலில் பெற ரூ.200/- மேற்கண்ட முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

உதா பார்த்திபன்

எட்டேகால் சிதம்பரவிலாஸ் என்பது கோட்டபாளையம் கிராமத்தின் அத்யாவசிய தேவைகளில் ஒன்று. ஒன்பது மணிக்குத் துறையூரைச் சென்றடையும். பள்ளி மாணவ மாணவிகள், அலுவலகவாசிகள் என எல்லோருக்கும் தோதான நேரம். துறையூரில் இறங்கி திருச்சி பேருந்து பிடித்துப் பத்து மணிக்குள் வங்கிக்குச் செல்லும் பணியாளர்களும் உண்டு. ஆகையால் ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை தவிர, மற்ற தினங்களில் கூட்டம் நிரம்பி வழியும்.

அன்று சிதம்பர விலாஸில் ஏறியவர்களுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. காரணம் –

காக்கி பேண்ட், காக்கி சட்டை, குதிரை வால் கொண்டை, தோளில் லெதர் பேக் என புதிய கண்டக்டர் – இருபது வயது இளம் பெண் கண்டக்டர்!

சிதம்பரவிலாஸின் உரிமையாளர் அவ்வப்பொழுது புதுமையாக ஏதேனும் செய்வதில் ஆர்வமுள்ளவர். அதில் இதுவும் ஒன்று போல.

''என்னப்பா... புது அப்பாயிண்ட்மெண்ட்டா?''– ஒரு சிலர் ட்ரைவரிடம் விசாரித்தார்கள்.

"ஆமாண்ணே... பழனிவேலுக்குப் பதிலா போட்டிருக்காங்க."

''அவனுக்கு என்னாச்சி?''

"குளித்தலை 'ரூட்'டுக்குப் போயிட்டான். இந்தப் பொண்ணு இத்தனை நாளா அதில தான் ஓடிக்கிட்டு இருந்தது..."

''இந்த 'ட்ரிப்'பைச் சமாளிக்குமா?''

"பார்த்தாதான் தெரியும்!"

பேருந்து அங்கிருந்து கிளம்பும்பொழுதே கூட்டம் மூச்சு முட்டியது. வழியில் ஆங்காங்கே நிறுத்தி மேலும் பலர் ஏறினார்கள். படிக்கட்டுகளில் இளைஞர் பட்டாளம்.

அவள், "படியில் யாரும் நிக்காதீங்க. உள்ள வாங்க!" என பலமுறை உரக்கக் கத்தினாள். யாரும் பொருட்படுத்தவில்லை. உடனே விசில் ஊதினாள். வண்டி



கண்டக்டர்

நின்றது.

"படியில நிக்கறவங்க உள்ள வந்தாதான் பஸ் கிளம்பும்!"

"அட... தினம் நாங்க இப்படித்தான் போறோம். இதுக்குப் போய் பஸ்ஸை நிறுத்திக்கிட்டு..."

"யாராவது தவறி கீழே விழுந்தா நான் தானே பதில் சொல்லணும்!"

"அதெல்லாம் விழ மாட்டோம். நேரத்தை வேஸ்ட் பண்ணாம 'ரைட்' குடும்மா... எல்லாரும் ஆபீஸ் போறவங்க..."

ட்ரைவர் இரண்டு மூன்று முறை சங்கேதமாக ஹாரன் அடித்தார். 'போகலாமா?' என்பது அதன் பொருள்.

"கொஞ்சம் இருங்கண்ணே!" படிக்கட்டை நெருங்கி ஒவ்வொருவரையும் நகர்த்தி மேலேற்றினாள். விறைப்பும் முறைப்புமாக நகர்ந்தனர்.

வைரிசெட்டிப்பாளையத்திலும், கொப்பம் பட்டியிலும் மேலும் கூட்டம் ஏறியது. அடுத்து உப்பிலியாபுரம். அதற்குள் டிக்கெட் போட முடியாது போல அவளுக்குத் தோன்றியது.

"அண்ணே... கொஞ்சம் ஓரங்கட்டி நிறுத்துங்க..." உடனே பயணிகளிடம் சலசலப்பு.

"போச்சு... இன்னைக்கு கரெக்ட் டயத்துக்குப் போய்ச் சேர்ந்த மாதிரிதான்."

"சரியா ஒன்பது மணிக்குள்ள அட்டெண்டென்ஸ்ல கையெழுத்துப் போடலேன்னா ஹெச்.எம். முசுடு திட்டும். இன்னிக்கு வாங்கிக் கட்டிக்க வேண்டியதுதான்."

"ரூட் புதுசு... அதான் கொஞ்சம் சிரமமாயிருக்கு... போகப் போக பழகிடுவேன்..." என்றாள் அவள் அனைவருக்கும் பொதுவாக.

"அப்ப வேற ட்ரிப்ல வந்து பழகிக்கணும். இதில வந்துதான் எங்களைச் சோதிக்கணுமா?"

நம்ம 'ரூட்'டுக்குப் பொம்பளை கண்டக்டரைப் போட்டா சரிப்படுமா... யோசிக்காம 'ஓனர்' தூக்கிப் போட்டுட்டாரு..."

"நமக்கும் இதைவிட்டா வேற கதியில்ல..."

"எல்லா இடத்திலயும் மினிபஸ் ஓடுது. இங்க ஒண்ணும் வர மாட்டேங்குதே..."

உப்பிலியாபுரத்திலும் கணிசமான கூட்டம் முண்டியடித்தது. அதில் வம்பு செய்யும் வர்க்கமும் இருந்தது.

"துறையூர் ஒண்ணு!" என காசை நீட்டுகையில் ஒருவனின் முழங்கை





"அந்தப் போர் வீரனை எதற்குக் கைது செய்தீர்கள் தளபதி?"

"உடைவாளைப் போட்டு பேரீச்சம் பழம் வாங்கித் தின்றுவிட்டான் மன்னா!"

— எஸ். தமிழ்மணி

அவன்மீது வேண்டுமென்றே பட்டது.

"ஸ்லோவாவே போங்கண்ணே... டிக்கெட் போட்டுடறேன்."

"டேய்... பின்னால ஒரு மாட்டு வண்டி வருது பாரு... அதில ஏறிக்கலாம். சீக்கிரமாவது போய்ச் சேரலாம்."

"ஏம்மா... மணி எட்டே முக்கால் ஆயிடுச்சு. தினம் இந்நேரம் வண்டி சிக்கத்தம்பூரைத் தாண்டியிருக்கும். இன்னைக்கு இன்னும் கிருஷ்ணாபுரமே வந்தபாடில்ல. வேகமா போகச் சொல்லும்மா... ப்ரைவேட் பஸ்தானே... ஸ்டேஜ் வர்றதுக்குள்ள டிக்கெட் போடலேன்னா என்ன...?"

"திடீர்னு 'செக்கர்' வந்தா என்ன சார் செய்யறது?"

"நாங்க அவர்கிட்ட சொல்றோம்!"

"எந்த வேலையை யார் செய்யணும்னு இருக்கு. பொம்பளைங்க எல்லாம் ஆம்பளைங்களுக்குச் சமம்னு சொல்லிக்கிட்டு எல்லா துறையிலயும் நுழையறாங்க. கடைசியில் என்ன ஆகுது? இந்த மாதிரி மத்தவங்க உயிரை வாங்க வேண்டியதுதான். டிக்கெட் எழுத ரெண்டு நிமிஷம்... கிழிச்சிக் கொடுக்க ரெண்டு நிமிஷம்... காசு வாங்க ரெண்டு நிமிஷம்... இதே ஆம்பளையா இருந்தா பரபரன்னு செய்ய மாட்டானா?"

"நன்னா சொன்னேள். கன்டக்டர் வேலையெல்லாம் பொம்மனாட்டிக்குச் சரி வருமா...? புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுண்டா போலதான்..."

அப்பொழுதுதான் அவன் அதைக் கவனித்தாள். உடனே கூட்டத்தை விலக்கி மனிதர்களினூடே நுழைந்து முன்னேறி அவனின் கையைப் பற்றினாள்.

"ஏண்டா... பிக்பாக்கெட்டா அடிக்கிறே!"

"மேடம்..." என்றான் அவன் உக்கிரமாக. அவனுக்கு முப்பது வயதிருக்கும். மிக சுத்தமாக உடையணிந்திருந்தான். கண்களில் ரிம்லெஸ் கண்ணாடி. சந்தேகத்தைத் தோற்றுவிக்காத தோற்றம்.

"யாரைப் பார்த்து என்ன கேக்கறீங்க?" என்று மேலும் உருமினான். அவள் சட்டென்று அவனது சட்டைக்குள் கைவிட்டு அந்தப் பர்ஸினை எடுத்தாள்.

"ஐயோ... இது என்னோட பர்ஸ்..." என்று பக்கத்தில் நின்றிருந்த வயதான மனிதர் அலறினார்.

பேருந்து நின்றது. அவன் வேகமாகப் படிக்கட்டை நோக்கி நகர முயன்றான். அவள் அவனை விடவில்லை. அவன் தனது இடது கையைப் பாக்கெட்டில் விட்டு ப்ளேடை எடுத்து விரல்களுக்கிடையில் செருகி அவளது முகத்தை நோக்கி காற்றில் கோலம் போட்டான். அவள் சற்றும் பதற்றப்படாமல் அவனது இடது கையையும் லாவகமாக பற்றி, மணிக்கட்டைத் திருகினாள்.

"ஆ..." அவன் வலிதாளாமல் அலறினான்.

"என்னாச்சி...!"

"என்னாச்சி..."

சுற்றி நின்றிருந்தவர்கள் பரபரத்தார்கள்.

"இவன் கையைக் கட்டுங்க... துறையூர் ஸ்டேஷன்ல ஒப்படைச்சிடலாம்...."

"நான் உன்னைச் சும்மா விடப்போறதில்லடி..."

"இந்தப் பூச்சாண்டி மிரட்டலுக்கெல்லாம் பயப்படற ஆள் நானில்ல... இந்தாங்க சார்... உங்களோட பர்ஸ்."

வயதான மனிதரிடம் நெகிழ்ச்சி கண்ணீர்.

"என் மனைவியோட ஆபரேஷன் செலவுக்காக வீட்ல இருந்த நகைகளை அடகு வைச்சி இந்தப் பணத்தை எடுத்துக்கிட்டுப் போறேன். இது மட்டும் பறிபோயிருந்தா அவள என்னால காப்பாத்த முடியாம போயிருக்கும். நல்லவேளை... தெய்வம் மாதிரி நீ வந்து உதவி பண்ணிட்டே... ஆமா... சுத்தி நிக்கற இவ்வளவு பேர் கவனிக்காததை நீ மட்டும் அங்கயிருந்து எப்படிம்மா கவனிச்சே...?"


அவள் கண்கள் ஒருமுறை வலம் வந்து நின்றது.

"உங்களைச் சுத்தி நிக்கற எல்லா 'ஆம்பளை'ங்களுமே இவனோட செய்கையைக் கவனிச்சது எனக்குத் தெரியும். ஆனா என்ன செய்ய... வாயளவில இருக்கிற வேகமும் தைரியமும் மனசளவில் இல்லாம போயிடுச்சு..." என்றாள்.

அதன் பின் பேருந்து துறையூரை அடையும் வரை பஸ்ஸில் மௌனம் நீடித்தது. ○



ஆனைக்குட்டம் அநியாயம்!



• திறந்து கிடக்கும் நீர்த்தேக்கம்

'தண்ணியில்லாத காட்டுக்கு மாத்திடுவோம்' என்று எச்சரிக்கப்பட்டால் அநேகமாக அது இராமநாதபுரம் அல்லது விருதுநகராகத்தான் இருக்கும்... இன்றைக்கும் விருது நகர் 'பனிஷ்மெண்ட் ஏரியா'வாக பயமுறுத்திக் கொண்டிருக்கிறது குடிநீர் பிரச்னையில். மூன்று நாட்களுக்கு ஒருமுறை மாநகராட்சி குடிநீர் விநியோகிக்கப்படும். விருதுநகருக்கு இதுவரை நிரந்தர குடிநீர்த் திட்டம் எதுவும் இல்லை.

விருதுநகரின் எல்லையை ஒட்டி ஓடிவரும் கௌசிகாமா நதி, நகரின் கழிவுகளால் மூச்சுத் திணறிக் கொண்டிருக்க, அது முற்றிலும் பயனற்றுப் போய் விட்டது. விருதுநகரையொட்டிப் பாயும் அர்ஜுனா நதி, வைப்பாறு ஆகிய இரண்டு ஆறுகளும், சாத்தூர் - இருக்கன்குடி மாரியம்மன் கோவில் அருகே இணைகின்றன. இந்த இடத்தில் நதியைத் தேக்கி ரூபாய் எழுபத்து இரண்டு கோடி செலவில் இருக்கன்குடி நீர்த்தேக்கத்தைக் கட்டி வருகிறது தமிழகப் பொதுப் பணித்துறை. கட்டுமானப் பணிகள் முடிவுறும் தருவாயில் இருக்கும் இந்த அணைக்கு நபார்டு வங்கி பத்தொன்பது கோடி ரூபாய் கொடுத்து உதவுகிறது.



• நேஷனல் செல்லையா

விருதுநகரில் இருந்து முப்பது கிலோ



• தோல்வியுற்ற தடுப்புமுறை

மீட்டரில் கட்டப்பட்டு வரும், இந்த அணைக்காக மல்லிகைத் தோட்டம், கொய்யாத்தோட்டம், பருத்திக்காடு போன்ற பணப் பயிர் விளையும் நிலங்களை விருது நகர் மாவட்ட விவசாயிகள் பலரும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த அணையிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர் கூட விருதுநகருக்குக் கிடையாது. காரணம் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விளாத்திக்குளம், நாகலாபுரம் தாலுகாக்களில் உள்ள எழுபத்து நான்கு கிராமங்களுக்குக் குடிநீர் வழி ஏற்படுத்தவே இந்த அணை எழுந்து கொண்டிருக்கிறது.



• செல்வம்

விருதுநகர் மாவட்டத்தில் நிரந்தர குடிநீர் பஞ்சம் மிகுந்த பகுதிகளில் ஓடிவரும் இந்த ஆறுகளில் உள்ள தண்ணீரை, அந்தப் பகுதி மக்களே அடுத்த மாவட்டத்திற்குக் கொடுக்கும் கூத்து ஒரு பக்கம் இருக்கட்டும். "வைகையிலிருந்து மதுரை திருமங்கலம் வழியாக விருதுநகருக்குக் குடிநீர் திட்டம், அழகர் அணையிலிருந்து குடிநீர், பாபநாசம் அணையிலிருந்து சிவலப்பேரி வழியாக குடிநீர், கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாய்ந்து அரபிக் கடலில் வீணே கலக்கும் பம்பை - அச்சன் கோவில் திட்டம் போன்ற கவர்ச்சிகரமாக் குடிநீர்த் திட்டங்களைப் பற்றி ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளும் வாய் கிழிய மீடியாவுக்குப் பேட்டி கொடுப்பதோடு சரி... காரியத்தில் பூஜ்ஜியம்" என்று கொதிக்கிறார் விருதுநகர்வாசியான நேஷனல் செல்லையா.

"இது போன்ற கனவும், கற்பனையும் மிகுந்த நீர்த் திட்டங்களைப் பற்றிப் பேசுவதை விட்டுவிட்டு, ஆனைக்குட்டம் அணையைப் புனரமைத்தாலே விருது நகருக்கு நிரந்தர குடிநீர்த் திட்டம் ரெடி. ஆனால் இந்த அணை ஊழல் மலிந்த பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறவரை இது சாத்தியமில்லை" என்று குமுறுகிறார் இவர். எங்கேயிருக்கிறது ஆனைக்குட்டம் அணை?

விருதைத் தந்தை என்று அழைக்கப் பட்ட வி.வி. ராமசாமி, நகர்மன்றத் தலைவராக இருந்தபோது, விருதுநகரிலிருந்து பத்தொன்பது கிலோமீட்டர் தொலைவில் அமையப் பெற்றிருக்கும் ஆனைக்குட்டம் அணையிலிருந்து, பாதுகாப்பான குடிநீர்த் திட்டத்தை முதன் முறையாக அமல்படுத்தியிருக்கிறார். அர்ஜுனா நதியின் குறுக்கே, ஆனைக்குட்டம் கிராமத்தில் பொதுப் பணித்துறையால் கட்டப்பட்டதுதான் இந்த நீர்த்தேக்கம்...

இந்த அணை கட்டப்பட்டபோது ஆனைக்குட்டத்தைச் சுற்றிய விவசாய நிலங்கள், ஓரளவு பாசன வசதி பெற்றன. ஆனால் இப்போது அணையைச் சுற்றி ஒரு ஏக்கர் விவசாய நிலம் கூட கிடையாது. தீப்பெட்டித் தொழிற்சாலைகளும், டின் தொழிற்சாலைகளும்தான் இருக்கின்றன.

இவ்வணை நிறைந்தாலும் மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்யும் மழையால் வருடத்திற்கு மூன்று முறை அணை நிறைய வாய்ப்பு இருந்தும் வசதி இல்லை. தடுப்புக் கதவுகளின் அமைப்பு சரியில்லாததால் தண்ணீர் தேங்கினால் அணை உடையும் அபாயம்! இதனால் கட்டியது முதல் திறந்தே வைத்திருக்கிறது புத்திசாலிப் பொதுப்பணித் துறை. இதனால் மழை வரும்போது நிரம்பத் தொடங்கும் அணையின், தண்ணீர் முழுவதும், பத்தே நாட்களில் வடிந்துவிடும்... ஆனால் ஒருமுறை நிரம்பும் தண்ணீரைக் கொண்டு, ஓராண்டு முழுமைக்கும் விருது நகருக்குத் தண்ணீர் கொடுக்கலாம் என்கிறது புள்ளி விவரம்.

ஆனைக்குட்டம் அணையின் நீர்த் தடுப்புக் கதவுகளை முற்றிலுமாக நீக்கிவிட்டு, வெற்றிகரமான புதிய தொழில்நுணுக்கக் கதவுகளை நிறுவினாலே விருதுநகருக்கு நிரந்தரக் குடிநீர் திட்டம் ரெடியாகிவிடும்...

"இதற்கு அதிகபட்சமாய் இருபத்தைந்து கோடிகள் செலவாகும்... ஆனால் மக்கள் பிரதிநிதிகளும், அதிகாரிகளும், பலநூறு கோடிகளை விழுங்கும் கூட்டுக் குடிநீர் திட்டங்களில் எலும்புத் துண்டுகளை எதிர் பார்த்து, ஆனைக்குட்டத்தை இருட்டடிப்பு செய்யப் பார்க்கிறார்கள்'' என்கிறார் ஆனைக்குட்டம் கிராம பட்டதாரியான செல்வம்.

கண் இருந்தும் பார்வையில்லை என்பதைப் போல தண்ணீர் இருந்தும் விருது நகரின் தாகம் அலட்சியப்படுத்தப்பட்டு வரும் அநியாயத்தை என்னவென்பது? ○

கம்ப்யூட்டர் நூல்கள்

அவுட் லுக் எக்ஸ்பிரஸ்	ரூ.	150.00
இன்டர்நெட் எக்ஸ்புளோரர்	ரூ.	100.00
இன்டர்நெட் (பத்தாவது பதிப்பு)	ரூ.	150.00
ப்ரண்ட் பேஜ்	ரூ.	132.00
அடோப் பேஜ் மேக்கர்	ரூ.	35.00
போட்டோஷாப்	ரூ.	100.00
கோரல் டிரா	ரூ.	100.00
எம்.எஸ்.வேர்ட் 2000.	ரூ.	132.00
எம்.எஸ்.வேர்ட் 2000 Quick Reference	ரூ.	33.00
மைக்ரோசாஃப்ட் எக்ஸல்	ரூ.	132.00
பத்து நாட்களில் C புரோகிராமிங்	ரூ.	50.00
பதினைந்து நாட்களில் C++	ரூ.	90.00
தமிழில் C++	ரூ.	150.00
பாக்ஸ்புரோ கற்றுக் கொள்ளுங்கள்	ரூ.	55.00
பதினைந்து நாட்களில் ORCALE	ரூ.	75.00
ஜாவா	ரூ.	96.00
கம்ப்யூட்டர் கேள்வி–பதில்	ரூ.	,114.00
கம்ப்யூட்டர் வாங்குவது எப்படி?	ரூ.	70.00

சிறந்த சுய முன்னேற்ற நூல்கள்

அக்னிச் சிறகுகள்	–	96.00
உங்கள் மனதை புரிந்து கொள்ளுங்கள்	–	75.00.
தொழிலும் நிர்வாகமும்	–	60.00
மனம் தரும் பணம்	–	75.00
நான் துணிந்தவள்	–	75.00
வெற்றியின் ரகசியம்	–	36.00
வெற்றிபெறச் சிந்தியுங்கள்		69.00
உனக்குள் உன்னைத் தேடு	–	90.00
தன்னம்பிக்கை	–	24.00
வெற்றிக்கு 9 படிகள்!	–	60.00
சோற்றுக்கு மட்டுமல்ல	–	72.00
சொந்தத் தொழிலும் சுயமுதலீடும்	–	75.00
தடைகள் தகரட்டும்	–	36.00
மகத்தான வாழ்க்கை	–	75.00
ஒவ்வொரு மனிதனும் மன்னவன்தான்	–	55.00
தௌ த ஜிங்	–	30.00
அமேசான் டாட் காம்	–	75.00
நேரத்தைப் பொன்னாக்குவோம் (Time Management)	–	36.00
நேர நிர்வாக கையேடு	–	21.00
வியாபாரத்தை அதிகரிப்பது எப்படி?	–	24.00
குறிக்கோளை நிர்ணயிப்பது எப்படி?	–	20.00
வாழ்வை உயர்த்தும் சிந்தனைகள்	–	37.00
உடலசைவு மொழிகள் (Body Language)	–	38.00

VPPயில் பெற, விவரமான
இலவச விலைப்பட்டியல்,
புத்தக குறிப்பீடு அட்டை பெற
இன்றே எழுதுங்கள்.

E-mail : kannadhasan@vsnl.com
Our Web site : www.kannadasan.com





கண்ணதாசன் பதிப்பகம்

23, கண்ணதாசன் சாலை,
தியாகராயநகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 4332682, 4338712
மதுரை கிளை: 1, அன்னை காம்ப்ளெக்ஸ்,
3வது தெரு, வசந்தா நகர், மதுரை-3.
போன்: 0452-608793

நமசிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!



கருணையே வடிவான அன்னபூரணி க்ஷேத்ரமான காசியில் ஆடி அமாவாசையன்று அன்னதானம் செய்வோம் வாருங்கள்!



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளாசியுடன் புனித க்ஷேத்ரமான காசியில் அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்கேற்கலாம்...

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்டின் மூன்றாம் ஆண்டில் தொடர்ந்து அன்னதான சேவை!

பேரன்புடையீர்! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ அன்னபூரணி அன்னை தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

"பிரபஞ்சம் முழுமைக்கும் உணவுபடைக்கும் தாயாக விளங்கும் ஸ்ரீ அன்னபூரணி மாதா கொலுவீற்றிருக்கும் காசியில் மாதாமாதம் அமாவாசை அன்று அன்னதானம் செய்யப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ஆன்மீக அன்பர்கள் அனைவராலும் காசியில் அன்னதானமிட முடியும் என்ற இறைசிந்தனையோடு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" என்ற தனி அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம். இந்த அன்னதான இறைபணிக்கு தங்களால் இயன்ற நன்கொடையை வழங்கி "இறையருளால் காசியில் ஏழைகளுக்கும், அடியார்களுக்கும் அன்னம் அளிப்பதில் நாமும் ஓரளவேனும் பங்குகொண்டோம்" என்ற ஆத்ம திருப்தியை அடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

- ★ தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ★ ரூ.500/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.1000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையை அனுப்புவோர், திருமண நாள், பிறந்தநாள் மற்றும் திதி நாள் மேலும் தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவித்தால் அதன்படி தாங்கள் விரும்பும் மாதத்தில் அமாவாசை அன்று காசியில் அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு கங்கா தீர்த்தத்துடன் கூடிய காசி சொம்பும் காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும் ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு மாதமும் அமாவாசை அன்று காசியில் அன்னதானம் செய்து தொடர்ந்து பத்து வருடங்கள் பிரசாதமும், "ஆன்மீகம்" மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்ததியினரின் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூரண அருளும் புனிதம் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள ஸ்ரீமத் பகவத் கீதை புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

காசி, கயா, பிரயாகை (திரிவேணி சங்கமம்) ஆகிய இம்மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும் புண்ணிய காரியங்கள், பித்ரு காரியங்கள், பிண்டம் போடுதல், தர்மங்கள், ச்ராத்தம், திவசம், தர்ப்பணம் போன்றவற்றை அவரவர் விருப்பப்படி அன்னதானக் கைங்கர்ய அன்பர்களுக்கு செய்து தரப்படும்.

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு பிண்டப்பிரதானம் மற்றும் தர்ப்பணம் காசியிலும், கயாவிலும், பிரயாகையிலும் நேரில் சென்று செய்ய முடியாதவர்களுக்காக, சாஸ்திரிகளைக் கொண்டு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" மூலம் செய்யப்படுகிறது.

பித்ருக்களுக்கு பிண்டப்பிரதானம் செய்ய காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று பித்ரு க்ஷேத்ரங்களுக்கும் தனித்தனியாக ரூபாய் 1000/- அனுப்பும்போது யாருக்கு ச்ராத்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி மற்றும் கோத்ரம் போன்ற விபரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். பிண்ட பிரதானத்திற்காக ரூ.5000/= அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக தொடர்ந்து வருடத்திற்கு ஒருமுறை பத்து ஆண்டுகளுக்கு மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும் எந்த இடத்தில் யாருக்கு ச்ராத்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவர்களுக்கு ச்ராத்தம் செய்யப்படும். பித்ரு காரியங்களுக்குப் பணம் அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள தெய்வீக ஆலமரமான 'அக்ஷய வடத்தின்' படமும், கயாவில் உள்ள விஷ்ணு பாதத்தின் படமும் அனுப்பி வைக்கப்படும். நம் வீட்டில் செய்யும் ச்ராத்தத்திற்கு தாய், தந்தையர், உறவினர்கள் மட்டுமே பங்குகொள்ள வாய்ப்புண்டு. மூன்று பித்ரு க்ஷேத்ரங்களில் ஏதாவது ஒரு அக்ஷய வடத்தில் (ஆலமரம்) பிண்டப்பிரதானம் செய்தால் ஏழு தலைமுறைக்கு பித்ருக்கள் கூட்டமே முக்தி அடைவதுடன் பித்ரு தோஷங்களும் நிவர்த்தியாகும்.

அன்னதான சேவையில் ஈடுபட விரும்பும் ஆன்மீக அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque/D.D/M.O மூலம் (Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai - 4) என்ற பெயருக்கு எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கலியுகத்தில் அன்னதான சமுதாயப்பணி மகத்தான தெய்வீகப் பணியாக காசி திருத்தலத்தில் தழைத்திட உதவுமாறு அன்புகூர்ந்து வேண்டுகிறோம்.

Cheque/D.D/M.O அனுப்ப வேண்டிய முகவரி:

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)

68, Nadu Street, (Opp: Sri Kapaleeswarar Temple), Mylapore, Chennai - 600 004.

Tel: 4959302 Fax: (044) 4616311 E-mail:siva siva@vsnl.net

காசியில் அன்னதானம் மூலம் அமுது அளித்து ஆனந்தமடைவீர்!

சிவகாமியின் சபதம்

நாற்பத்து இரண்டாம் அத்தியாயம்

விஷக் கத்தி

குண்டோதரன் நீட்டிய கத்தியைச் சத்ருக்னன் வாங்குவதற்காகக் கையை நீட்டியபோது, ''ஜாக்கிரதை! சத்ருக்னா! கத்தியை ஜாக்கிரதையாக வாங்கு!'' என்றார் வஜ்ரபாஹுவின் வேஷத்திலிருந்த மகேந்திர பல்லவர். பிறகு குண்டோதரனைப் பார்த்து, ''இவ்வளவு அஜாக்கிரதையாக இந்தக் கத்தியை மடியில் கட்டிக்கொண்டு வந்தாயே? இது நெஞ்சில் பதிய வேண்டிய அவசியமில்லை; இதன் முனை உடம்பிலே பட்டுச் சிறு காயம் ஏற்பட்டால் போதும்; இரத்தத்தில் விஷங் கலந்து ஆள் ஒரு முகூர்த்தத்தில் செத்துப் போவான்;'' என்றார்.

''ஐயோ!'' என்றான் குண்டோதரன்.

''போகட்டும்! பிக்ஷுவை எங்கே விட்டுவிட்டு வந்தாய்? சீக்கிரம் சொல்லு!'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

குண்டோதரன் அவருடைய கேள்விக்கு மறுமொழி சொல்லாமல், ''கடவுள்தான் காப்பாற்றினார்!'' என்று கூறினான். அவனுடைய உடம்பு நடுங்கிற்று.

சத்ருக்னன் கோபமாக, ''ஆம், குண்டோதரா! உன்னுடைய தாமதத்தினால் காரியம் கெட்டுப் போகாமல், கடவுள்தான் காப்பாற்றினார். பல்லவேந்திரர் கேட்பதற்கு மறுமொழி சீக்கிரம் சொல்லு. இத்தனை நேரம் நாங்கள் காஞ்சி மார்க்கத்தில் பாதி தூரம் போயிருக்க வேண்டும்;'' என்றான்.

குண்டோதரன் இன்னும் கலக்கம் தீராதவனாய், ''என்ன சொல்ல வேண்டும்?'' என்று கேட்டான். சத்ருக்னனுடைய கையிலிருந்த கத்தியை நோக்கிய போது, அவனுடைய தேகமெல்லாம் மீண்டும் பதறி நடுங்கியது.

''நாசமாய்ப் போயிற்று! இன்றைக்கு

அமரர் கல்கி

உனக்கு என்ன வந்துவிட்டது, குண்டோதரா? உடனே பிரபுவின் கேள்விக்கு மறுமொழி சொல்லு. இல்லாவிட்டால், இந்த விஷக்கத்தி உன் நெஞ்சில் பாயப் போகிறது!'' என்று சத்ருக்னன் கத்தியை ஓங்கினான்.

"எஜமானனே! என் முட்டாள்தனத்துக்குத் தக்க தண்டனைதான். இந்த ஏழையின் உயிர் போனால் மோசம் ஒன்றுமில்லை. நஞ்சுண்ட கண்டரின் அருளினால் பல்லவ குமாரருக்கு ஒன்றும் நேராமல் போயிற்றே!'' என்றான் குண்டோதரன்.

இதைக் கேட்டு, எதற்கும் கலங்காமல் மலைபோல் நிற்கும் வழக்கமுடைய மகேந்திர பல்லவர் கூடச் சற்று நடுங்கி விட்டார்.

''குண்டோதரா! இந்த விஷக்கத்தி மாமல்லன் மேல் பாய்வதற்கிருந்ததா!''

"ஆம், பிரபு! ஐந்தாறு தடவை புத்த பிக்ஷு இந்தக் கத்தியை வைத்துக் கொண்டு, மாமல்லரின் முதுகை நோக்கிக் குறி பார்த்தார். அதைப் பார்த்துக் கொண்டு நான் சும்மாயிருந்தேன். தங்களுடைய கட்டளையினாலேதான்! இல்லாவிட்டால்...?'' என்று குண்டோதரன் பற்களை 'நறநற'வென்று கடித்தான்.

உண்மையிலேயே, மாமல்லர் அன்று இரவு தப்பிப் பிழைத்தது தமிழகம் செய்திருந்த தவப் பயன் என்றுதான் சொல்ல வேண்டும்.

மகிழ மரத்தினடியில் மாமல்லரும் சிவகாமியும் அமர்ந்து, மதுரத் தமிழ் மொழியிலும் மௌன பரிபாஷையிலும் காதல் சம்பாஷணை நடத்திக் கொண்டிருந்தபோது, அவர்கள் இருந்த பாறைக்குப் பின்னாலிருந்த புத்த பிக்ஷு விஷக் கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு குறி பார்த்த வண்ணமிருந்தார். ஆனால் எக்காரணத்தினாலோ எறிவதற்குத் தயங்கினார். மாமல்லரின் பக்கத்திலே சிவகாமி இருந்ததும், தப்பித் தவறிக் கத்தி அவள்மேல் விழுந்து விடுமோ என்ற எண்ணமும்தான் பிக்ஷுவுக்கு அத்தகைய தயக்கத்தை அளித்ததோ என்னமோ, யாருக்குத் தெரியும்?

பிறகு, சிவபெருமான் உவந்தணியும் ஆபரணமான நாகப்பாம்பு அங்கு வந்து சேர்ந்தது. சிவகாமியும் மாமல்லரும் மகிழ மரத்தடியிலிருந்து கிளம்பி, நிலா வெளிச்சம் பளிச்சென்று எரிந்த விசாலமான பாறையில் போய் உட்காருவதற்குக் காரணமாயிற்று.

புத்த பிக்ஷுவும், தாம் ஒளிந்திருந்த இடத்திலிருந்து வெளிக் கிளம்பி, வேறிடத்துக்குப் போய் மறைந்துகொண்டார்.

இதையெல்லாம் இன்னொரு பாறை மறைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த குண்டோதரனுடைய கை ஊறியது. பின்புறமாகச் சென்று புத்த பிக்ஷுவின் கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொன்றுவிட வேண்டுமென்ற அடங்காத ஆர்வம் அவனுக்கு உண்டாயிற்று. அந்த ஆர்வத்தை அவன் அடக்கிக்கொண்டு, பொறுமையுடன் இருந்ததன் காரணம், மகேந்திர சக்கரவர்த்தியின் கண்டிப்பான கட்டளைதான்.

அன்று மாலை சக்கரவர்த்தியும் சத்ருக்னனும் குண்டோதரனும் மரக்கட்டைத் தெப்பத்தில் வராக நதியைத் தாண்டிக் கரையில் இறங்கியபோது, சற்றுத் தூரத்தில் ஒரு பாறையின் மேல் புத்த பிக்ஷு நின்று சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். அப்போது சக்கரவர்த்தி குண்டோதரனைப் பார்த்துச் சொன்னார்: "குண்டோதரா! இத்தனை காலமாக நீ செய்திருக்கும் வேலையெல்லாவற்றையும் விட முக்கியமான வேலை, உனக்கு இப்போது தரப் போகிறேன். அதில் ஒரு அணுவளவு கூடப் பிசகாமல் சர்வ ஜாக்கிரதையாய்ச் செய்து முடிக்கவேண்டும். இந்த பிக்ஷுவை ஒரு கண நேரங்கூட விடாமல் நீ பின் தொடர்ந்து போக வேண்டும். உன் கண் பார்வையிலிருந்து அவர் அகலுவதற்கு இடம் கொடுக்கப்படாது. நீ அவரைப் பின் தொடர்கிறாய் என்பது அவருக்குத் தெரியக்கூடாது. ஆற்றுக்கு அக்கரையில் எங்களுக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது. திரும்பிப்போய்

அதை முடித்து விட்டு, இதே இடத்திற்கு மறுபடியும் வந்து சேருகிறோம். இவ்விடத்தில் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம். சந்திரன் தலைக்கு மேல் வரும்போது நீ இங்கே வந்து எங்களுக்குச் சமாசாரம் தெரிவிக்க வேண்டும். பிக்ஷு எங்கே போனார், என்னென்ன செய்தார் என்று தெரியப்படுத்த வேண்டும். ஆனால் அவர் முன்னால் மட்டும் நீ எதிர்ப்படவே கூடாது."

இவ்விதம் கட்டளையிட்டு,' 'நான் சொன்னதை யெல்லாம் நன்றாய் மனத்தில் வாங்கிக் கொண்டாயா, குண்டோதரா! எல்லாம் தவறின்றிச் செய்வாயா?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

''அப்படியே செய்வேன், பிரபு!" என்று ஒப்புக்கொண்டு, பிக்ஷுவைத் தொடர்ந்தான் குண்டோதரன்.

இதன் காரணமாகத்தான் பிக்ஷுவின் மேல்



பொங்கி வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, குண்டோதரன் பலமுறையும் சும்மா இருக்க வேண்டியதாயிற்று.

ஆயனரும் சிவகாமியும் மாமல்லரும் பாறைப் பிரதேசத்திலிருந்து கிராமத்தை நோக்கிப் புறப்பட்டபோது, அவர்களுக்குச் சற்றுப் பின்னால் பாதை ஓரத்து மரஞ்செடிகளிலும், புதர்களிலும் மறைந்து புத்த பிக்ஷு சென்றார். புத்த பிக்ஷு அறியாமல் அவரைப் பின் தொடர்ந்து குண்டோதரனும் போகலானான்.

கிராமத்தின், முனையிலேயிருந்த கோயிலின் மதிலை நெருங்கியதும், மடத்து வாசலில் கூட்டமாக நிற்பவர்கள் யார் என்று பார்த்து வர ஆயனர் சென்றாரல்லவா? அப்போது சிவகாமிக்கும் மாமல்லருக்கும் அன்பு மொழிகள் பேசவும், பரஸ்பரம் பிரதிக்ஞை செய்துகொள்ளவும் மறுபடி ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்கள் நின்ற இடம் கோயில் மதில் திருப்பத்தின் ஒருமுனை. அதே முனையின் மற்றொரு திருப்பத்தில் நின்ற புத்த பிக்ஷுவுக்கும் தமது கத்தியை எறிவதற்கு மட்டும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஏனெனில், பிக்ஷுவின் கை எட்டக்கூடிய இடத்திலே சிவகாமியும் அவளுக்கு அந்தண்டைப் புறத்தில் மாமல்லரும் நின்றுகொண்டிருந்தார்கள். சிவகாமியும் மாமல்லரும் இடம் மாறி நிற்கும் நேரத்தைப் பிக்ஷு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

கோயில் மதிலுக்கு எதிர்ப்புறத்திலேயிருந்த தோட்டவேலிக்குப் பின்னால் மறைந்து நின்று, மேற்படி காட்சியைக் குண்டோதரன் பார்த்துக்கொண்டிருந்தான். இரண்டு மூன்று தடவை பிக்ஷு கத்தியை ஓங்கியதைப் பார்த்த பிறகு, இனிமேல் பொறுக்க முடியாதென்று குண்டோதரன் அவர் மேல் பாய்வதற்குச் சித்தமான போது, நல்லவேளையாக ஊர்ப் பக்கமிருந்து தளபதி பரஞ்சோதியும் மற்ற வீரர்களும் திடுதிடுவென்று வந்து விட்டார்கள். பிக்ஷுவும் உடனே நகர்ந்து பின்னால் போய்விட்டார்.


மாமல்லரைப் பரஞ்சோதி அழைத்துக் கொண்டு போனதையும் அவர்களுக்குப் பின்னால் ஆயனரும் சிவகாமியும் சென்றதையும் பார்த்துக் கொண்டிருந்தான் குண்டோதரன். சற்றுப் பின்னர் புத்த பிக்ஷு அதே மதில்முனைக்கு அருகில் வந்து நிற்பதையும் கண்டான்.

பின்னர், குண்டோதரன் சற்றும் எதிர்பாராத காரியம் ஒன்றைப் புத்த பிக்ஷு செய்தார். கோயில் பிராகாரத்துக்கு உட்புறமிருந்து வெளியே படர்ந்திருந்த மரக் கிளைகளை இலேசாகப் பிடித்துக் கொண்டு மதிலின் மேல் ஏறி உட்புறம் குதித்தார்.

அடுத்தகணத்தில் குண்டோதரன் புத்த பிக்ஷு சற்று முன் நின்ற இடத்துக்கு வந்து சேர்ந்தான். ஒரு விநாடி நேரம் அவனுடைய நெஞ்சு தொண்டைக்கு வந்துவிட்டது. ஏனெனில், அவன் நின்ற இடத்துக்கு வெகு சமீபத்தில் ஒரு சிறு பாம்பு நெளிவதைக் கண்டான். அங்கிருந்து துள்ளி நகர்ந்துகொண்டு, மறுபடியும் பாம்பு இருந்த இடத்தைப் பார்த்தபோது, அவனுக்குச் சிறிது வியப்புண்டாயிற்று. ஏனெனில், பாம்பு, அசையாமல் கிடந்த இடத்திலேயே கிடந்தது. மறுபடியும் உற்றுப் பார்த்தான். 'களுக்' என்று தனக்குத் தானே சிரித்துக் கொண்டான். உண்மையில் அது பாம்பு இல்லையென்றும், நாகம் போன்ற பிடியமைந்த கத்தி என்றும் தெரிந்தது. அந்தக் கத்தியை விரைந்து எடுத்து மடியிலே கட்டிக்கொண்ட பிறகு, மதில்மேல் ஏறுவதற்காக அண்ணாந்து பார்த்தான்.

அச்சமயம் மதிலுக்கு அப்புறத்தில் மரக்கிளைகள் அசையும் சத்தம் உண்டாகவே, சட்டென்று ஒரு சந்தேகம் உதித்தது. உடனே மதில் முனையின் இன்னொரு பக்கத்துக்கு நகர்ந்து, சுவரோடு சுவராக ஒட்டிக்கொண்டு நின்றான். அவன் அப்படி நகர்ந்து நின்றதுதான் தாமதம், புத்த பிக்ஷுவின் தலை, மதில் சுவர் மேலே காணப்பட்டது. பிக்ஷு வெளிப்புறம் இறங்குவதற்கு அதிக நேரம் ஆகவில்லை. இறங்கியவர் தரையிலே உற்றுப் பார்த்த வண்ணம் எதையோ தேடத் தொடங்கினார்.

அவர் எதைத் தேடுகிறார் என்பதை



ஊகித்து உணர்ந்துகொண்ட குண்டோதரன், சிறிதும் சத்தமில்லாதபடி மதில்மேல் ஏறிக் கோயிலுக்குள்ளே குதித்தான். அவன் குதித்த இடத்துக்கு வெகு சமீபத்தில் மதில் சுவரை ஒட்டிக் கோயில் மடைப்பள்ளி இருந்தது. மடைப்பள்ளிச் சுவருக்குப் பின்னால் அவன் மறைந்து



நின்றுகொண்டான்.

சற்று நேரத்துக்குப் பிறகு புத்த பிக்ஷு மறுபடியும் கோயில் பிராகாரத்துக்குள்ளே குதித்தார். குதித்த இடத்தில் பன்னீர் மரத் தடியில் குனிந்து தேடினார்.

அதிலும் பயனின்றி அவர் நிமிர்ந்த போது, அவருடைய மூச்சு நாகப்பாம் பின் சீறலைப் போல் தொனிப்பதைக் கேட்டு, அஞ்சா நெஞ்சமுடைய குண் டோதரன்கூட நடுங்கினான்.

புத்த பிக்ஷு பன்னீர் மரத்தடியில் சற்று நேரம் நிற்பதும், பிராகாரத்தில் கொஞ்ச தூரம் நடந்து சென்று, வெளிப்பக்கம் எட்டிப் பார்த்துவிட் டுத் திரும்புவதுமாயிருந்தார்.

இடையிடையே கோயிலுக்கு வெளியிலிருந்து போர் வீரர்களின் ஜய கோஷமும் கிராமவாசிகளின் ஆரவார முழக்கமும் கேட்டுக்கொண்டிருந்தன.

ஏறக்குறைய அர்த்தராத்திரி ஆனபோது, சந்தடி அடங் கியது. கோயிலின் கர்ப்பக் கிருஹக் கதவுகளைச் சாத்தித் தாழிடும் சப்தம் கேட்டது. இதற்குப் பிறகு நாகநந்தியடிகள் மரத்தடி யிலிருந்து எழுந்து கோயில் பிரா காரத்தைச் சுற்றி நடக்கத் தொடங் கினார்.

மடைப்பள்ளியின் கதவு திறந் திருப்பதைப் பிக்ஷு பார்த்துவிட்டு உள்ளே நுழைந்ததைக் கண்டான் குண்டோதரன். சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தான். இரண்டே எட் டில் மடைப்பள்ளி வாசலுக்குச் சென்று கதவை லேசாகச் சாத்தி வாசற்புறத்துத் தாழ்ப்பாளை இழுத் துப்போட்டான்.

உடனே மதில் சுவர் ஏறிக் குதித்து வெளியில் வந்து, வராக நதியின் தோணித் துறையை நோக்கி விரைந்து சென்றான். படகுகள் கிளம்பிய பிறகே குண்டோதரன் தோணித்துறைக்கு வந்து சேர்ந்தான் என்பதை முன் அத்தியாயத்தில் பார்த்தோம்.

(தொடரும்)

அருள்வாக்கு


சாஸ்திரப் பிரகாரம் நடப்பது இந்தக் காலத்தில் சாத்தியமே இல்லை என்று நினைத்து விடக்கூடாது. வியாபார வேகத்தில் வளர்ந்துவிட்ட லௌகிக நாகரிகத்தை விட்டு விட்டு, தேவைகளைக் குறைத்துக்கொண்டால், யாருமே இப்படி ஆசாரங்களை விட்டுப் பணத் துக்காகப் பறக்க வேண்டியதில்லை. பணத்துக் காகப் பறக்காதபோது, பகவத் ஸ்மரணத்துக்கு நிறைய அவகாசம் கிடைக்கும்; வாழ்க்கையில் நிம்மதியும் திருப்தியும் சௌக்கியமும் தன்னால் உண்டாகும்.

கர்ம அனுஷ்டானங்களைச் செய்யப் பண வசதி வேண்டியதேயில்லை. ஆடம்பரமாகச் செலவு செய்து பூஜை செய்ய வேண்டும் என் பதில்லை. காய்ந்த துளசி தளமும், வில்வ பத்தி ரமும் பூஜைக்குப் போதும். நாம் சாப்பிடுகிற அன்னத்தையே நைவேத்தியம் என்று காட்டினால் போதும். 'விவாகமும் சாஸ்திர அநுஷ் டானம்தானே. அதற்கு ஏக மாய்ச் செலவாகிறதே!'' என்று கேட்கலாம். ஆனால், இப்போது நடக்கிற ஆடம்பரம் எதுவுமே சாஸ்திர சம்மதமான விவாகத் துக்குத் தேவையில்லை. குறிப் பாக இப்போது விவாகங்களில் மிகப் பெரிய செலவாக உள்ள வரதட்சிணைக்குச் சாஸ்திர சம்மதமே இல்லை. சாஸ்திர சம்மதமான கர் மங்களுக்குப் பணம் முக்கியமாக இருந்தால், பணக்காரர்களுக்கு மட்டும்தான் நம் மதம் உரித்தானது என்றாகி விடும். உண்மையில் அப்படி இல்லவே இல்லை.



அறம், பொருள், இன்பம், வீடு என்கிற நாலு வாழ்க்கைப் பயன்களில், இன்பத்தை மட் டும் தேடி, அதற்காகப் பொருளுக்கு அலைந்து கொண்டிருக்கிறோம். இதை மாற்றி வீட்டுக் காக (மோக்ஷத்துக்காக) அறத்தின் (தர்மம்) மூலம் பாடு பட வேண்டும். வாழ்க்கையை எளி தாக்கிக் கொண்டால், பொருளுக்காக அலைய வேண்டாம்; அறங்களை அப்போது பின்பற்ற முடியும். அறத்தின் பயனாகக் கிடைக்கிற பேரானந்தத்தையும் பெற முடியும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய சுவாமிகள்



‘பொதிய மாத்தி வண்டியிலே, பொள்ளாட்சி சந்தையிலே... விருதுநகர் வியாபாரிக்குச் செல்லக்கண்ணு_ நீயும் வித்துப் போட்டுப் பணத்தையெண்ணு செல்லக்கண்ணு’ _ இவை விருதுநகர் வியாபாரம் குறித்து மருதகாசி உறுதிபட எழுதிய சினிமா பாடல் வரிகள். எங்கோ விளைகிற பொருட்களுக்குக் கூட இங்கே விலை நிர்ணயம் செய்கிற ஊராக, வியாபாரத்தில் உறுதியோடு நின்ற விருதுநகரின் இன்றைய நிலை எப்படியிருக்கிறது?

நுகர்வோருக்குத் தேவைப்படும் பொருட்கள் ஒரே இடத்தில் உற்பத்தி செய்யப்படுவதில்லை.

• வி.ஆர்.முத்து



எனவே நாட்டின் பிற பகுதிகளில் விளைகிற பொருட்களை வாங்கி வந்து, பதப்படுத்தி, தரம்பிரித்து, பேக் செய்து, தேவைப்படும் இடங்களுக்கு விற்பனை செய்வதுதான் விருது நகர் வியாபாரிகள் ஸ்டைல். ஒரு காலத்தில் பொதி மாடுகளிலும் பிறகு, கட்டை வண்டிகளிலும், சரக்குகளை ஏற்றிவந்து, வியாபாரப் பேட்டைகள் அமைத்து வியாபாரம் நடத்தி வந்தார்கள். இப்போது அந்தப் பேட்டைகள் வணிக வளாகங்களாக மாறிவிட்டன.



விருதுநகரில் இன்றைய தேதிக்கு நூற்றைம்பது டின் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. டின் ஷீட் இறக்குமதியில் சிறந்து விளங்கி வந்தவர்களுக்கு ‘பவுச் பேக்கிங்’ வந்த பிறகு பெரிய அடி. உணவு எண்ணெய்த் தயாரிப்பில் இருபது பெரிய தொழிற் குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன. தாவர எண்ணெய்த் தயாரிக்கும் தொழிற்சாலைகள் மட்டும் ஐம்பதிற்கும் அதிகம். இரப்பர் காயிலில் இருந்து தயாரிக்கப்படும் இரப்பர் எண்ணெய், வாஷிங் சோப்பு தயாரிக்கப்பயன்படுகிறது. இரப்பர் காயிலில் எண்ணெய் இருப்பதைக் கண்டுபிடித்தவரே எஸ்.பி. அருணாசல நாடார் என்ற வேலூர்க்காரர்தான்.

• வி.வி.எஸ்.போகன்

விழுகிறது விருதுநகர் வியாபாரம்?



: உணவு எண்ணெய்த் தயாரிப்பைப் பொறுத்தவரை வி.வி.வி. ஆனந்தம் நல்லெண்ணெய், வி.வி.எஸ். நல்லெண்ணெய், இதயம் நல்லெண்ணெய் போன்ற நிறுவனங்கள் விற்பனையில் சாதனை படைத்து வருகின்றன. ஆனால் வெளிநாட்டிலிருந்து உணவு எண்ணெய் இறக்குமதிக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லாததால் சூரியகாந்தி, பாமாயில் ஆகியவற்றின் தாராள இறக்குமதியால் உள்நாட்டு எண்ணெய் சந்தைக்குப் பலத்த அடி. தவிர சமையல் எண்ணெய்களுக்கு மட்டுமல்ல; புண்ணாக்கிற்கும்கூட விற்பனை வரி போடப்பட்டதில் வரிச்சுமை, விருதுநகர் வியாபாரிகளை மூச்சுத் திணறச் செய்கிறது. மாறாக இறக்கு மதியாளர்களுக்கு வரிச்சுமை கிடையாது.

பொதுவாக விருதுநகர் வியாபாரிகள், தங்கள் தயாரிப்புகளுக்குப் பாட்டனார், தாத்தா, தந்தை ஆகியோரது முதல் எழுத்தை இணைத்த குடும்ப இனிஷியல்களையே பிராண்ட் பெயராகப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். எண்ணெய் வியாபாரத்தில் நுகர்வோரை குழப்பும் இனிஷியல் பிராண்டுகளே அதிகம். இதிலிருந்து ஆனந்தம், இதயம் போன்ற பொதுவான பிராண்ட் பெயர்களை, நடப்புத் தலைமுறையினர் பிரபலப்படுத்தியிருப்பது, விருதுநகர் வியாபாரப் பாரம்பரியத்தில் புதிய அணுகுமுறை என்றே சொல்லிவிடலாம். இதயம் நல்லெண்ணெய் கடந்த ஆண்டு விளம்பரத்திற்காக மட்டும் நான்கு கோடி ரூபாய் செலவழித்துள்ளது. இதுபற்றி அந்த நிறுவனத்தின் தலைமைப் பிரதிநிதி வி.ஆர்.முத்து என்ன சொல்கிறார்?

“ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை பாரம்பரியமான வியாபாரிகள்தான் கொடிகட்டிப் பறந்தனர். காரணம் போட்டி அதிகமில்லை. இன்று தொலைத்தொடர்பு வசதிகள் பெருகிவிட்டன. எந்தப் பொருள் எங்கே விளைகிறது, என்ன விலை என்பதை அனைவரும் எளிதில் தெரிந்துகொள்ள முடிகிறது. எனவே ஆங்காங்கே தேவைப்படுகிற அளவில் உற்பத்தி செய்கிற இடங்களில் இருந்து பொருட்களை வாங்கி வியாபாரம் செய்ய இன்று பலர் வந்து விட்டார்கள். எனவே விருதுநகர் வியாபாரத்திற்கு முன்பிருந்த முக்கியத்துவம் படிப்படியாகக் குறைந்து விட்டது. இன்னொருபுறம் தாராளமயம். சூழ்நிலைக்கேற்ப வியாபார முறைகளை மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது.

“நுகர்வோர் பொருள் வணிபத்தில் ஒரு தயாரிப்பு வெற்றியடைய மூன்று விஷயங்களில் அர்ப்பணிப்பு உணர்வு தேவை. முதலில் தரம். அடுத்து தொடர்புச் சாதன விளம்பரம். விளம்பரங்கள் மூலம் நுகர்வோரை ஒருமுறை வாங்க வைத்து விடலாம். ஆனால் இரண்டாவது முறை வாங்க தரம்தான் காரணமாக இருக்க வேண்டும். மூன்றாவது தட்டுப்பாடற்ற விநியோக முறை. இந்த மூன்றையும் கடைபிடித்தே நாங்கள் வெற்றி பெற்றோம்”

என்கிறார் முத்து.

“கட்டுப்பாடற்ற இறக்குமதியால் விருதுநகர் வியாபாரம் பாதிக்கப்பட்டிருப்பது உண்மையென்றாலும், எங்கள் ஊருக்கு இறக்குமதியோ ஏற்றுமதியோ புதிய விஷயம் அல்ல” என்கிறார் வி.வி.எஸ். நல்லெண்ணெய் அதிபரான யோகன்.

“1910–லேயே எனது பாட்டனார் ரங்கூனிலிருந்து அரிசி, மொச்சைப் பயிறு, இலங்கையிலிருந்து கொப்பறைப் போன்ற பொருட்களை இறக்குமதி செய்தார். இங்கிருந்து தஞ்சாவூருக்கே அரிசி விற்பனை செய்திருக்கிறார்கள். விருதுநகர் எம்.எஸ்.பி. செந்தில் நாடார் காப்பி எஸ்டேட்டுகளை உருவாக்கி காப்பி ஏற்றுமதியில் தலைசிறந்து விளங்கினார். இன்றும் இவரது குடும்பத்தினர்தான் காப்பி ஏற்றுமதியில் இந்தியாவில் முதலிடத்தில் இருக்கிறார்கள். ராவ்சாகிப் சிதம்பர நாடார் என்பவர் பித்தளை, செம்பு, அலுமினிய பாத்திரங்கள் செய்யும் உலோகங்களைத் தூத்துக்குடி துறைமுகத்தில் இறக்குமதி செய்து இந்தியா முழுவதும் விநியோகம் செய்திருக்கிறார். பட்டிவீரன்பட்டியிலிருந்து ஏலக்காய் தருவித்து வடமாநிலங்களுக்கு ஏற்றமதி செய்யும் தொழிலை அன்று விருதுநகர்காரர்கள் மட்டும் செய்து வந்தார்கள். இன்று ஏலக்காய் வணிகம் கொஞ்சம் கேரளத்திற்குப் போய்விட்டது. ஆனாலும் விருதுநகர் எஸ்.பி.ஜி.ஆர். குடும்பத்தினர்தான் ஏலக்காய் வியாபாரத்தில் இந்தியாவில் முன்னணி நிறுவனமாகத் திகழ்கிறார்கள். 'தனியா' என்று சொல்லப்படும் மல்லி வியாபாரத்தில் பி.சி. கண்ணன் குடும்பத்தினர் முதலிடம் வகிக்கிறார்கள். மல்லிக்கு நிறம் கிடைக்கவும், நீண்டநாள் கெடாமல் இருக்கவும், செய்யப்படும் தொழில் நுட்பம் தமிழகத்தில் விருதுநகர்காரர்கள் மட்டுமே அறிந்த ஒன்று.



“டைரக்டர் லாரி கணக்குல கயிறை தியேட்டருக்கு அனுப்புறாரே, எதுக்கு?”

“தியேட்டருல ரசிகர்களை சீட்டோட கட்டிப்போடுறாருன்னு சொன்னப்ப நீ நம்பலை இல்ல!”

— சகிதா முருகன்

“மஹாராஷ்டிரா, குஜராத், ஆந்திராவில் விளையும் துவரை உள்ளிட்ட பருப்பு வகைகளைக் கொள்முதல் செய்து, விருதுநகரிலிருந்து அதே மாநிலங்களுக்குப் பருப்பு போகும். ஆனால் இப்போது பருப்பு வியாபாரம் நிறையவே கையைவிட்டுப் போய்விட்டது. காரணம் பருப்பு இறக்குமதி. வணிக வரிச் சுமை வந்த பிறகு, பொருட்கள் எங்கே விளைகிறதோ அங்கேயே போய் வியாபாரம் செய்யலாம் என்ற மனநிலையோடு இங்கிருந்து இந்தியா முழுக்க வியாபாரிகள் புலம்பெயர்ந்து போய்விட்டார்கள்.

“ஆந்திரமாநிலம் குண்டூரிலிருந்து தருவிக்கப்படும் மிளகாய் வற்றல் வியாபாரத்திற்கு இருநூறு ஆண்டு பாரம்பரியம் உண்டு. இந்த வியாபாரம் மட்டும் எப்படியோ தப்பித்துக் கொண்டுவிட்டது. இன்று விருதுநகர் வியாபாரத்தின் மீதான முக்கிய தாக்குதல் என்றால் மத்திய, மாநில அரசுகளின் வரிவிதிப்புகள். கடந்த ஆட்சி காலத்தில் வாணிபச் சுழற்சியை எளிமைப்படுத்தும் நோக்கோடு, விற்பனை வரி சீரமைப்பு செய்யப்பட்டது. ஆனால் இன்று பல்முனை வரிவிதிப்புகளும், நுழைவு வரியும் வியாபாரத்தை நசுக்கச் செய்வதாக உள்ளது. இனறு விருதுநகரில் நன்றாக நடக்கிற தொழில் கல்விதான். எங்கள் கல்வி அறிவு காரணமாக, விருதுநகரில் தெருவுக்கு இரண்டுபேர் வெளிநாட்டில் இருக்கிறார்கள்” என்கிறார் யோகன்.

வெளிநாடுகளில் வரியற்ற மூலப்பொருட்களின் மூலம் தயாரிக்கப்பட்டு, குறைந்த உற்பத்திச் செலவுடன், உள்நாட்டுப் பொருட்களை விட, விலை குறைவாகப் பல தயாரிப்புகள் இங்கே நுழைய தாராளமயம் காரணமாகிவிட்டதில், பல தயாரிப்புகள் இங்கே படுத்துவிட்டன. குறிப்பாக உள்நாட்டுக் குளிர்பானங்கள். விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காளிமார்க் பானங்கள், கோக்கோ கோலா, பெப்சி நிறுவனங்களோடு போட்டி போட முடியாவிட்டாலும், தென் தமிழ் நாட்டின் பல மாவட்டங்களில் சந்தையைக் கைவசம் வைத்திருக்கவே செய்கிறது.

நடக்குமென்பார்: நடக்கும்!

மேஷம் : 'அடடா! சனி பகவான் 2ம் இடத்தில் பசை போட்டு உட்கார்ந்திருக்காரே; என்னல்லாம் படுத்தப் போறாரோ'னு பயப்பட வேண்டாம். குரு, செவ்வாய், 4ல் சுக்கிரன், 5ல் சஞ்சாரம் என்பதால், அனுகூலமான பலன்களே உண்டாகும். உத்தியோகத்திலிருப்பவர்கள் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் செயல்படுவார்கள். புதன் 3ல் என்பதால், மாணவர்கள் வெற்றிநடை போடுவார்கள். தள்ளிப் போய்க் கொண்டேயிருந்த நல்ல காரியங்கள், தடாலடியாக முடிந்து மகிழ்ச்சித் தரும்.

ரிஷபம் : தேவையில்லாமல் உங்களை எதிர்த்துக்கிட்டும், வீணா பிரச்னை செய்துக்கிட்டும் இருந்த எதிரிங்க இப்ப இருக்கிற இடம் தெரியுதா? ஓடி ஒளிஞ்சிருப்பாங்களே! எல்லாம் ராசியில் சனி, ராகு 2ல் புதன், சூரியன் இருக்கும் விசேஷ அமைப்பால்தான். இதனால் இன்னொரு கூடுதல் லாபமுண்டு. உற்சாக மனநிலை கிடைக்கப் பெற்று, எல்லா காரியங்களிலும் வெற்றிக்கனி பறிப்பீர்கள் என்பதே அது! மருத்துவம், ரசாயனம், உலோகம், ரியல் எஸ்டேட், வீடு, மனை, கட்டடம் இனங்கள் வளமான ஆதாயம் கொண்டு வரும்.

மிதுனம் : "அம்மாடியோவ்! இதெல்லாம் இலேசுப்பட்ட காரியமா என்ன?" என்று மலைத்துப் போய் நின்ற காரியங்களைக் கூட, மயிலிறகைத் தூக்கிப் போடுவது போல அநாயாசமாக நிறைவேற்றி விடுவீர்கள் ராகு 12ல், கேது 6ல் உலவுவதால், அபாரமாகச் சமாளிக்கும் வலிமை கிடைத்திருக்கிறது. தெய்வீகக் காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். பெரியவர்கள் ஆசி, பிரபுதனவான்களின் தொடர்பு ஆகியவற்றால், மன அமைதியும், தன்னம்பிக்கையும் அடைவீர்கள். எதிர்பாராத பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். தயாராயிருங்க.

கடகம் : சாட்சாத் மகாலக்ஷ்மி, கஜானா பெட்டியோடு கிருகப் பிரவேசம் செய்யப் போகிறாள். மகிழ்ச்சியோடு வரவேற்று உபசரிங்க. சுக்ரன் 2ல், குரு ராசியில் சஞ்சாரம் என்பதால், பொருளாதார மேன்மை உண்டாகும். பண வசதி தாராளமாக இருக்கும். அதோடு சந்திரபலமும் கூடுவதால், ஆசைகள் அனைத்தும் நடக்கும். அலுவலகத்தில் முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். வியாபாரிகளுக்கு விசேஷமான காலம். ஏற்றுமதி, இறக்குமதி, வெளிநாட்டுத் தொடர்பு, வர்த்தகம் ஆகியவை நல்ல ஆதாயம் கொண்டு வரும். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம்.

சிம்மம் : 'யார் கண் பட்டதோ! நல்ல அந்தஸ்தோடும், செல்வாக்கோடும் இருந்த நாம்ப, இப்படி டல்லாயிட்டோம்'னு நீங்க வருந்திக்கிட்டிருந்தீங்க இல்லையா? இனிமேல் விடுங்க கவலையை. ராசிநாதன் சூரியன் புதனுடன் 11ல் லாபஸ்தானத்தில் ஜொலிக்கிறார். 12ல் குரு, செவ்வாய் - ராசியில் சுக்கிரன் என்பதால், பொருளாதார மேன்மை கூடும். மதிப்பும், புகழும் உயரும். உணவு, ஹோட்டல் துறை, மருத்துவம், ஆடை அணிகலன் போன்ற இனங்கள் முன்னேற்றம் அடையும்.

கன்னி : நீங்க சொன்னால் பலிக்கும். நினைச்சால் நடக்கும். தேடினால் கிடைக்கும். செய்தால் ஜெயிக்கும். ஏன்னா உங்க கிரக சஞ்சாரம் இந்த வாரம் படு தூக்கல். ராசிநாதன் 10ல், ஆட்சி சூரியனுடன் 11ல் குரு, செவ்வாய் 12ல், சுக்ரன் உலவுவதால், சுபப் பலன்களே நடக்கப் போகின்றன. பிரபுதனவான்கள், முக்கியஸ்தர்கள் ஆதரவு கிட்டும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு, விருப்பமான இடத்துக்கு மாற்றல், அனுகூலமான திருப்பம் என நல்லதே நடக்கும். சனி, ராகு, 9ல் என்பதால், தந்தை நலனில் கவனம் தேவை.

அக்னிசர்மா பக்கம்

ஜூலை 3 முதல் 9 வரை

துலாம் : 'அது செஞ்சா சரிபடுமா? இது செஞ்சா தோதாயிருக்குமா?'னு விசனமா இருந்தீங்க இல்லையா? இப்பதான் யோகக் காலம் வந்திருக்கே.புதிய முயற்சிகளில் தாராளமாக ஈடுபடுங்க. ராசிநாதன் 11ல் குரு, செவ்வாய் 10ல் புதன் சூரியன் 9ல் சஞ்சாரம் என்பதால், எப்பாடுபட்டாவது காரியத்தை நிறைவேற்றிடுவீங்க. 9ம் அதிபதி 9ல் இருப்பதால், தெய்வ பலம் பரிபூரணமாக அமையும். சுய தொழில் லாபம் தரும். உறவினர்கள், நண்பர்கள் உதவி, கேட்காமலேயே கிடைக்கும்.

விருச்சிகம் : உங்க ராசிக்கு, யோகமான அம்சங்களுடன் அற்புதமான பலன்கள் தருவது யார் என நீங்கள் தெரிந்து கொள்வது அவசியம். உச்ச ஆரோக்கியமான குருவுடன் 9ல் உலவும் ராசிநாதன்தான் காரணம். தெய்வீகக் காரியங்களில் ஈடுபாடு, புனித காரியங்களில் பங்கு கொள்ளுதல், ஸ்தல யாத்திரை ஆகியவை ஏற்படும். இயந்திரம், வாகனம், இன்டஸ்ட்ரீஸ், கமிஷன், அழகு சாதனங்கள் போன்றவற்றில் நல்ல முன்னேற்றம் தெரியும்.

தனுசு : தாராளமான பணி நடமாட்டம் உருவாகியிருக்கும். கிரக சஞ்சாரம் உண்மையிலேயே உங்களுக்கு மிகவும் சாதகமானதுதான். ராசிநாதன் குரு 8ல், செவ்வாய் சகிதம், சூரியன், புதன் 7ல் உலவுவதால் தெளிவான சிந்தனை, காரியானுகூலம், உற்சாகமான சூழ்நிலை என அனுகூலமான பலன்களே நிகழும். புதிய உத்தியோக முயற்சி வெற்றி தரும். நிர்வாகத்தில் திறமையும், புத்தி சாலித்தனமும் வெளிப்படும். வியாபாரிகள் நல்ல ஆதாயம் அடைவார்கள். பொன், வெள்ளி, நவரத்தினம், அலங்காரப் பொருட்கள் போன்றவை எதிர்பாராத லாபம் கொண்டு வரும். தந்தையால் அனுகூலம் உண்டாகும்.


மகரம் : குடும்பத்தில் ஒற்றுமை நிலவி, விருந்து உபசாரம், உல்லாசம் போன்றவை உண்டாகும். நண்பர்கள், உறவினர்கள் வருகையால் கலகலப்பு கூடும். மனை, நிலம், வீடு, வாகனம் வகையில் நல்ல பலன் உண்டாகும். புதிய வீடு கட்டும் பாக்கியம் உண்டாகும். பெண்கள் தத்தம் எண்ணம் நிறைவேறப் பெறுவார்கள். உடல் ஆரோக்கியம் நலமாக இருந்து, உங்கள் திட்டங்களை முடித்து வைக்க உதவும். ராசிநதான் 5ல் பூர்வ புண்ணியஸ்தானத்தில் ராகுவுடன், 6ல் சூரியன், புதன் 7ல், குரு, செவ்வாய், 8ல் சுக்ரன், 11ல் கேது சஞ்சாரம் என்பதால், எல்லா விஷயங்களிலும் நம்பிக்கை, தெய்வீகமான சிந்தனையுடன் செயல்படுவீர்கள். புதிய முயற்சிகள் கூடிவரும்.

கும்பம் : ராசிநாதன் 4ல் ராகுவுடன், சூரியன் புதன் பூர்வ புண்யஸ்தானத்தில் 6ல் குரு, செவ்வாய், 10ல் கேது சஞ்சாரம் என்பதால் எடுத்த காரியங்கள் தெய்வ பலத்தினால் அனுகூலமாகும். எந்தக் காரியத்திலும் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். பொருளாதாரம் அபிவிருத்தி அடையும். நண்பர்கள், உறவினர்கள் உதவ முன் வருவார்கள். அலுவலகத்தில் புதிய பொறுப்புகள் வந்து சேரும். வியாபாரிகள் விருத்தியடைவார்கள். பழைய கடன் தொல்லைகள் தீரும். எஃகு, இரும்பு, இயந்திரம், உலோகம், தோல், எலக்ட்ரானிக்ஸ், ரியல் எஸ்டேட், ஏற்றுமதி இறக்குமதி ஆகிய இனங்கள் லாபம் கொண்டு வரும்.



மிதுன ராசிக்காரரான ஒளிப்பதிவாளர் கோபிநாத், எதிர்பாராத பயணத்துக்குத் தயாராக வேண்டுமாம்.

மீனம் : 9ல் கேது, 5ல் குரு நின்று பார்ப்பதால், தெய்வானுகூலம் அதிகரிக்கும். ராசிநாதன் குரு 5ம் இடத்தில் செவ்வாயுடன் 4ல் சூரியன், புதன், 3ல் சனி ராகு, 9ல் கேது சஞ்சாரம் என்பதோடு சந்திரபலமும் கூடியிருப்பதால் தேக ஆரோக்கியம் மேன்மை தரும். எப்படிப்பட்ட கடினமான காரியமாக இருந்தாலும், திறமையாகவும் பக்குவமாகவும் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். கலைத் துறையினர் வளர்ச்சி காண்பார்கள். கணவன் - மனைவி ஒற்றுமை, மன மகிழ்ச்சி, மக்கள் நலம், உறவினர் வருகை, நண்பர்கள் குதூகலம் உண்டாகும்.



தேசமெங்கும் சுதந்திரத் வேட்கை பற்றியெரிந்து கொண்டிருந்த கால கட்டம். 1942ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் நாள். விருது நகர் நகரசபைக் கூட்டம், துணைத் தலைவர் தலைமையில் நடந்து கொண்டிருந்தது. தொண்ணூறாவது தீர்மானம் நிறைவேறிக் கொண்டிருந்தது. அப்போது கம்பீர உருவத்தில் கதராடையில் ஒரு வெண்களிறுபோல உள்ளே நுழைந்தார் ஒருவர். எல்லோரும் மரியாதை நிமித்தமாக எழுந்து நின்று அவரை ஆச்சர்யமும் சந்தோஷமுமாக வரவேற்றார்கள். உள்ளே நுழைந்தவர் காமராஜர். அவர்தான் அன்றைய விருதுநகர் நகரசபைத் தலைவர். வேலூர் சிறையில் இருந்த காமராஜர் 1941-ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் தேதி ஏகமனதாக நகரசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒன்பது மாதங்களுக்கு பின் விடுதலை செய்யப்பட்டதும் அவர் முதல் வேலையாக நகர சபைக்குத்தான் வந்தார்.

ஆஹா! தலைவர் வந்துவிட்டார் என்று உறுப்பினர்கள் சந்தோஷப்பட்டார்கள். காமராஜர் நகரசபைத் தலைவருக்கான ஆசனத்தில் அமர்ந்தார். தொண்ணூறாவது தீர்மானம் வாசிக்கப்பட்டது. அதைப் பதிவு செய்துவிட்டு எழுந்தார்.

''என்னைச் சேர்மனாகத் தேர்ந்தெடுத்தது பற்றி சந்தோஷப்படுகிறேன். எனக்குப்பல முக்கிய வேலைகள் இருக்கின்றன. எனவே என்னால் வேலை பார்க்க இயலாது. நான் சேர்மன் பதவியில் இருந்து விலகிக் கொள்கிறேன்.'' என்று சொல்லி, ராஜினாமா கடிதத்தைத் துணைத் தலைவரிடம் கொடுத்து விடைபெற்று இறங்கிச் சென்றார். கட்சி வேலைக்காகப் பதவியைத் தூக்கியெறிந்துவிட்டுச் சென்று கொண்டிருந்த காமராஜர் நகரசபையைவிட்டு வெளியேறும் முன் சொன்ன வார்த்தைகள் இவை:


''ஒரு பதவி, அது கௌரவப் பதவியாக இருந்தாலும் சரி, அந்தப் பதவியை வகிப்பவர்கள், சரியாகக் கவனித்துச் செயலாற்ற வேண்டும். அது முடியாதவர்கள், அல்லது அதற்குத் தோது இல்லாதவர்கள் அப்பதவிக்கு வரவே கூடாது.'' பதவிகளால் காமராஜர் உயரவில்லை. பதவிகள் அவரால் கௌரவம் பெற்றன.

சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு, காந்தியின் தாசனாக ஒன்பது ஆண்டுகள் சிறையில் கழித்த காமராஜர், சுதந்திரத்திற்குப் பிறகு 1954ல் தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

எட்டு அமைச்சர்களைக் கொண்ட சிறிய அமைச்சரவை மூலம், அவர் தந்த ஒன்பதாண்டு கால ஆட்சியைப் 'பொற்காலம்' என இன்றைய தலைமுறை வர்ணித்து ஏங்கும்படி ஆட்சி நடத்தினார். கல்வித் துறையையும் தொழில் துறையையும் தமதிரு கண்களாகவே நினைத்துச் செயல்பட்ட காமராஜர், அதிகம் பேசியதில்லை. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிற சக்தி அவரிடம் இருந்தது. ''ஆகட்டும் பார்க்கலாம்'' என்பதுதான் பந்தா இல்லாத அவரின் தாரக மந்திரம்.

தேசிய அரசியலில் 'கிங் மேக்கர்' என்று வர்ணிக்கப்பட்ட காமராஜருக்கு, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைமைப் பொறுப்பு தேடி வந்தது.


நோ ரீல்! நோ பந்தா!! ஒன்லி ஆக்ஷன்!!!



நேருவுக்குப் பிறகு இரு முறை அந்தப் பதவியை வகித்த செயல் வீரர். பதவியில் இருந்தபோதும் சரி, இல்லாத போதும் சரி, அவர் மக்களின் இதயங்களில் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கிறார். திருமணம் செய்து கொள்ளாமல், நாட்டுக்கே தன்னை அர்ப்பணித்த காமராஜர், காந்திஜியின் பிறந்த நாளில் மறைந்தார்.

அவர் மறைந்த போது வசித்தது வாடகை வீடு. அரை டஜன் கதர் ஆடைகள், இரு முகச் சவர செட்டுக்கள்தான் அவர் விட்டுப்போன உடமைகள். இப்படிப்பட்ட மக்கள் தலைவருக்குத்தான் ஜூலையில் நூற்றாண்டு விழா. விருதுநகரில் அவருக்கு மணி மண்டபம் எழுப்ப வேண்டும் எனக் கட்சி வேறுபாடுகள் மறந்து கருத்துச் சொல்கிறார்கள் விருதுநகர் மக்கள். அரசு கட்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல், விருது நகர் பெரிய வள்ளிக்குளத்தில் காமராஜர் நினைவு மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டிவிட்டார்கள். ●

மாவட்ட பிட்ஸ்



தெய்வ குத்தம்!

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்புக்கு அருகிலுள்ள கிராமம் இலந்தைகுளம். இந்தக் கிராமத்தில் வாழ்கிற மக்கள் ஆயுசு முழுவதும் வெள்ளை உடைகளை மட்டுமே அணிகிறார்கள். கிராமத்திலிருந்து திருமணமாகி அயல் ஊருக்குச் செல்லும் பெண்கள் மட்டும், வண்ணப் புடைவைகளை அணிந்து கொள்ளலாம். அதே சமயம் இந்தக் கிராமத்து இளைஞர்களுக்கு வாக்கப்பட்டு வரும் பெண்கள் கட்டாயமாக வெள்ளை உடைதான் அணிய வேண்டும்.

கிராம மக்களின் இந்த விநோத பழக்க வழக்கத்திற்கு என்னதான் காரணம்...? ஏழு தலைமுறைகளுக்கு முன்னால், முன்னோர்கள் செய்த தெய்வ குத்தத்தால், தாங்கள் வெள்ளை உடைகளை அணிந்து வருவதாகச் சொல்கிறார்கள் இந்தக் கிராமத்தினர்.

ஓடைப்பட்டி விநாயகர்

விருதுநகர் – மதுரை தேசிய நெடுஞ்சாலை ஓரத்தில் அமைந்துள்ள கிராமம் ஓடைப்பட்டி. இக்கிராமத்திலுள்ள வன்னி விநாயகர் கோயில் பிரசித்தி. இக்கோவிலுக்குச் சென்று வந்தால் நினைத்த காரியங்கள் கைகூடுகிறது என்ற ஐதீகம் நிலவுவதால் பக்தர்களின் வருகை அதிக அளவில் உள்ளது.

– வே. முத்துக்குமார்

தமிழக அரசின் கோபுரம்

தமிழ்நாடு அரசின் சின்னமாகத் திகழும் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் கோபுரம் 192 அடி உயரம். 11 அடுக்குகளையும், 11 கலசங்களையும் கொண்டது. 1950ம் ஆண்டில் பி.எஸ். குமாரசாமி ராஜா முதலமைச்சர் பதவியை

• பஞ்சமுக வினாயகர்





ஆயுசு பூரா வெற்றிலை உடைதான்

ஏற்ற பின்னர் திருவில்லிபுத்தூர் கோயில் கோபுரத்தை அரசின் சின்னமாக அறிவித்தார்.

குட்டி பஞ்சாப்!

திருவில்லிபுத்தூரிலிருந்து ஒன்பதாவது கிலோ மீட்டரில் அமைந்துள்ள ஊர் பெருமாள் தேவன்பட்டி. இந்த ஊரின் தனிச்சிறப்பு வீட்டிற்கு ஒரு இராணுவ வீரனை உருவாக்குவோம் என்பது. வீட்டில் ஆண் குழந்தை பிறந்தால் இராணுவ வீரனாகவும், பெண் குழந்தை பிறந்தால் வீரனின் மனைவியாகவும் கருது கிறார்கள்.

ராஜபாளையம் நாய்!

ராஜபாளையம் நாய் மிகவும் பிரசித்தி பெற்றது. விவசாயிகளின் உற்ற தோழ



• அங்காள ஈஸ்வரி அம்மன்



• சுந்தர மந்திரம்

போலீஸ் பாலம்

கடந்த 2000ம் ஆண்டில் விருதுநகரில் காவல்துறையின ரால், தமிழகத்திலேயே முதன் முறையாகப் போக்கு வரத்திற் குப் பாலம் கட்டப்பட்டுள்ளது. இதற்குப் 'போலீஸ் பாலம்' என்ற பெயர் வழங்கப்பட்டுள் ளது.

— இராஜபாண்டி
அருப்புக்கோட்டை



• திருமேனிநாதர் துணை மாலையம்மன் கோவில்

னாக இந்த நாய்கள் செயல்படுகின்றன. விவசாயிகளுடன் சேர்ந்து விளை நிலங்களைக் காவல் புரிகின்றன. அதீத மோப்ப சக்தியால், விளை நிலத்தை நாசமாக்கும் காட்டுப்பன்றி, பெருச்சாளிகளைக் கண்டு பிடித்து விரட்டியடிக்கின்றன.

வீட்டுக் காவலுக்கும் ஏற்றவை.

குட்டி ஜப்பான்

■ தமிழகத்தில் அதிகமான அளவு பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் உள்ளன.



இதனால் இந்நகரை 'குட்டி ஜப்பான்' என்று அழைக்கின்றனர்.

■ 'பிரிண்டிங் பிரஸ் துறையில் பல உயரிய தொழில் நுட்பங்களைக் கொண்ட அச்சுக் கூடங்கள் சிவகாசியில் தான் உள்ளன.

■ ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, சதுரகிரி, தாணிப்பாறை, கூமாப்பட்டி ஆகிய பகுதிகளில் 'சப்பட்டை' எனப்படும் மாம்பழம் மே, ஜூன் மாதங்களில் அதிக அளவில் விளைச்சலாகிறது. தென் மாவட்ட மாம்பழங்களில் இதற்கு 'ஹீரோ' அந்தஸ்து கிடைக்கிறது.

■ விருதுநகர் மாவட்டத்தில் மக்கள் தொகையில் முதலிடம் வகிக்கும் நகரம் ராஜபாளையம்.

— செ. மதுக்குமார்

நிலம் வேண்டும்!

இராஜபாளையத்தில் 1991ல் பெண்கள் நூலகம் ஆரம்பிக்கப்பட்டு ஐந்து புரவலர்களையும், 1063 உறுப்பினர்களையும் கொண்டு 12 வருடங்களாக ஒரு வாடகை கட்டிடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இடப்பற்றாக்குறையினால் புத்தகங்கள் வைக்க இடமில்லாமலும், பெண்கள் நிறைய பேர் வந்து உட்கார்ந்து படிக்க வசதியில்லாமலும் இருக்கிறது. அரசு நிலம் கொடுத்தால் கட்டிடம் கட்டித்தர பலர் தயாராயிருக்கிறார்கள்.

அரசிடம் நிலம் வேண்டி, பத்து வருடங்களாக இராஜபாளையம் நகர் மாதர் சங்க கூட்டமைப்பினர் முறையிட்டும் பலனில்லை.

— ஐ. ராதாலட்சுமி,
இராஜபாளையம்.

திருச்சுழி இப்போது சுற்றுலா தலம்!

அருப்புக்கோட்டைக்கு அருகில் அமைந்துள்ளது திருச்சுழி கிராமம்.

"பக்திக்கு திருவண்ணாமலை
முக்திக்கு திருச்சுழி" என்பார்கள்.

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி பிறந்தது திருச்சுழியில்தான்!

இங்கே அருள்மிகு திருமேனி நாதர் (பூமி நாதர்) துணை மாலை என்ற சகாய வள்ளி யம்மன் கோவில் அமைந்துள்ளது.

பாண்டி நாட்டு பதினான்கு சிவஸ்தலங்களில் பத்தாவது சிவஸ்தலமாக விளங்குகின்றது. சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்க வாசகர் போன்ற சிவனடியார்களால் போற்றிப் பாடப் பெற்ற புண்ணிய சிவஸ்தலமாகும்.

இப்புண்ணிய திருக்கோவில் அருகிலேயே பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி பிறந்த வீடு உள்ளது. ரமணரின் இல்லம் இன்று வரையும் "சுந்தர மந்திரம்" என்னும் பெயரில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

திருச்சுழி திருத்தலம் தற்போது தமிழக அரசால் சுற்றுலாத்தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

செய்தி, படங்கள்: பா. செல்வராஜ்,
திருச்சுழி.

சமதர்மகோயில்!

விருதுநகர் மாவட்டம். காரியாபட்டி அருகில் அ.தொட்டியன்குளம் கிராமத்தில் சமதர்ம கோயில் உள்ளது.

எழுநூறு ஆண்டுகள் புராதன மான இக்கோவிலில் வாலகுரு நாதர் – அங்காள ஈஸ்வரி அம்மன் அருள்பாலித்து வரு கிறார்கள். அக்னி வீரபத்திரரும் கோவிலின் உள்ளே உள்ளார்.

இக்கோவிலில் அக்கினி வீரபத்திரரைக் குலதெய்வமாக வணங்குவோர் தம் மூத்த பிள்ளைகளுக்கு, ஆணாக இருந் தால் வீரபத்திரன், வீரமணி, வீராச்சாமி, வீரசேகர் என்றும், பெண்ணாக இருந்தால் வீரம் மாள், வீரலட்சுமி, வீராயி என்றும் பெயர் சூட்டுகின்றனர்.

– கரு. கருப்பையா,
திருப்புவனம்.

பஞ்சமுகவிநாயகர்

சிவகாசி நகரில் அருள்மிகு பத்ரகாளியம்மன் ஆலயம் உள்ளது. சக்திமிகு இந்த ஆலயத்தில் பஞ்சமுக விநாயகர் அமர்ந்து அருள்பாலித்து வருவது இந்த ஆலயத்திற்குக் கூடுதல் ஆன்மிகச் சிறப்பு தருவ தாக அமைந்துள்ளது.

– இரா. வளையாபதி,
தோட்டக்குறிச்சி.

அதிபர்!

மொரிஷியஸ் தீவின் அதிபராக



• குமாரசாமி ராஜா



• காமராஜர்



• ஓ. பன்னீர்செல்வம்

இருந்தவர் ஆர்.வீ. செட்டியார். இவர் விருதை மாவட்டத்தைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

– பிரபாலிங்கேஷ்
மே.கி.புதூர்.

நல்லதங்காள் கோயில்!

வத்திராயிருப்பு என்ற கிராமம் சரித்திர புகழ்பெற்றது. பசியின் கொடுமையால் தன் குழந்தைகளைப் பாழும் கிணற்றில் தள்ளி விட்டு, தானும் அக்கிணற்றில் விழுந்து உயிர் விட்ட நல்லதங்காளுக்கு இங்கு ஆலயம் உள்ளது.

– கே.எல்.புனிதா,
மேலகிருஷ்ணன்புதூர்.

மூன்று முதல்வர்கள்!

தமிழ் நாட்டில் மூன்று முதலமைச்சர்களைத் தந்த பெருமை விருதுநகர் மாவட் டத்திற்கு உண்டு. முன்னாள் முதலமைச்சர்களான குமாரசாமி ராஜா, காமராஜர், ஓ. பன்னீர் செல்வம் ஆகியோர் இந்த மாவட் டத்தைச் சேர்ந்தவர்கள்.

– அ. ச. அலெக்சாண்டர்,
தி.அத்திப்பாக்கம்.

கல்கி
VBC Jewellery
இணைந்து வழங்கும்

புன்னகைப் போட்டி -18 முடிவு

டீ.வி. சீரியல் டைட்டில் ஸாங்க் பல்லவி எழுதச் சொல்லியிருந்தோம். வந்து குவிந்த பல்லவிகளில் தலா நான்கு கிராம் தங்கள் பெறும் பல்லவி கள்.

மஞ்சு! மஞ்சுமஞ்சு! ஓ!
இவள் பாசமுள்ள நெஞ்சங்களில்
இலவசம்பஞ்சு

P. ஜெயப்பிரகாஷ், TNEB குடியிருப்பு
பொள்ளாச்சி வழி சேத்துமடை (P.O)
சர்க்கார்பதி – 642133. கோவை மாவட்டம்

அரைக்கீரை, முளைக்கீரை, அகத்திக் கீரை இருக்கையிலே கிள்ளுக்கீரையாக்கு வது நியாயமா? பெண்ணைக் கிள்ளுக் கீரையாக்குவது தர்மமா!

ஆர். மீனலதா, C/o.பிஜிஎம்டி,
எம்டிஎன்எல், பிபிடி, டெலிபோன்
ஹவுஸ், வி.எஸ். மார்க், தாதர்(மே),
மும்பை - 28

4

ஜி.எஸ்.எஸ்.

இந்தியாவுடன் ஜம்மு காஷ்மீரை இணைக்க மன்னர் ஹரிசிங் ஒப்புக் கொண்டார். அந்த ராஜாங்கத்தின் முக்கிய அரசியல் கட்சியின் தலைவரான ஷேக் அப்துல்லாவும் சம்மதித்தார். ஆனால் இவற்றைச் சிறிதும் ஜீரணிக்க முடியாத பாகிஸ்தான், காஷ்மீருக்குள் நுழைந்த தனது ராணுவத்தை வாபஸ் பெற மறுத்துவிட்டது.

இப்போது காஷ்மீர் பிரச்னையில் எந்த மூன்றாவது நாட்டின் தலையீட்டையும் விரும்பமாட்டோம் என்று இந்தியா சொன்னாலும், இந்தப் பிரச்னையை முதன் முதலில் ஐ.நா. சபைக்கு எடுத்துச் சென்றது நம் நாடுதான்! 'அத்துமீறிய பாகிஸ்தான் ராணுவத்தினர் உடனடியாக காஷ்மீரிலிருந்து பின்வாங்க வேண்டும்'_ இப்படியொரு முடிவைத்தான் ஐ.நா. எடுக்குமென்று நேரு எண்ணினார்.

ஆனால் "காஷ்மீரின் வருங்காலம் அதன் மக்களின் விருப்பத்தைப் பொருத்தது" என்று தீர்மானம் போட்டது ஐ.நா. சபை. பாகிஸ்தான் இதற்கு ஒப்புக் கொண்டது.

நேரு இதனால் கொதிப்படைந்தார். "அமெரிக்காவும், இங்கிலாந்தும் இணைந்து செய்த சதி இது. நியாயம் கிடைக்கும் என்று ஐ.நா. சென்ற நமக்குக் கிடைத்தது ஏமாற்றம் தான்" என்றார்.

காஷ்மீர் மக்களின் விருப்பம் குறித்த கருத்துக் கணிப்பை இன்றளவும் இந்தியா அதிகாரபூர்வமாக நடத்தவில்லை. ஆனால் "அப்படி ஒரு கணிப்பை நடத்துவதற்கு முதல் கட்டமாக, தான் ஆக்கிரமித்துக் கொண்ட பகுதியைவிட்டு பாகிஸ்தான் ராணுவம் வெளியேற வேண்டும்" என்ற ஐ.நா. நிபந்தனையை பாகிஸ்தானும் நிறைவேற்றவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜம்மு காஷ்மீர் பகுதியில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ராணுவங்களுக்கிடையே மோதல்கள் தொடர்ந்து நடைபெற்றுள்ளன. 1949ல் போர் நிறுத்தத்திற்கு இரு தரப்பும் ஒப்புக் கொண்டது. ஆனால் அப்போதே 84,000 சதுர அடி பரப்பு பாகிஸ்தான் வசம்!

இந்திய அரசியல் அமைப்பில் ஒரு மாற்றம் செய்யப்பட்டது. அறிமுகப்படுத்தப்பட்ட 370ம் பிரிவு காஷ்மீருக்கு ஸ்பெஷல் அந்தஸ்தைக் கொடுத்தது. அரசியல்





காஷ்மீர்



அமைப்பு சட்டத்தை உருவாக்கிய பலருக்கும் (அம்பேத்கர் உட்பட) இது பிடிக்கவில்லை. என்றாலும் இந்திய பாராளுமன்றம் 'இது ஒரு தாற்காலிக ஏற்பாடுதான்' என்று கூறி இந்தப் பிரிவை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. அரை நூற்றாண்டுக்கு மேலாகியும் இந்தத் 'தாற்காலிக ஏற்பாடு' தொடர்கிறது!

இதற்குள் ஜம்முகாஷ்மீர் மாநிலத்திலும் சில குறிப்பிடத்தக்க மாறுதல்கள். ஷேக் அப்துல்லா தலைமையிலான அரசு, மன்னர் ஹரிசிங் பதவியிறங்க வேண்டும் என்று தீர்மானித்தது. எதிர்ப்பில்லாமல் அதை ஏற்றுக் கொண்டார் ஹரிசிங். காரணம் அவரது இடத்தைப் பிடித்த

கரண்சிங் அவரது மகன்தான். இதே 1949ம் ஆண்டின் இறுதியில் கரண்சிங்கின் பதவி 'ஆட்சியாளர்' என்பதிலிருந்து 'சர்தார் - இ - ரியாஸத்' என மாறியது. அதாவது ஜனாதிபதி என்று இதைக் குத்துமதிப்பாக மொழி பெயர்க்கலாம். ஆம், ஜம்மு காஷ்மீர் நம்மோடு இணைந்துவிட்டாலும் அதற்கென்று ஒரு பிரதம மந்திரியும் (ஷேக் அப்துல்லா) ஜனாதிபதியும் இருந்தார்கள்! சரித்திரத்தின் பிற்காலப் பகுதியில் ஏற்பட்ட தாஷ்கண்ட் ஒப்பந்த காலகட்டத்தில்தான் இந்தப் பதவிகள் முறையே முதல்வர், ஆளுனர் என மாறின.

1951ல் ஜம்மு காஷ்மீர் தனக்கென ஓர் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிக் கொண்டது. அந்த ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தல்களில் 45 தொகுதிகளில் ஷேக் அப்துல்லாவின் கட்சி வெற்றி பெற்றது (மொத்தத் தொகுதிகளின் எண்ணிக்கை 45).

ஷேக் அப்துல்லா அரசுக்கும் இந்திய அரசுக்கும் மேலும் உடன்பாடு ஏற்பட, ஜம்மு காஷ்மீர் சுயாட்சி உரிமைகள் உள்ள ஒரு மாநிலமாக இந்தியாவில் விளங்கும் என்று முடிவெடுக்கப்பட்டது.

இப்போதைய பாரதிய ஜனதா கட்சியின் தாய்க்கட்சியான ஜனசங், இதைக் கடுமையாக எதிர்த்தது. ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு எந்த ஸ்பெஷல் அந்தஸ்தும் கூடாதென்றது. 'பிற மன்னர்களைப் போன்றே ஓர் உடன்படிக்கையில்தான் ஹரிசிங்கும் கையெழுத்திட்டார். எனவே பிற மாநிலங்களைப் போலத்தான் ஜம்மு காஷ்மீரும் நடத்தப்பட வேண்டும்' என்று வாதிட்டது ஜனசங். இந்த நிலையில் (மர்மமான முறையில்) காஷ்மீர் சிறைச்சாலையில் ஜனசங் தலைவர்களில் ஒருவரான ஷ்யாம் பிரசாத் முகர்ஜி இறந்தார்.

ஜம்மு காஷ்மீர் பலவிதங்களில் ஸ்பெஷல்தான். அங்கு பிற இந்தியர்களால் சொத்து எதையும் வாங்கிவிட முடியாது. அங்கு நுழைவதற்கே பாஸ்போர்ட்டுக்கு சமமான அடையாள அட்டையை பிற இந்தியர்கள் வைத்திருக்க வேண்டும்.

சீக்கிரமே இந்திய அரசுக்கும் ஷேக் அப்துல்லாவுக்கும் இடையே பிணக்குகள் தோன்றின. பலவித ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கினார் ஷேக் அப்துல்லா. உடனே அவர் தமது ஆளுமையைக் காட்டும் வகையில் இந்தியாவுக்கெதிரான கருத்துக்களைப் பகிரங்கமாக வெளிப்படுத்தத் தொடங்கினார். உடனே பதவி நீக்கம் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அடுத்த காஷ்மீர் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பக்ஷி குலாம் முகமது.

உள்நாட்டில் இவ்வளவு பரபரப்பான மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்க, பாகிஸ்தான் மேலும் மேலும் நெருக்கடிகளை நேரிடையாகவும் மறைமுகமாகவும் கொடுத்துக் கொண்டிருந்தது. 1954ம் ஆண்டு இறுதிக்குள் இந்தியாவும் பாகிஸ்தானும் இணைந்து ஒரு நிர்வாகக் குழுவை அமைப்ப



தென்றும், அது காஷ்மீர் மக்களின் விருப்பத்தைக் கவனிக்கும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

இதற்கிடையில் இந்தியாவுடன் முழுமையாக இணைய பக்ஷிகுலாம் சம்மதித்தார். 1956ல் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மீண்டும் மாறுதல். பிற மாநிலங்களோடு ஜம்மு காஷ்மீரும் சமமாக்கப்பட்டது. ஆனால் அரசியல் காரணங்களுக்காக 370ம் பிரிவு தொடர்ந்தது.

1963ல் வெடித்தது வன்முறை. பாகிஸ்தான் ராணுவத்தினரும் காஷ்மீர் தீவிரவாதிகளும் இந்திய எல்லைக்குள் நுழைந்தனர். தொன்மையான அஸ்ரத் பால் மசூதியில் பாதுகாக்கப்பட்ட இறைச் சின்னம் காணாமல் போனது. நல்லவேளையாக சுமார் ஒரு வாரத்திலேயே இது கண்டு

பிடிக்கப்பட்டு மீண்டும் அதே மசூதியில் வைக்கப்பட்டது.

ஷேக் அப்துல்லா 1964 ஏப்ரல் எட்டாம் தேதி சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவர் மீது தொடுக்கப்பட்டிருந்த தேசத்து ரோக வழக்கு வாபஸ் பெறப்பட்டது. அவரும் ஜவஹர்லால் நேருவும் காஷ்மீர் குறித்து தீவிரமாகப் பேச, இதன் தொடர்விளைவாக நேருவின் விருப்பப்படி பாகிஸ்தானின் ராணுவ அதிபரான அயூப்கானைச் சந்தித்துத் திரும்பினார் ஷேக் அப்துல்லா.

பாகிஸ்தான் அடங்குவதாய் இல்லை. இந்தியாவைத் தாக்கியது. கடும் தோல்வி யுற்றது. ஒரு வழியாக ஒப்பந்தத்துக்கு ஒத்துக் கொண்டது. சோவியத் யூனியனில் இருந்த தாஷ்கண்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அங்கேயே இறந்தார். தாஷ்கண்ட் ஒப்பந்தத்தின் கதி வருங்காலத்தில் என்ன ஆகும் என்பது அவருக்குத் தெரிந்து விட்டதோ என்னவோ!

1966 ஜனவரி பத்தாம் தேதி கையெழுத்திடப்பட்ட தாஷ்கண்ட் ஒப்பந்தத்தின் சாரம் இதுதான்:

இரு தரப்பினரும் தங்கள் ராணுவத்தைத் தங்கள் எல்லைகளுக்குள் வரும் பிப்ரவரி 25க்குள் வாபஸ் பெறவேண்டும். ஒருவரது உள்நாட்டு விஷயங்களில் மற்றவர் மூக்கு நுழைக்கக் கூடாது. இன்னொரு நாட்டுக்கெதிரான பிரசாரத்தை ஊக்குவிக்கக் கூடாது. வணிகத் துறையிலும் நட்புறவு தொடரும் என்ற அந்த ஒப்பந்தம் சோவியத் யூனியனுக்கும் உஸ்பெகிஸ்தான் அரசுக்கும் (அதன் எல்லைக்குள்தான் தாஷ்கண்ட் இருக்கிறது) நன்றி கூறியது.

தொடர்ந்த காலகட்டத்தில் வேறொரு பூகம்பம் வெடித்தது. தாஷ்கண்ட் ஒப்பந் தத்தின்படி பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரங்களில் நாம் தலையிடக் கூடாது தான். ஆனால் பாகிஸ்தானின் ஒரு பகுதியே 'ப்ளீஸ், நீங்கள் எங்கள் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டுத்தான் ஆகவேண்டும்' என்று கேட்டுக் கொள்ள நிலைமை மாறியது.

பெரும் பூகோளப் பரப்பினால் மேற்கு பாகிஸ்தானிலிருந்து பிரிக்கப்பட்டிருந்தது கிழக்கு பாகிஸ்தான். தங்களுக்கு உரிய பிரதிநிதித்துவத்தையோ கௌவரத்தையோ மேற்கு பாகிஸ்தான் அளிக்கவில்லை என்று கருதியது முஜிபூர் ரஹ்மானின் தலைமையில் அணிவகுத்த கிழக்கு பாகிஸ்தான். கிழக்கு பாகிஸ்தானில் உருவான இந்தப்புரட்சிக்கு இந்தியாவின் ஆதரவு இருந்தது என்றெண்ணியது பாகிஸ்தான். இந்த எண்ணத்தைத் தவறு என்று சொல்ல முடியாது. ஆனால் அந்தப் புரட்சியை இந்தியாதான் ஊக்குவிக்கிறது என்று குற்றம் சாட்டும் அளவுக்குப் போய்விட்டது பாகிஸ்தான். இதனால் இந்தியாவின் மீது வான்வழித் தாக்குதல் நடத்தியது.

தனக்காகவும், தன்னைத் தஞ்சமடைந்த கிழக்கு பாகிஸ்தானுக்காகவும், (மேற்கு) பாகிஸ்தானிடம் போரிட்டு வென்றது இந்தியா. கிழக்கு பாகிஸ்தான் பங்களாதேஷ் என்ற பெயரில் தனி நாடானது. இந்தியாவின் மீதான பாகிஸ்தானின் கோப வெறி தீவிரமடைந்தது.

ஆனால் ஒன்று, பங்களாதேஷ் உருவான காலகட்டத்தில்கூட (மேற்கு) பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான எல்லைகளில் மாறுதல் வந்துவிடவில்லை. பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் நடந்த இந்த மூன்றாவது போரில், சுமார் ஒரு லட்சம் பாகிஸ்தானியர்கள் இந்தியாவிடம் சரணடைந்தனர்.

புகழ்பெற்ற சிம்லா ஒப்பந்தம் இரு நாடுகளுக்கிடையே 1972ல் கையெழுத்தானது. இதன்படி, எல்லைக்கோடு தொடர்பான சிக்கலை இரு நாடுகளும் மட்டுமே பேசித் தீர்த்துக் கொள்வது என்று முடிவானது. இதற்கு முன் இரு நாடுகளும் செய்து கொண்ட அத்தனை ஒப்பந்தங்களும் (ஐ.நா.வின் ஆலோசனை உட்பட) செயலிழந்ததாகக் கருதப்படுமென்றும், சிம்லா ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் இனி இரு நாடுகளுக்கிடையே பிணக்குத் தீர்த்துக் கொள்ளப்படும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

(தொடரும்)

''அத்தைனு சொன்னா அடுத்த வார்த்தை பேசமாட்டா என் மருமக...''

''உங்கமேல அவ்வளவு மரியாதையா?''

''மரியாதையா? இதுக்கு மேல என்ன பேச்சு வேண்டிக்கிடக்குன்னு சண்டையைத் தொடங்கிடுவா!''

— சகிதா முருகன்

நீங்கள் கேட்டவை - தராசு

'டைம்' தரக்



* சூளுரைக்கிறார்

● கண்ணன், தாமல்

? குஜராத்தில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்குப் பதில் தர முடியாத பா.ஜ.க., உலக மக்களை ஏமாற்றுவதற்காக அப்துல் கலாமை ஜனாதிபதியாக்க முயற்சி செய்கிறது என்று பெங்களூர் எம்.பி.ஷெரீஃப் சொல்வதை ஏற்கிறீர்களா..?



*வேட்டு வைக்கிறார்!

! இதனாலெல்லாம் தனது இமேஜ் உயரும் என்று பி.ஜே.பி. எண்ணினால் அந்த ஆசைக்கு வேட்டு வைக்கவே காத்திருக்கிறார் குஜராத் மோடி.

● எஸ்.கே. விஜயன், சென்னை - 78

? அப்துல் கலாமின் சிகை அலங்காரத்தை மாற்றச் சொல்லி பால் தாக்கரே யோசனை கூறியுள்ளது எதைக் காட்டுகிறது...?

! தாம் சொல்லிக் கொள்ளும் அளவுக்கு அவர் நல்ல கார்டூனிஸ்ட் இல்லை என்பதை.

● எம்.டி. ரவிகாந்த், காஞ்சிபுரம்

? பாகிஸ்தான் தனது கட்டுப்பாட்டில் உள்ள எல்லைப் பகுதியிலிருந்து நமது கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீருக்குப் பயங்கரவாதிகளை ஏற்றுமதி செய்வதை, கடந்த சில நாட்களாக ஏறத்தாழ நிறுத்தியுள்ளது. இது தற்காலிக நடவடிக்கை தானே...?

! முஷரஃப் நியூஸ்வீக் இதழுக்கு அளித்த பேட்டியில் அப்படித்தான் உணர்த்தியிருக்

ரூ.100 பரிசு பெறுபவர் :
சீதா, க/பெ, டி.ஆர். ராமநாதன்,
90, முதல் குறுக்குத் தெரு, அவ்வை திருநகர், கோயம்பேடு, விருகம்பாக்கம்,
சென்னை - 600 092.

நறைவாய் எழுதியுள்ளதே..?



குண்டு போடுகிறார்!

கிறார். "ஊடுருவலை ஒட்டு மொத்தமாக நிறுத்துவதாக ஒப்புக் கொள்ளவில்லை; பேச்சு வார்த்தைகள் தொடங்க ஒரு சாதகமான சூழலை உருவாக்குகிறேன். இந்தியாவும் இறங்கி வரவேண்டும்" என்கிறார்.

● அ. ராஜா ரஹ்மான், கம்பம் ★

? துணை மேயர் கராத்தே தியாகராஜன் மேயர் பதவி ஏற்றிருப்பது எப்படி சரியாகும்?

! சரியில்லை என்று வழக்குத் தொடரப் பட்டுள்ளதே! ஸ்டாலின் இடத்தை நிரப்ப தேர்தல் நடத்தப்படக்கூடாது என உயர்நீதி மன்றம் - தடை விதித்திருக்க, அவரிடத்தில் மற்றொருவர் தற்காலிகமாய்க் கூட - அமர்த்தப்படுவது தவறு என்ற வாதம் எழுந்துள்ளது.

● சீதா, சென்னை - 92. ❒



● சிக்கியிருக்கிறார்!

? அப்துல் கலாம் திறமையானவர்; எளிமை யானவர் - எல்லாம் சரிதான். ஆனால், அண்ணா பல் கலைக் கழக வளாகத்தி லிருந்து அவர் டீ.வி.க்குக் கொடுத்த பேட்டி இன்னும் கொஞ்சம் polished ஆக இருந்திருக்கலாம் என்று நான் கருதுகிறேன்... தங்கள் கருத்து?

! அது கூட தேவலாம். நாம் அணு ஆயுதம் குவித்திருப்பதால்தான் இன்னமும் யுத்தம் மூளாமல் இருக்கிறது என்ற அலட்டல் வெறும் உளறல்!

★ ரூ. 50 பரிசு பெறுபவர் :
அ. ராஜா ரஹ்மான்,
தமிழ்நாடு அரசு பேருந்து நடத்துனர்,
கம்பம் II கிளை, கம்பம் - 625 516



● கோட் அடிக்கிறார்!

●கே.வி. ராமன், சென்னை - 73

? பிரதமர் வாஜ்பாயை விமர்சனம் செய்த டைம் செய்தியாளர் அலெக்ஸ் பெரி, மூன்று பாஸ்போர்ட் வைத்திருப்பதற்காக கேள்விக்குள்ளாகியிருக்கிறாரே...?

! கேள்விக்குத் திருப்திகரமாக பதில் கூறியதால் அவர் பணியில் தொடர்கிறார். இந்திய (மத்திய) அரசின் ஆரோக்கியமான ஜனநாயக போக்குக்குப் பாராட்டும் தெரிவித்துள்ளாரே!

●ராம கிருஷ்ணன், காயக்காடு

? தாயின் அன்பைப் பெற முடியாதவர்களின் நிலை எப்படி இருக்கும்...?

! சுதாகரனிடமோ தமிழ்க்குடிமகனிடமோ கேட்டுத் தெரிந்துகொள்ளலாமென்றால் இருக்கும் இடம் தெரிந்தால்தானே!



• ... வாடியிருக்கிறார்!

●கே.கணேசன், சென்னை - 16

? 'லஞ்ச ஒழிப்புப் பணியில் அரசியல் தலையீடு வந்தால் பதவியை ராஜினாமா செய்வேனேயொழிய கடமை தவறமாட்டேன்' என்று அறிவித்துள்ள திலகவதியின் துணிச்சல் பற்றி..?

! சொன்னதைச் செயல்படுத்துவார் எனில், ராஜினாமாவுக்குப் பிறகு என்ன செய்வதென்று யோசித்துத் திட்டமிடத் தொடங்கலாம்!

●எஸ்.பாலசந்தர், திருவாரூர்

? வாஜ்பாய் பற்றி 'டைம்' பத்திரிகை தரக்குறைவாக எழுதியுள்ளதே..?

! யானைக்கும் அடி சறுக்கும். மறுப்பு வெளியிட்டால் பிரசுரித்துவிட்டுப் போகிறார்கள். அதைவிடுத்து ரொம்பத்தான் பிரச்னை பண்ணினால் 'டைம்' செய்திக்கே மதிப்பு கூடும்.

●சி. மகேஷ், சென்னை - 26


? சென்னை மேயராக கராத்தே தியாகராஜன் எந்த அளவுக்குப் பொறுப்புடன் நடந்து கொள்வார் என்று எதிர்பார்க்கலாம்?

! 'கராத்தே' என்றால் வெறும் கை என்று அர்த்தம். வெறும் கையால் தாக்குவது இருக்கட்டும்.... இவர் வெறும் கையால் முழம் போடுகிறாரே!

●என்.வி.ரமணி, சென்னை - 92

? கலாம் சிறந்த அறிஞர்தான். ஆனால் இந்த அரசியல்வாதிகளின் சுய நலச் செயல்பாடுகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய தைரியம் அவரிடம் இருக்கிறதா? அவரை மதித்து நடக்கும் பக்குவம் அரசியல்வாதிகளிடம் ஐந்தாண்டு காலத்துக்கு எதிர்பார்க்க முடியுமா..?

! 1. இருக்கிறது 2. முடியாது



• தேட வைக்கிறார்...

●ஜி.மாரியப்பன் சின்னமனூர்

? வயல்வெளியில் அமர்ந்து உண்பது, வீட்டில் மெத்தையில் அமர்ந்து உண்பது, ஹோட்டலில் அமர்ந்து உண்பது, கல்யாணப் பந்தியில் அமர்ந்து உண்பது.... - எது சுகம்?

! எங்கே வேணா சாப்பிடுங்க. ஆனால், உழைச்சு சாப்பிடுங்க. அதுதான் பரம சுகம்!

●ஏ.கே.நாசர், லெட்சுமாங்குடி

? இன்று இலாபகரமான தொழில் எது...?

! வாஸ்து, கல்யாண மண்டபம் இரண்டையும் அடிச்சுக்க ஆள் இல்லை!

●தளவாய் நாராயணசாமி, அரிமளம்

? தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெயலலிதா அம்மாவுக்குப் புகழ் பெற்ற லண்டன் மியூசியத்தில் மெழுகுச் சிலை வைக்க வேண்டுமென பல முறை நான் கோரிக்கை வைத்தும் மத்திய அரசு பரிந்துரைக்கவில்லையே - யாது காரணம்?

! நிச்சயம் எதிர்க் கட்சிகளின் சதிதான்! ●

காவல் தேரோட்டம்!

பத்து நாட்கள் இரவு பகல் பாராது காவல் பணியில் இரண்டாயிரம் போலீசார் ஈடுபட்டிருக்க, கூட்டத்தைக் கலைக்கும் காவல் துறை வாகனங்கள் வஜ்ரா, வருண்... சுற்றிச் சுற்றி வர, மூன்று மாவட்ட எஸ்.பிக்கள், பன்னிரண்டு செக் போஸ்டுகள், ஆறு கி.மீ. சுற்றளவுக்குக் காவல் பணிகள்... அந்தப் பகுதியின் முக்கியமானவர்கள் ரகசிய போலீசாரின் கண்காணிப்பிலிருக்க, ஒட்டு மொத்த ஊரும் வீடியோ காமிரா கண்காணிப்பில்... என்று ஏதோ விஜயகாந்த் படம் பார்ப்பது போன்றிருந்தது.



சிவகங்கை மாவட்டம் கண்டதேவி ஸ்ரீ சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோயில் தேரோட்ட விழா முன்னேற்பாடுகளில்தான் இத்தனை அமர்க்களமும்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தேர்வடம் பிடித்து இழுக்க உரிமை கேட்கப் போய், தேரோட்டமே நின்று விட்டது. ஒரு வழியாக உச்சநீதிமன்றம் தேர் இழுக்க உரிமை வழங்கித் தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பை இன்னொரு தரப்பு ஒப்புக் கொள்ள மறுக்கவே, பெரிய சர்ச்சையாகி விட்டது. ஒவ்வொரு ஆண்டும் நின்று போய், பரபரப்பு ஏற்படுத்த, தேரோட்டத்தை இந்த ஆண்டு எப்படியாவது நடத்தி விடுவது என்று முடிவெடுத்து விட்டது அ.தி.மு.க. அரசு.

தாழ்த்தப்பட்ட வகுப்பினரை அனுமதிக்க மறுத்த மற்ற பிரிவினர், இந்த ஆண்டு தேரை இழுக்க மறுத்தால், காவலர்களை வைத்துத் தேரை இழுக்கும் உத்தேசத்தில், அவர்களை வேஷ்டி சட்டை அணியச் செய்து நிறுத்தியிருந்தது மாவட்ட நிர்வாகம். இருபது கி.மீ. சுற்றளவுக்குள் உள்ள மதுக்கடைகள் நான்கு நாட்களுக்கு முன்பே அடைக்கப்பட்டு சட்டம், ஒழுங்கு கண்டிப்புடன் காக்கப்பட்டது.

கோவிலுக்குள் வழிபடச் சென்றவர்களின் நிலைதான் பரிதாபம். தேங்காய் பழத் தட்டிலிருந்து உடம்பு முழுவதும் செக்கிங் செய்து அனுப்பப்பட்டதில், பக்தர்கள் சலிப்படைந்தனர்.

அமைதியும் ஒழுங்கும் தேர் வடம் பிடிக்கும் வரைதான். 'அனைவரும் தேர் இழுக்க வாருங்கள்' என்ற அறிவிப்பு ஒலிபெருக்கியில் வர, தேரை இழுத்தனர் மக்கள். தேருக்கு முன்னால் ஒரு கூட்டம். 'புரட்சித் தலைவி வாழ்க' என்று கோஷமிட்டது. தேரை ஓட்டியதற்குப் புரட்சித்தலைவிக்கு நன்றி தெரிவித்து நாளிதழ்களில் விளம்பரம் செய்திருந்தனர் ஒரு தரப்பினர்!

தேர் நிலைக்கு வந்தவுடன் சென்னை தலைமைச் செயலகத்துக்கு வெற்றித் தகவல்கள் பறந்தன.

கடந்த ஆண்டுகளில் தி.மு.க. அரசு செய்யத் தவறியதை அ.தி.மு.க. அரசு சாதித்து விட்டதாக மார்த்தட்டிக் கொண்டாலும் கண்டதேவியில் இரு சமூகத்தினரிடமும் மனக் கசப்புகள் இன்னும் நீங்கவில்லை.

— கி. சிங்காரவடிவேல்

'டைம்' சரியில்லாத 'டைம்'காரர்!

மும்பை மசாலா

பரவசமாகத்தானிருந்தது, எங்கள் முதல்வரின் குணத்தையும் வள்ளல்தன்மையையும் கேள்விப்பட்டதும் – ஆனால், அள்ளி அள்ளிக் கொடுப்பவர்களை, பாரி, காரி என்று புலவர்கள் பாடிய காலம் போய்விட்டது; நாமே கஷ்டப்பட்டு இரண்டு புலவர்களைப் பிடித்து வந்தாலும், அவர்கள் 'ஸாரி' என்று கழன்று விடுகிறார்களே! ஷகிலா பானு போபாலி என்ற முன்னாள் 'கவாலி ராணி', மும்பை ஆஸ்பத்திரி ஒன்றில் அனாதரவாகத் தவிப்பது பற்றிய செய்திகளைப் படித்துவிட்டு, விலாஸ்ராவ் தேஷ்முக் அரசு தரப்பில் உடனடியாக 50,000 ரூபாய்க்கு செக் அனுப்பியதை, ஆஹா ஓஹோ என்று புகழ வேண்டாம்; அட்லீஸ்ட், இப்படி நக்கலடிக்காமலாவது இருக்கலாமே? "செக் குடுத்திருக்கிறாரா? அது பவுன்சாகாமல் க்ளியராகட்டும் பார்க்கலாம்" என்கிறார்களே? ஹூம்... கஜானாவில் கால் காசு இல்லை; அரசு ஊழியர்களுக்கு இரண்டு மாச சம்பளப் பாக்கி; இந்த அழகில் போபாலிக்கு ஐம்பதினாயிரமா? கேலிக் கூத்துதான்!



• பெர்ரி

கேலிக் கூத்தாகிவிட்டதே, இந்த பி.ஜே.பிக்காரர்களின் கலாட்டா. அலெக்ஸ் பெர்ரி என்ற பத்திரிகையாளர், 'டைம்' மாகஸீனில் நம் பிரதமரைப் பற்றி எழுதியிருந்ததைக் கண்டித்து, சர்ச் கேட்டில், பி.ஜே.பி. ஆதரவாளர்கள், அந்தப் புத்தகத்தை எரித்து, பெர்ரிக்கு எதிராக கோஷமெழுப்பி ஆர்ப்பாட்டம் செய்ததில், விஷயம் ஊர் பூரா பரவிவிட்டதே! நம் அடல்ஜி, சின்ன வயதில் மதுவுக்கு அடிமையானவராம்; இன்றும் ஒரு பெக் விஸ்கி இல்லாமல் உறங்க மாட்டாராம்; அவருக்கு ஒரு கிட்னி, லிவர், ப்ளாடர் எல்லாமே ரிப்பேராம்; மூட்டுவலிக்கு மூட்டை மாத்திரைகள் முழுங்குகிறாராம்; இனிப்புகள், எண்ணெயில் வறுத்த பண்டங்களை விரும்பிச் சாப்பிடுவதால், கொலெஸ்ட்ரால் கண்ட்ரோலில் இல்லையாம்; 'அரசையோ அரசின் கொள்கைகளையோ விமர்சிக்கலாம்; ஆனால் அட்லஜி எனும் தனி மனிதரை விமர்சிக்கலாமா?" எனக் கொதித்தெழுந்துள்ளனர் இங்குள்ள பி.ஜே.பியினர்.



• அடல்ஜி ஆதரவாளர்கள்...

பெர்ரிக்கு மூன்று பா போர்ட்டுகள் இருப்பதை கேள்விக் குறியாக்கி அவரை விசாரித்து வ கிறதா இந்திய அரசு. அதற்கு பெர்ரி, "இந்திய களுக்கு விமர்சனங்களை ஏற்கும் மனப்பக்கு மில்லை; பிரிட்டனி இப்படி எழுதியிருந்தா யாரும் கண்டு கொண்டி ருக்க மாட்டார்கள்" என்கிறார். ஆக மொத்தம் பெர்ரிக்கு 'டைம்' சர் யில்லை!

'டைம்' சரியில்லை என்றாலும் சிலரின் 'டைமிங்' மிகச் சரியாக அமைந்து விடுகிறது பாருங்களேன், முலுண்டிலுள்ள புகழ் பெற்ற கேல்கர் காலேஜை முற்றுகையிட்ட திருடர்களின் 'டைம்' சரியில்லாததால், இரண்டாயிரம் ரூபாய் மட்டும்தான் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. பாதுகாப்புப் பெட்டகத்தை அணுகுமுன், இவர்களால் கட்டிப் போடப்பட்ட காவலர்கள் எழுப்பிய கூச்சலில், ரோந்து போலீசே வந்துவிட்டது! ஆனால் கொள்ளையடிக்க என்ன 'டைமிங்' பாருங்கள்; முந்தைய நாள்தான் 12,000 மாணாக்கர்கள் ஃபீஸ் கட்டி, புது வகுப்புகளில் சேர்ந்திருக்கிறார்கள்! எந்தத் தொழிலைச் செய்தாலும், காலமறிந்து செய்வதுதான் "சீசனல் பிஸினஸ்!"

– ஜெயஸ்ரீ ராஜ்

கோல்டு டைம் - நேமாலஜி & புரோனோலஜி

இந்தியாவின் முதன் முதலாக - இஞ்சினியர்/புரோனோலஜியில் ஆராய்ச்சியாளர்

Rtn. Er. AS. Maha Sree Rajhan



நிபுணர் : கைபெழுத்தியல், எண் கணிதம், பெயரியல், கிராபாலஜி, இராஜவசியம், பெயர் - தொழில் வசியம் மற்றும் புரோனோலஜியில்

❑ நம்முடைய பாரத தேசத்தில் கைராசியான கை தேர்ந்த வல்லுனராகவும் மிகத் துல்லியான முறையிலும் முதன் முறையாக பெயரின் அலைகளை வைத்தும், இடது மற்றும் வலது கைரேகைகளின் அமைப்பைப் பொறுத்தும் அதிர்ஷ்டப் பெயர்களை வசியத்துடனும், அதிர்ஷ்ட தொழில்களை வசியத்தின் தன்மைக்கு தகுந்தாற்போன்றும், தாங்கள் அன்றாடம் பேசுகின்ற குரல் அதிர்வுகளைப் பொறுத்து மற்றும் பத்து வகையான முக்கிய காரணிகளையும் பன்னிரெண்டு வகையான இயக்கங்களை மையமாகக் கொண்டு அதிர்ஷ்ட பெயரை புரோனோலஜி மூலமாக அமைத்துக் கொண்டிருப்பவர் கைராசியான ஸ்ரீமான் மஹா ஸ்ரீராஜன் அவர்கள் ஆவார்.

❑ இந்தியாவில் மிக பிரபலம் அடைந்த, வெற்றி அடைந்த கம்பெனிகளுக்கும் தொழில் மையங்களுக்கும் வர்த்தக நிறுவனங்களுக்கும் திரு. எ.எஸ். மஹா ஸ்ரீ ராஜன் அவர்களால் பெயர் மாற்றம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

❑ தொழிலை, இராஜவசிய முறைப்படி இவர்களால் பெயர் மாற்றம் செய்யப்பட்ட பல பேர் இன்று அரசியலிலும், கலைத் துறையிலும் பெருத்த செல்வச் சீமான்களாகவும், கோடீஸ்வரர்களாகவும் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை.

❑ மேலும் வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பற்றியும், காதல் தோல்வி, போதை வஸ்துக்கு அடிமை, தீராத நோய், திருமண/சுபகாரியத் தடை கட்டிடம் பாதியில் நின்று விடுதல், கடன் தொல்லை, லேபர் தொல்லை, குழந்தை இல்லாமை, குழந்தைகள் படிப்பில் மந்தம், ப்ளாக்மெயில் தொந்தரவு போன்ற பலவிதமான பிரச்சினைகளையும் மிகமிக துல்லியமாகவும் ஆராய்ந்து அற்புதமான முறையில் தீர்த்து வைத்து வாழ்க்கையில் வெற்றி பெறச் செய்கிறார்கள். (குறிப்பாக 15 நாட்களிலேயே வெற்றி வாய்ப்பு நிச்சயம்)

நேரில் ஆலோசனை பெறலாம் (எல்லோருடைய ரகசியங்களும் கண்டிப்பாகக் காப்பாற்றப்படும்).

385, செரிரோடு, ஈடன் கார்டன் ஸ்கூல் அருகில், மேல்மாடி, அஸ்தம்பட்டி, சேலம் - 7.
Off : 0427-417336/4131006 Resi:402784 Cell :98427-10027 E-mail:home-vastu@eth.net

---

ஓம் ஜெயசக்தி

அருள்வாக்குச் சொல்லுகின்றார்



அன்னை ஸ்ரீமூகாம்பிகையின் அருள்வரமும் அனுக்கிரகமும் பெற்ற ஸ்ரீ அருணா தேவியார் அவர்கள் சொல்வது தெய்வ வாக்காகப் பலிக்கிறது.

அன்னை ஸ்ரீமூகாம்பிகையின் அருளால் உங்கள் வாழ்வில் நடந்தது, நடந்து கொண்டிருப்பது, நடக்கப்போவது, குடும்ப வாழ்க்கை, வியாபாரத் தடை, திருமணத் தடை, குழந்தைப்பேறு இல்லாமை, மற்றும் படிப்பு, பட்டம், பதவி, பதவியுர்வு எதிர்பார்ப்புகளால் ஏற்படும் தன்மைகள் எல்லாவற்றையும் விபரமாகக் கூறுவர். மேலும், சுபமுகூர்த்தம், தீபாவளி, நவராத்திரி, திருக்கார்த்திகை, தைப்பூசம், அமாவசை, பௌர்ணமி நாட்களில் கிரகங்களின் அடிப்படையில் யாகங்களும் சிறப்பு பூஜைகளும் நடத்தி பழங்கால ஏட்டுச் சுவடிகளின் முறைப்படி தாயத்துகளும் மாந்திரீக முறையுள்ள அட்சரங்களும் அளிக்கப்படும்.

போக முனிவரின் சாரணை ரகசியத்தின்படி மூலிகையின் சக்தி மந்திர சக்தியின் மூலமும் ரசமணி கட்டித் தரப்படும். இதை அணிகின்றவர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள நன்மைகள் மட்டுமே கிடைக்கும். (1) தாம்பத்ய உறவு இன்பமதல் (2) மனம் ஒருமைப்படும் (3) பதட்டம் கட்டுக்குள் வரும் (4) ஜன வசீகரமும் ஏற்படும். பிரிந்தவர்களை ஒன்று சேர்க்கும்.

அருள்வாக்கின் பதிலை அவருடைய கைப்பட விவரமாக எழுதி அனுப்பி வைக்கின்றார். பதிலைப் பெற காணிக்கையாக ரூ. 25 அனுப்பவும். (கவருக்குள் பணம் அனுப்பு கூடாது) பெயர், பிறந்த தேதி குறிப்பிட வேண்டும். அருள்வாக்கு நேரில் கேட்க வருபவர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 5 மணி முதல் 6 மணி வரை அருள்சக்திபுரம் அன்னை ஸ்ரீமூகாம்பிகை திருக்கோயில் கணக்கன்பட்டி, திண்டுக்கல், பழனி நெடுஞ்சாலை முகவரிக்கு வரவும். பழனியிலிருந்து மூகாம்பிகை திருக்கோயிலுக்கு வர 7, 1, 24, 6 ஆகிய எண்ணுள்ள டவுன்பஸ்கள், மற்றும் பழனி, திண்டுக்கல் வழியாக செல்லும் பஸ்களிலும் வரலாம். **(வெளிநாட்டு அன்பர்கள் ரூ. 50/- M.O. செய்யவும்)**

தபால் எழுதும் முகவரி : **ஸ்ரீ அருணா தேவியார்,**
35, மில் ரோடு, சண்முகபுரம், பழனி - 624 601. போன் நம்பர் : 04545 - 42777

7

பாலகுமாரன்

காக வந்த குதூகலத்தில் அவர் இன்னும் கம்பீரமாக நடந்துகொண்டார். உரத்து சப்தம் போட்டு டெலிஃபோனில் பேசினார். வேலையாட்களை இலேசாக அதட்டினார்.

அவருக்குத் தாமதமாக வருவது பிடிக்காது. தாமதமாக வந்தவர்களை மிக வேகமாகக் கோபித்துக்கொள்வார்.

"நீங்க கம்பெனி மாடியில இருக்கறீங்க வந்துடறீங்க. வெளிய ரொம்ப டிராஃபிக் ஜாம் ஸார்."

"பத்து நிமிஷம் முன்னாடிக் கிளம்பணும். நான் சொல்ற மாதிரி எட்டரை மணிக்கு ஆபீஸுக்கு வரதா இருந்தா இந்த ஆபீஸுக்கு வா. இல்லை, விட்டுட்டுப் போயிடு. எந்தச் சாக்கும் எங்கிட்ட சொல்லாதே. எட்டரை மணிக்கு ஆபீஸுக்கு ஒன்பதே முக்காலுக்கு வரியே, உனக்கு வெட்கமா இல்லையா?"

"பர்மிஷன்னு எழுதிக்கோங்க ஸார்."

"ஏன் பர்மிஷன்? அரைநாள் லீவு போடு."

"சரி ஸார் அரைநாள் லீவு."

அவன் எழுதிக் கொடுத்துவிட்டு கம்பெனி வாசலில் உட்கார்ந்துகொண்டான்.

விஷம் தூவ வந்தவர்களின் பார்வையில் அவன் அலுப்பு தென்பட்டது. அவர்கள் நெருங்கி விசாரிக்க அவன் அதிகம் பேசினான்.

"கிரேன் ஆப்பரேட்டருக்கு ரெண்டாயிரம் ரூபா கொடுக்கறதா; நாங்க மூவாயிரம் ரூபா கொடுப்போம்" என்று வேகமாகக் கணக்குப் போட்டார்கள்.

"எதுக்கு கிரேன் ஆப்பரேட்டரைப் போய்த் தொந்தரவு பண்ணிக்கிட்டு..." அவன் மாட்டேன்னுவான். ஒழுங்கு புள்ளை மாதிரி பேசுவான். நீ இப்போதானே கொடுப்ப, மாசா மாசம் எனக்கு ரெண்டாயிரம் கொடுக்கறானே அது கெட்டுப் போயிடுமே அப்படின்னுவான். அதையும் தவிர எங்கனா வந்தா போட்டுக் கொடுத்துருவான்."

"இப்போ எப்படிப் பண்றது?"

"கிரேன் ஆப்பரேட்டர் இருக்கற இடத்துல நல்ல பாம்பைப் போட்டுடு."

"நல்ல பாம்பு சப்தம் போடாம அங்கயே படுத்துக்கிச்சுன்னு வச்சுக்க. இல்லை. அவன் ஏறி மிதிச்சுக் கொன்னுட்டான்னு வச்சுக்க,



மனம் உருகுதே

அதெல்லாம் சரியாவாது. அதுவும் தவிர கிரேன் ஆப்பரேட்டர் போட்டுக் கொடுத்துட்டான்னா நாம மாட்டிக்குவோம்."

"என்னா பண்ணலான்ற?"



"பொட்டி அடிக்கிற ஆசாரி இல்லை, அந்த மாதிரி நான் போறேன்."

"அந்த ஆசாரி?"

"அவனை மடக்கி எங்கனா அனுப்பு. பொட்டி அடுக்கறதாச் சொல்லி எல்லா பொட்டியையும் அழகா அடுக்கிடு."

"பிறகு?"

"ஏத்தறதுக்குக் கொஞ்ச நேரம் முன்னாடி பளிச் பளிச் பளிச்சுனு நாலு பக்கமும் புடுங்கி விட்டுடலாம். முக்கால் கிட்டத்துக்குப் புடுங்கி விட்டோம்னாக்க கிரேன் மேல ஏறி கப்பலாண்ட போறபோது அடிப்பக்கம் அப்படியே புடுங்கிக்கிட்டு தரையில பொளபொளன்னு கொட்டும். ரெண்டு பேரு அடிபட்டான்னா பெரிய கேஸ் ஆயிடும்."

"கேட்க நல்லாயிருக்கு ஒர்க் அவுட் ஆகுமான்னு தெரியலை."

அவர்கள் தீவிரமாகப் பேசிக் கொண்டார்கள்.

ரேவதிக்கு எதனாலோ வயிறு குழைந்து குழைந்து வலித்தது. என்னமோ சரியில்லை என்று தோன்றியது.

"அந்த ஐயரு உன்னைக் கன்னா பின்னான்னு பேசறான் இல்லை. லேட்டா வந்தா உங்கம்மா வரைக்கும் திட்டறான் இல்லை. அவனை நீ எதுனா பண்ண வேணாமா?"

"நீங்க யாரு. நீங்க என்னாத்துக்கு வறீங்க?"

"எங்களுக்கும் அந்த ஐயருக்கும் ஆவலை"

"ஏன்? எதுனால ஆவலை."

"எங்க வியாபாரத்தை அந்த ஆள் கெடுக்கறான்."

"என்னா வியாபாரம் உனக்கு?"

"பீங்கான் ஜாடி."

அவர்கள் சரமாரியாகப் பொய் சொன்னார்கள்.

அவன் திகைப்போடு கேட்டுக் கொண்டிருந்தான்.

"நான் என்னா பண்ணணும்னு சொல்றீங்க?"

"ஃபைல்லேர்ந்து கைக்கு கிடைச்ச நாலஞ்சு பேப்பரைப் புடுங்கியாந்து வெளிய கொண்ணாந்து போட்டுடேன்."

"உங்களுக்கு எதுனா பேப்பர் வேணுமா?"

"எங்களுக்கு என்னாத்துக்குடா பேப்பர். அந்த ஆள் எகிறுறான். கெட்டகெட்ட வார்த்தையில பேசறான். அவனை அடக்கி வைக்கணும்."

"ஆமாங்க. என்னையும் அசிங்கமா பேசறான். சோறு சாப்பிடறயா...வேற எதுனா சாப்பிடறயான்னு கேட்கறான். எனக்கு ஒரு மாதிரி ஆயிப்போச்சு. சாப்பாடே அதுக்கு அப்புறம் பிடிக்கலை. இவ்ளோ திமிர் இருக்கறவனை அடக்கி வைக்க வேணாம். ஒரு பேப்பர்கூட வேணாமா."

"வேணாம். எதுனா கைக்குக் கிடைச்ச பேப்பரை, அவன் முக்கியம்னு நினைச்சுகிட்டிருக்கற பேப்பரைப் பிடுங்கிட்டு வந்துடு."

"லைசென்ஸ் ஃபைல் ஒன்னு இருக்குது. அதை அப்படியே எடுத்தாந்துடறேன்."

"கொண்ணாந்துடேன்."

"எனக்கு எவ்ளோ தருவீங்க?"

"என்னடா கடைசியில எங்க மேலயே கை வைக்கற."

"உனக்கு எதுனா காரியம் ஆகணுமில்லை. நான் லைசென்ஸ் ஃபைலை எடுத்துட்டு வந்துடறேன். எவ்ளோ தருவீங்க?"

"என்னா... ஒரு நூறு ரூபா தருவேன்."

"அதுக்கெல்லாம் நாங்க வேலை செய்ய மாட்டோம்."

"எவ்ளோ வேணும்?"

"ஆயிரம் ரூபா கொடுங்க."

ஒருவன் பேச ஆரம்பிக்கும்போது மற்றவன் தடுத்து மடமடவென்று ஆயிரம் ரூபாயை எண்ணி அவனிடம் கொடுத்தான்.

"மகனே... நீ சொல்ற அந்த லைசென்ஸ் ஃபைல் வரல, உன்னை பொலி போட்ருவேன். நாங்க யாருன்னு உங்களுக்கு இன்னும் காமிக்கலை. மொன்ன காமிப்போம்."

அவர்கள் மிரட்ட அவன் ஆயிரம் ரூபாயோடு நகர்ந்து போனான்.

"தயவு செய்து லைசென்ஸ் ஃபைலை வெளிய வைக்காதீங்கோ. இதைப் பார்க்கற போதெல்லாம் எனக்குப் பக் பக்குங்கறது. எடுத்து உள்ள வச்சுப் பூட்டுங்கோ."

"இல்லை ஸார் ரெஃப்ரன்ஸுக்குத் தேவைப்படுது."

"எடுத்து பேப்பர்ல லைசென்ஸ் பத்தின டீடெய்ல்ஸ் எழுதி வச்சுக்கோங்கோ. லைசென்ஸை வச்சுக்காதீங்கோ. அதை ஜெராக்ஸ் காபி எடுத்துக்கோங்கோ."

"கரெக்ட் ஸார். எல்லா லைசென்ஸையும் ஜெராக்ஸ் எடுத்துக்கறேன்."

"டேய்... இங்க வாப்பா."

ஆயிரம் ரூபாய் வாங்கினவனை ஒரு குமாஸ்தா கூப்பிட்டார்.

"இதோ பார் இதுக்குள்ள ஆறு லைசென்ஸ் இருக்கு. இது மொத்தமும் லைசென்ஸ். இது ஒரு லைசென்ஸ். இது ஒரு லைசென்ஸ். புரியறதா. இது ஒவ்வொன்னும் தனித்தனியா ஜெராக்ஸ் எடுத்துண்டு வா."

"வெளிய அனுப்பாதீங்கோ ஸார்."

"என்ன ஸார். ஜெராக்ஸும் எடுங்கறேள். லைசென்ஸையும் வச்சுக்கபடாதுங்கறேள்"

"ஏம்ப்பா...போயிட்டு ஜாக்கிரதையா வா."

அந்த ஆட்கள் வாசலிலேயே உட்கார்ந்திருந்தார்கள்.

"என்னடா அது. என்னா எடுத்துட்டுப் போற?"

"இதுதான் லைசென்ஸ் ஃபைல்."

அவன் கொண்டு வந்து காண்பித்தான்.

"உங்க மாமியாருக்குப் பயப்படும்படி ஒண்ணுமில்லை..."

"அப்படியெல்லாம் சொல்லி என்னைப் பயமுறுத்தாதீங்க டாக்டர்!"

- வி. சாரதி டேச்சு

"என்னா அது?"

"இதுதான் நாங்க எக்ஸ்போர்ட் பண்றதுக்கு லைசென்ஸ் கொடுத்திருக்காங்க. அந்த ஃபைல்."

"எங்க எடுத்துக்கிட்டுப் போறே?"

"ஜெராக்ஸ் எடுக்கப் போறேன்."

"போ... போ... ஜெராக்ஸ் எடுக்கத்தானே...? போயிட்டு வா!"

"நடுவுலேர்ந்து வேணா பேப்பர் சிலது புடிங்கிடட்டுமா."

"உன் கையில கொடுத்திருக்காங்க. பேப்பர் புடுங்கினா நீதான் புடுங்கினேன்னு வராதா? முட்டாளே, போ, ஒழுங்கா கொண்டுபோய் ஒழுங்கா இருப்பி எடுத்துக்கிட்டுப் போ."

அவர்கள் அவனுக்கு அறிவுரை சொன்னார்கள்.

அவன் ஜெராக்ஸ் கடைக்குள் நுழைந்தான்.

"பாண்டியா... எங்க இருக்கற?"

அவர்கள் டெலிஃபோனில் இன்னொருவனைத் தொடர்புகொண்டார்கள்.

"இங்கதான் ஹைகோர்ட் வாசல்ல."

"எப்படி இருக்கு, பிஸ்கெட் வியாபாரம்?"

"எதுவோ ஓடுது."

" ஒரு சின்ன வேலை செய்யணுமே பாண்

டியா."

"என்னா?"

"ஒரு ஃபைல் புடுங்கிக்கிட்டு ஓடிடணுமே."

"தோ..பார் இதெல்லாம் விட்டு ரொம்ப நாள் ஆச்சு."

"ஒண்ணுமில்லைம்மா. நீ ஃபைலைப் புடுங்கிக்கிட்டு ஓடிப் போயிடு. மிச்சத்தை நான் பார்த்துக்கறேன்."

"எங்க கொடுக்கணும்?"

"நான் வந்து வாங்கிக்கறேனே."

"மாட்டி விட்டுடாதப்பா. நான் ஒரு மாதிரி நல்லபடியா இருக்கணும்னு பார்க்கறேன்."

"சின்ன வேலை கண்ணு."

"எவ்ளோ தருவே?"

"அஞ்சு ரூபா. பாண்டியன் ரேட்டு ஜாஸ்தின்னு எங்களுக்குத் தெரியாதா?"

"தோ.. வந்துகிட்டே இருக்கேன். ஆள் காமி."

"சீக்கிரம் வரணும்."

அவன் சைக்கிளில் வந்து இறங்கினான்.

"அதோ பார். மடையன் மாதிரி ஒரு பையன் வரான். அவங்கிட்டேர்ந்து அந்த ஃபைலைப் பிடுங்கிட்டுப் போயிடு."



அவர்கள் காத்திருந்தார்கள்.

இரண்டு இரண்டாக ஜெராக்ஸ் எடுத்த பேப்பரை அடுக்கி நிமிருவதற்குள் ஒரிஜினல் ஃபைலை எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள்.

அவன் தேடினான். முன்னும், பின்னும் அலைந்தான். அங்கிருப்பவர்களை விசாரித்தான்.

அவன் கம்பெனி வாசலில் இருந்தவர்கள் காணாமல் போனார்கள்.

நேரே ஹார்பருக்குப் போய் கப்பலில் ஏற்றத் தயாராக இருந்த பெட்டியின் ஆணிகளை மெல்ல நீக்கினார்கள்.

அவர்களால் எங்கும் போக முடிந்தது. எதுவும் செய்ய முடிந்தது.

பாண்டியன் பிஸ்கெட் கடையில் போய் உட்கார்ந்து முகத்தைத் துடைத்துக்கொண்டான்.

தரையில் ஃபைலை வைத்து அதன் மீது கோணி போட்டுக் கோணியின் மீது ஸ்டூலை வைத்து உட்கார்ந்துகொண்டான்.

ஸ்டூல் இலேசாக ஆடியது.

"என்னாது, காணோமா? லைசென்ஸ் ஃபைலைக் காணோமா. என்னடா சொல்ற?"

அந்த குமாஸ்தா கத்தினார்.

"ராதாகிருஷ்ணன் ஸார்... ராதாகிருஷ்ணன் ஸார்." ஓடினார்.

"ராதாகிருஷ்ணன் ஹார்பருக்குப் போயிட்டாரே. இன்னிக்கு கன்ஸைன்மெண்ட் மேல ஏறுது."

கிரேன், பெட்டியை மேலே தூக்கியது. ஓர் ஆள் உயரம் சரட்டென்று எகிறியது. இன்னும் மேலே போயிற்று... இன்னும் மேலே போயிற்று.

அந்தப் பெட்டியின் நம்பருக்கு நேரே ஒரு கோடு போட்டு ராதாகிருஷ்ணன் டிக் செய்து கொண்டார்.

இன்னும் ஆறு பெட்டிகள் ஏறினால் வேலை முடிந்துவிடும். பிறகு நேரே வீட்டிற்குப் போய் ஏதேனும் சாப்பிட்டுவிட்டுக் கொஞ்சம் தூங்கலாம். நாலு மணிக்குக் கம்பெனிக்குப் போனால் போதும். கப்பலில் ஏறிவிட்டது என்று முதலாளிக்குச் சொல்லிவிட்டால் சந்தோஷமாகிவிடுவார்.

குக்கர் வீல் என்று சேஃப்டி வால்வை உயரத் தூக்கி, அடித்து ரேவதியின் முதுகில் சூடாய் வந்து விழுந்தது.

ரேவதி அலறினாள். ஓடிப்போய் அடுப்பை அணைத்தாள்.

"என்னாச்சு உனக்கு இன்னிக்கு?" என்று அடுப்பைப் பார்த்துக் கத்தினாள். குக்கரிடம் சீறினாள்.

வாசற் கதவை யாரோ இடைவிடாது தட்டிக் கொண்டேயிருந்தார்கள். ஓடிப்போய் கதவு திறந்தாள்.

"ராதாகிருஷ்ணன் வந்தாரா? மேல இருக்காரா?"

"இல்லியே கீழே போனவர்தானே."

"இல்லை. ரொம்ப அர்ஜெண்ட்டான விஷயம். வந்தா உடனே ஆபீஸுக்கு வரச் சொல்லுங்கோ."

"ஆபீஸ் வந்துட்டுதானே மேல வருவார். இதென்ன கேள்வி."

"இல்லை. ஒரு ஃபைல் காணோம்."

அவர் சொல்லிவிட்டுத் திரும்பிப் போனார்.

என்ன பாதியா சொல்லிட்டு ஏதோ போறாரே?

ரேவதிக்கு மறுபடியும் வயிறு குழைந்து வலித்தது. என்னமோ சரியில்லை என்று தோன்றியது.

கிருஷ்ண கிருஷ்ணா

குசேலரைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். 27 குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு குடும்ப பாரத்தைச் சுமக்க முடியாமல் அவஸ்தைப்பட்டவர்.

அவருக்கு ஏன் 27 குழந்தைகள் பிறந்தன என்பதற்கு ஒரு காரணம் உண்டு.

குருகுலவாசத்தின்போது கிருஷ்ணருடன் ஒன்றாகப் படித்



தவர் குசேலர். ஒருமுறை ஊருக்கு வந்திருந்த குசேலரிடம், கிருஷ்ணரின் தாய் ஒரு 'அவல்' முடிச்சைக் கொடுத்து கிருஷ்ணரிடம் கொடுக்கச் சொன்னாள்.

குசேலர் நல்லவர். ஆனால் ஆசை உந்துதலின் பேரில் வழியிலேயே அவல் முடிச்சிக்குள் விரல் விட்டுக் கொஞ்சம் அவலை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார். இப்படி மூன்று தரம் எடுத்துத் தின்றார். அவர் தின்ற அவலின் எண்ணிக்கை 27. அவரின் அந்தத் தவறு காரணமாகவே குசேலரின் மனைவி மூன்று பிரசவத்தில் 27 குழந்தைகளைப் பெற்றாள் என்கிறது ஒரு கர்ண பரம்பரைக் கதை.

அவலால் ஏற்பட்ட கஷ்டம் அவலாலேயே தீர்ந்தது. ஆம், குசேலர் தம் நண்பரைக் கண்டு உதவி கேட்கப் போன போது, எடுத்துச் சென்றது அவல்தானே!

கிருஷ்ணன் அதை வாங்கி பிரியத்துடன் அள்ளி வாயில் போட்டதுமே குலேசர் வறுமை நீங்கியது. ○

கிரேன் பெட்டியோடு கப்பல் நோக்கித் திரும்பியது. கப்பலில் உள்ளவர்கள் கொடியசைத்து அந்தப் பெட்டியைக் கீழிறங்க வரச் சொல்லிக் கட்டளையிட்டார்கள்.

பெட்டி சரட்டென்று பத்தடி கீழே இறங்க உள்ளிருந்த சரக்கு அடிப்பலகையில் மோதி, பலகை பிய்ந்துகொண்டது. ஒன்று, இரண்டு, மூன்று என்று பலகைகள் பிய்ய, அத்தனை ஜாடிகளும் வைக்கோல் போருடன், அட்டைகளுடன் கப்பலின் மேல்தளத்தை நோக்கி வந்தன.

கப்பலின் மேல் தளத்தில் இருந்தவர்கள் பிசாசாய் நாலா பக்கமும் ஓடினார்கள். அங்கங்கே ஒளிந்து கொண்டார்கள்.

ஜாடிகள் கப்பலின் மேல் தளத்தைத் தாக்கி நொறுங்கின. பலத்த சப்தம் ஏற்பட்டது.

ராதாகிருஷ்ணன் திகைத்துப்போய் கையிலிருந்த பேப்பரை நழுவவிட்டார். பேப்பர் பறந்து வெகுதூரம் போயிற்று.

"அட... சண்டாளப்பாவி! என்னடா பண்ணே?"

"நான் என்னா பண்ணேன். பொட்டி சரியா அடிக்கலை."

கிரேன் ஆப்பரேட்டர் கீழே இறங்கி வந்து கத்தினான்.

கூட்டம் கூடியது. அதிகாரிகள் வந்தார்கள்.

"பொட்டியில ஆணி புடுங்கிப் போட்டிருக்காங்கண்ணா."

அனுபவம் மிகுந்த ஒரு தொழிலாளி கண்டுபிடித்து விட்டான்.

"திட்டமிட்டு என்னவோ பண்ணியிருக்காங்க" என்று சொன்னான்.

அடுத்தப் பெட்டிகளைச் சோதித்த பிறகே அனுப்ப வேண்டுமென்று கப்பல்காரர்கள் கத்தினார்கள்.

நீண்ட விவாதத்திற்குப் பிறகு அடுத்த பெட்டி ஏறியது.

அவருக்குப் பசித்தது. தலை சுற்றியது.

யார் பிடுங்கியிருப்பா?

உயர் அதிகாரிகள் அவரை மேலே கூப்பிட்டு நஷ்டஈடு தர வேண்டும் என்றும் கப்பலின் மேல்தளம் விரிசல் விழுந்துவிட்டதென்றும் அதை நிமிர்த்த ஆயிரம் டாலருக்கு மேல் செலவாகும் என்றும் சொன்னார்கள்.

இந்த ஆயிரம் டாலரை கப்பல் கம்பெனிக்கு அனுப்பி வைக்கவில்லையெனில் குறிப்பிட்ட சரக்கை இங்கிலாந்தில் இறக்க முடியாது. அது கையகப்படுத்தப் படும் என்றும் அவருக்குக் கடிதத்தின் மூலம் எழுதித் தரப்பட்டது.

ராதாகிருஷ்ணன் தொலைபேசியின் மூலம் அலுவலகத்திற்குத் தொடர்பு கொண்டார். யாரிடமாவது சாப்பாடு அனுப்பச் சொல்லலாம் என்று யோசித்தார்.

அலுவலகத்தில் அந்த குமாஸ்தா கத்தினார்.

"லைசென்ஸ் ஃபைல் காணாமல் போயிடுத்து ஸார்."

ராதாகிருஷ்ணன் மயங்கி விழுந்தார்.

(தொடரும்)



ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா தேவி, ஸ்ரீ நீலசரஸ்வதி தேவி, ஸ்ரீ விரஜா கால பைரவர் திருக்கோவில்



அபராஜிதபுரி, சோழங்கநல்லூர்,
சென்னை - **600 119.**
போன்: **4501404**

கல்வி அபிவிருத்தி, வெளிநாடு பயணம் மற்றும் உத்யோக கார்ய வெற்றிக்காக வேண்டி **ஆகஸ்ட் 11, 2002 (ஞாயிற்றுக்கிழமை) த்ரிதியை திதி பூரநட்சத்திரம் கூடிய சுபநாளில் காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை.**

ஸ்ரீ நீலசரஸ்வதி மஹா பூஜை

'ஏகம் சத் விப்ரா பிருதாவதந்தி' என்ற வேத வாக்குக்கு ஏற்ப, பராசக்தியே சரஸ்வதியாக, ஆய கலைகள் அறுபத்தி நான்குக்கும் தலைவியாக, **மேதா, பிரக்ஞா, பிரயா, வித்யா, த்ருதி, ஸ்ம்ருதி, வித்யேஸ்வரீ வாகீஸ்வரீ** என்ற அஷ்ட வித்யா தேவிகளாக விளங்கி குழந்தைகள், மாணவ மாணவியருக்கு ஞாபக சக்தியை வழங்கி, கல்விகளிலும் வித்தைகளிலும் மேன்மையுற செய்கிறாள்.

சம்சார யாத்திரையை கடப்பதற்கு அருள்பவளும் கடல் பிரயாணங்கள், வெளிநாட்டு பயணம் இவற்றை சுகமாக்கி தருபவளும் லௌகிக வாழ்வில் காம உணர்வை அடக்கி, சிக்கல்களை கத்தரித்து, அகங்கார குணத்தை விலக்கி, முட்டாள் தனத்தை வெட்டி வீழ்த்தி ஆணவம் கன்மம் மலம் என்ற மூன்று தீய குணங்களை அழித்து சாந்த குணம் சாதுர்யபுத்தி இவற்றை வழங்கி நம்பினோரைக் காப்பாற்றும் மஹாசக்தியாக விளங்குபவள்தான் **ஸ்ரீ நீலசரஸ்வதி.** இவளை உபாசித்து வெற்றிக்கண்டவர் வியாச மகரிஷி. ஆதிசங்கரருக்கு 16 ஆண்டுகள் ஆயுள்பலம் கொடுத்து சனாதான மதத்தை ஸ்தாபிக்க செய்தவளும் இந்த **நீல சரஸ்வதிதான்.**

மூடனையும் வித்வானாக்கும் இவளது மூல மந்திரம் **"ஓம் ஹ்ரீம் ஸ்த்ரீம் ஹூம்பட்".** அன்று (11.8.2002) சக்திக்கு அபிஷேகம், படி பூஜை, புஷ்பாஞ்சலி மூலமந்திர ஜெபம் நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகள் உள்ளன. அபிஷேக உபயம் ரூ. 1000- படி பூஜை உபயம் ரூ. 5000 புஷ்பஞ்சாலி ரூ. 600 உபயம் செய்யும் மாணவ மாணவியர் ஜாதகத்தை ஸ்ரீ நீலசரஸ்வதியின் கமலமலர் பாதங்களில் வைத்து சங்கல்ப்ப பூஜைகள் செய்து பிரசாதம் பெற்றுக் கொண்டு கல்வி, பரீக்ஷையில் நல்ல மதிப்பெண் பெறலாம்.

இந்த பூஜையில் கலந்து கொள்ள விரும்பும் மாணவ மாணவியரின் ஜாதக நகலுடன் பெயர் நட்சத்திரம், கோத்திரம், படிக்கும் கல்வி ஸ்தாபனத்தின் பெயர், எழுதப் போகும் பரீக்ஷையின் பெயர் முகவரி இவற்றை எழுதி உபயதொகைக்கான Draftஐ Sri Prathiyangira Ashram Trust என்ற பெயருக்கு எடுத்து பதிவு தபாலில் அனுப்பி, இந்த மஹாபூஜையில் கலந்து கொள்ளலாம். நீலசரஸ்வதி யந்திரம், படம், டாலர், ரக்ஷைகள் பிரசாதமாக அனுப்பப் பெறும்.

குறிப்பு: அன்னபூரணி, சரபேஸ்வரர், மஹாலக்ஷ்மி, அக்னி சந்நதிகள் பூர்த்தி செய்வதற்கு உபயதாரர்கள் தேவை.


திருப்பூர் கிருஷ்ணன்


'நான் மதுவிலக்குக் கொள்கைக்குத் தீவிர ஆதரவாளன்தான்! மதுவை முழுவதும் ஒழிக்க வேண்டும் என்பதுதான் என் விருப்பம்!' என்றார் கண்ணதாசன் என்னிடம். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. தாமே ஒப்புக் கொண்ட உலகறிந்த குடிமகன் இப்படிச் சொல்கிறாரே! அவர் விளக்கினார்: 'உலகிலுள்ள மதுவையெல்லாம் குடித்தே ஒழித்துவிட வேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறேன். முடியவில்லையே!' இதைச் சொல்லும்போது அவர் விழிகளில் தென்பட்ட குறும்பு... எனக்குச் சிரித்துச் சிரித்துக் கண்ணில் நீர்கட்டிக் கொண்டது. தம் கெட்ட பழக்கங்களையெல்லாம் வெளிப்படையாக ஒப்புக் கொண்டு பேசும் நெஞ்சுரம் அவருக்கு உண்டு. இளைஞர்களிடம் 'என்னைப் போல் இருக்காதீர்கள்!' என்றுதான் அறிவுறுத்துவார். சில எழுத்தாளர்கள் மாதிரி, தம் பலவீனங்களையெல்லாம் பலங்களே போல் நியாயப்படுத்தும் குணம் அவரிடம் இருந்ததில்லை.

'ஞாபக சக்தி வளர ஒரு மாத்திரை இருக்கிறது. அதை நானே சாப்பிட்டிருக்கிறேன். அந்த மாத்திரையின் பெயர்... அதுதானே மறந்துவிட்டது!'

இப்படி வார்த்தைகளை மடக்கிப் போட்டுப் பொன்மொழிகள் போல் எழுதும் பாணி அவருக்குச் சுலபமாகக் கை வந்திருந்தது. அந்தத் தத்துப் பிள்ளை, பட்டறிவாலும், பாட்டறிவாலும், படிப்பறிவாலும் தத்துவப் பிள்ளையாக மாறியிருந்தார். மேலும் கீழுமாய்ப் புரட்டிப் போட்ட வாழ்க்கை அனுபவங்கள் காரணமாக அவர் மனத்தில் தத்துவச் சிந்தனைச் செல்வம் நிரம்பித் தளும்பியது. எதையும் உள்ளது உள்ளபடி அவர் எழுதினதே இல்லை. உள்ளவற்றின் ஆழத்தில் ஊடாடும் உண்மையை மேலே கொண்டு வந்து அந்த உண்மை வெளிப்படையாகப் புலப்படும்படி எழுதினார். இந்து மதத்தின் சித்தாந்தங்களைப் பாமரர்க்கும் புரியும் வகையில், மனமென்னும் அமுத சுரபியிலிருந்து தேன் ததும்பும் தமது தமிழ் என்னும் இனிய அகப்பையால் அள்ளி அள்ளி வழங்கிய வள்ளல் அவர். அவரது நூல்களின் சிகரம் 'அர்த்தமுள்ள இந்துமதம்'. இந்துக்களின் ஆழ்மனத்தில் வேரோடியிருக்கும் நம்பிக்கைகளுக்கு உளவியல் ரீதியாக ஆதாரம் தேடும் முயற்சியே அந்நூல். அது சாவி ஆசிரியராக இருந்த காலத்தில் கதிரில் தொடராக வெளியாயிற்று. பரமாச்சாரியாரின் ஆசி, பெற்ற தொடர்.

கதிரில் பல தொடர்கள் எழுதினார். அவர் எழுதியதெல்லாம் அவர் சொன்னவையே. சொல்லி எழுதிய எழுத்தாளர்





• கே.சி.எஸ்.

கவிதைக்கடலில் கண்ணதாசன்...

அவர். கவிதைகளைக்கூட எழுதாமல் சொல்ல அவரால் முடிந்தது என்பதுதான் ஆச்சரியம். அவர் உடலில் இரத்தத்திற்குப் பதிலாகத் தமிழே ஓடிக் கொண்டிருந்தது. அசையும் சீரும் தளையுமெல்லாம் அவர் குருதியில் கலந்திருந்தன. புதுக் கவிதையின் பரம விரோதி அவர். 'கவிதை உண்டு. அழகிய வசனம் உண்டு. அதென்ன புதுக் கவிதை?' என்று அவர் கேட்டதுண்டு. 'உங்கள் செப்பு மொழிகள், ஞான மாலிகா, புஷ்ப மாலிகா எல்லாம் புதுக் கவிதை நூல்கள்தான்!' என்பேன் நான். 'ஏன் அவற்றின் அந்தஸ்தைக் குறைக்கிறாய்? அவற்றை அழகிய வசன நூல்கள் என்று சொல்லிப் பெருமைப்படுத்தேன்!' என்று சீண்டுவார். 'சின்னச் சின்ன மூக்குத்தியாம்' பாடல் எழுதிய காலஞ்சென்ற கே.சி.எஸ். அருணாசலமும் இறுதிவரை புதுக்கவிதையின் வில்லனாக இயங்கியவர். மலையாளப் புலமைபெற்ற கம்பன் அறிஞர் எஸ்.நல்லபெருமாள், இன்று வரை புதுக் கவிதையின் நிரந்தர எதிரி.



• சாவி

திருப்பூர் சிக்கண்ணா கல்லூரியில் நான் படித்துக் கொண்டிருந்த காலம். தமிழ்ப் பேராசிரியர் கா. மீனாட்சி சுந்தரம் முதல்வர். முத்தமிழ் மன்றச் செயலாளராக என் இனிய நண்பர் மாயாண்டி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அவரிடம் சொல்லி, எப்படியாவது கண்ணதாசனைக் கல்லூரிக்கு அழைக்க வேண்டும் என்றேன். முதல்வரைச் சம்மதிக்க வைத்து, கண்ணதாசனைக் கல்லூரிக்கு அழைத்து வந்துவிட்டார் மாயாண்டி. ஒரு மணி நேரம் கண்ணதாசன் பேச வேண்டும். காலத்திற்குக் கட்டுப்படக் கூடியவரா அவர்? மதியம் இரண்டு மணிக்குப் பேசத் தொடங்கியவர் மூன்று மணி நேரம் பேசினார். பிற்பகல் வகுப்புகள் தாமே ரத்தாயின. கூட்டம் முடிந்த பிறகும் வெளியே வந்து காரில் ஏறும் வரை மாணவர்களுடன் பேசிப் பேசி மகிழ்ந்தார். 'பார்த்தேன். சிரித்தேன், அத்தான் என்ன அத்தான், அத்திக்காய் காய் காய்' போன்ற பாடல்களை அவர் பாடக் கேட்டு மாணவர்கள் கிறங்கினார்கள். தேவ கானம் தான் அது. அவர் பாட்டுத் துறைக்கு வந்திருந்தால் சீர்காழி, டி.எம்.எஸ். வரிசையில் பேசப்பட்டிருப்பார்.

அவரைப் போன்ற நல்ல மனம் படைத்தவர்கள் அபூர்வம். தமிழ்நாட்டில் எல்லோராலும் நேசிக்கப்பட்ட செல்லப் பிள்ளை அவர். கல்கியில் அவர் தொடராக எழுதிய 'சேரமான் காதலி' சரித்திர நாவலுக்குச் சாகித்ய அகாதமி பரிசு கிடைத்தது. 'இதைவிட உங்கள் கவிதை நூல் எதற்காவது பரிசு கொடுத்திருக்கலாம்.' என்றேன் நான் அவரிடம். 'இதற்குக் கூடப் பரிசு கொடுக்காமலும் இருந்திருக்கலாம்!' என்றார் அவர் என்னிடம்! பரிசுகளை ஒரு போதும் அவர் பொருட்படுத்தியதில்லை.

கல்கியில் 'இனிமேல் மனிதரைப் பாட மாட்டேன்' என்று ஒரு கவிதை எழுதினார். 'காமராஜ் போன்ற சிறந்த மனிதரைப் பாடுங்கள்' என்று கல்கியிலேயே நான் ஒரு பதில் கவிதை எழுதினேன். பிறகு ஒரு கூட்டத்தில் அவரைச் சந்தித்தபோது 'உம் கவிதையைப் பார்த்தேன்!' என்று முதுகில் ஒரு தட்டுத் தட்டினார். கண்ணதாசன் காலமானபோது என் மனத்தை துக்கம் பிசைந்தது. அப்போதும் ஒரு கவிதை எழுதினேன். அந்த இரங்கல் கவிதையையும் கல்கியே வெளியிட்டுப் பெருமைப்படுத்தியது. ஆனால் அதைப் படிக்கவும் முதுகில் தட்டவும் அவர் இல்லை. அவர் இருந்தால் அந்தக் கவிதைக்கு வாய்ப்புமில்லை. ●

சுவடுகள் : 26

பெ. நாயகி

"என்னை எதற்குப் பிழைக்க வைத்தீர்கள்?" என்பதுதான் ராமதுரையின் முதல் உளறல் வார்த்தைகளாக இருந்தன அரை குறையாக நினைவு வந்தவுடன்.

"உதைபடப் போற, பேசாம இருடா" என்கிற என் கண்டிப்பான வார்த்தைகளைக் கேட்கும் முன் அவனுடைய நினைவு மீண்டும் தப்பிவிட்டது.

நான் பதற்றமாக டாக்டரைப் பார்க்க, அவர், "இனிமேல் அபாயம் இல்லை. மொத்த விஷத்தையும் வாமிட் பண்ண வைத்ததில் பாடி ரொம்பவே டி ஹைடிரேட் ஆகியிருக்கறதுனால, இப்படித் தான் நினைவு தப்பித் தப்பி வரும். நீங்கதான் இங்கே ஐ.ஸி.யூவில் அவருக்குத் துணை இருக்கப் போறவரா?" என்று கேட்டார்.

"ஆமாம் சார்."

"இவரைத் தவிர வேறு யாரும் தன்னைப் பார்க்க உள்ளே வரக் கூடாதுன்னு பேஷண்ட் கண்டிப்பா சொல்லி இருக்கார் சார். இல்லைன்னா ரொம்பவும் எக்ஸைட் ஆகறார்" என்றார் ஸ்டாஃப் நர்ஸ்.

டாக்டர் புன்னகையுடன் என்னை ஏறிட்டார். "நீங்க...?"

"இவனோட க்ளோஸ் ஃப்ரண்ட் சார்."

"வெல். நைட் முழுசும் டிரிப் ஏறட்டும். பார்த்துக்கோங்க. அவருக்கு நினைவு வரும்போதெல்லாம் வேறு ஏதாவது பேச்சுக் கொடுங்க. கம்ப்ளீட்டா நினைவு திரும்பி தெளிவா எழுந்து உட்கார்ற வரைக்கும் ஏன் இப்படித் தற்கொலைக்கு முயற்சி பண்ணினார்னு கேட்டு அவரை எக்ஸைட் ஆக்காதீங்க. அவருக்கு நல்லதில்லை" என்று அறிவுரைத்து விட்டு அடுத்த படுக்கைக்கு நகர்ந்தார்.

அரைகுறை நினைவுடன் வாடிக்கிடக்கும் நண்பனைப் பரிதாபமாகப் பார்த்தபடி அருகே இருந்த ஸ்டூலின் மீது உட்கார்ந்துகொண்டேன். முப்பத்தைந்து வயதுக்குள் எதைக் கண்டு சலித்து விட்டதாக இந்தத் தற்கொலை முயற்சி?

டாக்டர், நர்ஸ்கள் பரிவாரம் எல்லாம்



விளிம்பு

மொத்தமாக யூனிட்டைக் காலி செய்து விட்டுப் போய்விடும் முன் அவசரமாக டாக்டரிடம் ஓடிப்போய், இரவில் ஏதும் மருந்தோ ஊசியோ போட வேண்டி இருக்குமா என்று கேட்டேன். "காலைவரை டிரிப்ஸ் மட்டும் போதும்" என்றார். "அவர் கையை அசைக்காமப் பார்த்துக்கோங்க" என்று கூடுதல் அறிவுரை கொடுத்தாள் கொஞ்ச வயசு நர்ஸ் ஒருத்தி. "டிரிப்ஸ் தீர்ந்து போனா என்ன செய்யணும் சிஸ்டர்?" என்று கேட்டேன். "நான் தான் டூட்டில இருப்பேன். என்னை வந்து கூப்பிடுங்கள். வந்து மாத்தி விடுவேன்" என்றாள் இதமாக. அவர்களுடனேயே வெளியே போய் வாடிய முகத்துடன் காத்திருந்த ராமதுரையின் மனைவி மற்றும் பெற்றோர்களிடம் தைரியம் சொல்லி, காலை வரும்படி சொல்லி அனுப்பிவிட்டு உள்ளே வந்தேன்.



ராமதுரை இலேசாக நெளிந்து கொடுத்தான். முனகினான். குனிந்து அவன் முகத்தருகே காதைக் கொண்டு போனேன். "நான் சாகணும்டா, என்னை ஏண்டா காப்பாத்தறீங்க?'' என்றான் தூக்கத்திலேயே.

எனக்குக் கோபம் வந்தது. அடக்கிக் கொண்டேன். என்ன கொள்ளை வந்ததென்று இவன் இந்த முடிவை எடுத்தான்? அறிவு வேண்டாம்? முதிர்ச்சி வேண்டாம்? ஆண்மகன் தற்கொலைக்கு முயற்சிக்கலாமா? அப்படி என்ன பிரச்னை? நண்பர்கள் உறவினர்கள் என்று கவனத் திருப்பலுக்கு எத்தனை வழிகள் உள்ளன? அப்படியா எல்லாக் கதவுகளும் அடைபட்டுவிட்டன?

தெளிந்து எழட்டும் படவா ராஸ்கல்,

தொலைத்துவிட வேண்டும் என்று கருவிக் கொண்டேன்.

சோகமே உருவாக அழுதபடி- திரும்ப மனம் இல்லாமல் இடுப்பில் குழந்தையுடன் திரும்பி நடந்த அவன் மனைவி, மேல் துண்டை வாயில் பொத்தியபடி துக்கத்தையும் கண்ணீரையும் அடக்கப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்த அவனுடைய அப்பா, மகளுடைய வாழ்வைக் குறித்து அஞ்சுவதா மருமகனுடைய நிலைமைக்காக இரக்கப் படுவதா என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருந்த மாமனார், மற்றும் அம்மா, மாமியார், தங்கை உறவுக்காரப் பெண்கள், ஆண்கள் என்று அத்தனை பேர் உள்பட என் தூக்கத்தையும் இன்று கெடுத்துவிட்டு மருந்தின் மயக்கத்திலும் களைப்பிலும் அரைகுறை தூக்கத்தில் இருந்து கொண்டு, 'நான் சாகணும்' என்று புலம்புபவனைப் பார்க்க, சிரிப்பதா அழுவதா என்று புரியவில்லை எனக்கு. இதைக் கேட்டால் அவனுடைய மனைவியும் மற்றவர்களும் எவ்வளவு தூரம் வேதனைப் படுவார்கள் என்று கொஞ்சமாவது இவனுக்கு அறிவு வேண்டாம்?

படுக்கைக்குக் கீழே சப்தம் கேட்டது. பாட்டிலில் அவன் யூரின் போவது தெரிந்தது. பாட்டில் நிறைந்துவிட்டால் என்ன செய்வது என்று கேட்டு வர எண்ணி, டூட்டி நர்ஸிடம் போனேன்.

வாரப் பத்திரிகை ஒன்றில் ஆழ்ந்திருந்த அவள், "இதென்ன கேள்வி? வந்து வேறு ஒரு பாட்டில் வாங்கிப் போங்க" என்றாள் சாதாரணமாக. டாக்டரின் முன்னிலையில் கனிவாகப் பேசியவளின் புதிய அவதாரம் என் கவனத்தை அறைந்தது.

சொட்டுச் சொட்டாக இறங்கிக் கொண்டிருக்கும் சலைன் துளிகளையே வெறித்தபடி உட்கார்ந்திருந்தேன். நடுநடுவே ராமதுரை கண்களை அகல விரித்துப் பார்த்தபடி ஏதாவது முனகுவதும் மீண்டும் மயங்குவதுமாக இருந்தான். அபாய கட்டத்தைத் தாண்டிவிட்டான் என்பது தெரிந்தது. நிம்மதியாக இருந்தது.

அடுத்த ஓரிரு மணி நேரத்தில் டிரிப்ஸ் பாட்டில் தீர்ந்து போகும் நிலைக்கு வந்தது. நர்ஸிடம் ஓடினேன். அவள் யாருடனோ தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தாள். பேசு குழலை மூடியபடி, "நீங்க போங்க. இதோ வந்திடறேன்" என்றாள்.

நான் தயங்கியபடி ஓரிரு நிமிடங்கள் அங்கேயே நின்றிருந்துவிட்டுப் படுக்கைக்கு வந்தேன். கால்மணி நேரம் ஆகியும் நர்ஸைக் காணோம். சலைன் பாட்டிலில் கடைசிச் சொட்டுக்கள் பலஹீனமாக இறங்கிக் கொண்டிருக்க, மீண்டும் நர்ஸிடம் சென்றேன். அவள் சாவகாசமாகப் புத்தகம் படித்துக்கொண்டிருந்தாள். எனக்குள் முகிழ்த்த கோபத்தை அடக்கிக் கொண்டு அவள் எதிரே போய் நின்றேன்.

"என்ன?" என்றாள், என்னை முதன்முறையாகப் பார்ப்பவள் போல்.

"சிஸ்டர்! அப்போதே வந்தேன்."

"என்ன விஷயமா?"

"சலைன் பாட்டில் மாத்தறதுக்கு வர்றேன்னு சொன்னீங்க" என்றேன்.

முகத்தைச் சலிப்பாக வைத்துக்கொண்டு ஒன்றும் பேசாமல் எழுந்தாள். அலமாரியைத் திறந்து புதிய பாட்டிலை எடுத்துக்கொண்டு என்னுடன் வந்து ராமதுரையின் புறங்கையில் செருகப்பட்டிருந்த பட்டாம்பூச்சி ஊசியைத் திருகி மூடிவிட்டு பழைய சலைன் பாட்டிலை நீக்கினாள்.

அவள் அதைச் செய்துகொண்டிருக்கும் போதே இன்னொரு படுக்கை நோயாளியின் உதவிக்கு இருந்த பெண் ஓடி வந்து, "சிஸ்டர்! அவருக்கு உடம்பு தூக்கித் தூக்கிப் போடற மாதிரி இருக்கு. சீக்கரமா வந்து பாருங்க" என்று பதறினாள்.

"நீ போம்மா. இதோ வர்றேன்" என்றபடி சலைன் மாற்றிக்கொண்டிருந்தாள் நர்ஸ்.

"சிஸ்டர்! இதனை எப்படிச் செய்ய வேண்டும் என்று எனக்குச் சொல்லிக் கொடுத்தீர்கள் என்றால் உங்களைச் சிரமப்படுத்தாமல் நானே செய்துவிடுவேன். நீங்க அவங்க கேஸைப் பார்க்கப் போகலாம்" என்றேன் மெதுவாக.

திரும்பி என்னை முறைத்தாள். "அதுக்குத்தான் நாங்க இருக்கறோம். நீங்க உங்க வேலையை மட்டும் பாருங்க. எதாவது இசகு

கிருஷ்ணா... கிருஷ்ணா...

கிருஷ்ணர் ஒருமுறை விதுரர் வீட்டிற்குச் சென்றார். விதுரர் வீட்டில் இல்லை. அவரது மனைவி கிருஷ்ணனைக் கண்டதும் பரபரப்பாகி விட்டாள்.

கிருஷ்ணனை உள்ளே அழைத்து உட்கார வைத்து உபசரித்தாள். "விதுரர் விரைவில் வந்து விடுவார். அதுவரை காத்திருக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். உள் அறைக்குச் சென்று பழங்களை எடுத்து வந்து உரித்து உண்ணக் கொடுத்தாள்.

அந்நேரம் பார்த்து விதுரரும் வந்து சேர்ந்தார். கிருஷ்ணனைக் கண்டு கட்டித் தழுவி மகிழ்ச்சி வெளிப்படுத்திய விதுரர், காக்க வைத்து விட்டதற்காக வருத்தம் தெரிவித்தார்.

அப்பொழுதுதான் கவனித்தார் மனைவி செய்துகொண்டிருக்கும் காரியத்தை. அதிர்ச்சி அடைந்தார். "என்ன செய்து கொண்டிருக்கிறாய் நீ?" என்று மனைவியைக்

கடிந்து கொண்டிருந்தார்.

அவள், என்ன செய்கிறோம் என்றறியாமல் பழத்தை உரித்து தோலை கிருஷ்ணனுக்குக் கொடுத்து விட்டுப் பழத்தை ஓரமாய் வீசிக் கொண்டிருந்தாள். அதனால் விதுரருக்குக் கோபம்.

கிருஷ்ணன் அவரைச் சமாதானப்படுத்தினார். "விதுரரே உங்கள் மனைவி கொடுத்தது தோல் என்றாலும் அதில் இருக்கும் அன்பு என்னும் சாறு பழத்தின் சாறை விட பன்மடங்கு உயர்ந்தது. கொடுக்கும் பொருளைவிட கொடுக்கும் மனதுதான் முக்கியம்" என்றார்.



பிசகாச் செய்துட்டு விஷயத்தைக் காம்ப்ளிகேட் பண்ணிடாதீங்க" என்றான் கண்டிப்பான குரலில்.

"சிஸ்டர்!" என்று கெஞ்சாத குறையாக அரற்றிய பெண்ணிடம் வள்ளென்று எரிந்து விழுந்தான்' "ஏம்மா! எனக்கென்ன ஆயிரம் கையா இருக்கு? இதை முடிச்சுட்டுத்தாம்மா வர முடியும் போ. போய் உன் புருஷன் பக்கத்துலயாவது இரு. அவ்வளவு ஸ்பெஷல் அட்டென்ஷன் வேணும்னா பிரைவேட் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியதுதானே? இங்கே வந்து என் தாலியை ஏன் அறுக்கறீங்க?"

அந்தப் பெண் ஏதும் பேசாமல் நகர்ந்தாள். இது கோபம் காட்டும் நேரம் இல்லை என்று அடக்கிக் கொண்டேன்.

இரவு ஏறி இறங்க இறங்க ராமதுரைக்கு நினைவு மெல்ல மெல்லத் திரும்பிக் கொண்டிருந்தது. அதிக நேரம் விழித்திருக்கத் தொடங்கினான். பேச்சிலும் தெளிவு ஏறி இருந்தது. 'நீ தூங்கலையாடா?" என்று கேட்டான்.

"இந்த யூனிட்டுக்குள் தூக்கம் வரணும்னா மயக்க மருந்து கொடுத்தால்தான் சாத்தியம்" என்றேன் சுற்றிலும் இருந்த படுக்கைகளை ஒரு பார்வை பார்த்தபடி. ராமதுரையின் முகத்தில் களைப்பை மீறிய புன்னகை விரிந்தது காண எனக்குள்ளும் நம்பிக்கை முழுதுமாகத் துளிர் விட்டிருந்தது.

அடுத்த சந்தர்ப்பத்தில் அதிகாலை நாலரை மணிவாக்கில் நர்ஸிடம் எனக்குப் போக வேண்டி இருந்தது. ராமதுரை அடி வயிற்றில் இலேசாக வலி இருக்கிறது என்றான். அது குறித்துக் கேட்பதற்காக நர்ஸிடம் போனேன். அவன் எதிரே இருந்த மேசையில் கைகளைக் கட்டி அதன் மீது நெற்றியைச் சாய்த்து தூங்கிக் கொண்டிருந்தான். நான் மைந்து முறை அழைத்த பிறகு விழித்து எரிச்சலுடன் என்னைப் பார்த்த மாத்திரத்தில் அவனுக்குக் கோபம் பீறிட்டது.

"ஐய்ய! உங்களோட பெரிய ரோதனையாப் போச்சு. பேஷண்ட்டுக்கு உயிர் போகுதோ இல்லையோ என் உயிரை எடுத்துருவீங்க போலிருக்கே" என்றான்.

அதற்காகவே காத்திருந்தது போல் வெடித்தேன். முழு இரவும் என்னிடம் மட்டுமின்றி எல்லோரிடமுமே அவன் காட்டிய அலட்சியத்தைப் பார்த்துப் பார்த்து, என்னுள் பொங்கியிருந்த அத்தனைக் கோபமும் வெளி வர...

வாயடைத்துப் போய் அதிர்ச்சியுடன் என்னைப் பார்த்தபடி சிலையாக நின்றான் அவன். என் வார்த்தைகளை இந்த ஜென்மத்தில் மறக்க மாட்டான்.

ராமதுரையிடம் திரும்பினேன். என் முகம் இன்னும் சாந்தமடையாமல் இருந்திருக்க வேண்டும்.

"என்னடா ஆச்சு? கோபமா இருக்கற போலிருக்கு?" என்று கேட்டான் ராமதுரை. அவனுடைய குரல் பலவீனமாக இருந்தாலும் இப்போது முழுதுமாகத் தெளிவு வந்திருந்தது. அதை வழி மொழிவது போல் முகமும் கிழக்கு வானமாக வெளுத்திருந்தது.

"இந்த நர்ஸ் பொம்பளை ரொம்பவும்தான் அலட்டிக்கறாடா. இந்த யூனிட் முழுசும் எமன் வாய் வரைக்கும் போய்ட்டுத் திரும்பி இருக்கற உசிர்கள் அவஸ்தைல இருக்குங்கற அக்கறை, கொஞ்சமாவது வேணாம்? சேவை உணர்வும் கருணையும் இல்லாமல் ஏனோ தானோன்னு வேலை பார்க்கற புத்தி இருக்கறவனெல்லாம் எதுக்கு நர்ஸ் உத்தியோகத்துக்கு வர்றா? இன்னிக்கு சீஃப் டாக்டர் வரட்டும், வச்சுக்கறேன் இவளுக்குக் கச்சேரியை" என்று பொரிந்தேன்.

"டேய்!" என்று சனஸ்வரத்தில் பதறினான் ராமதுரை. "நர்ஸ்கூட ஏன்டா வம்பு பண்ற? அவ பாட்டுக்குக் கோபத்துல ஏதாவது ஊசியைப் போட்டு என்னைக் கொன்னு போடப் போறா" என்றான்! ○



பிடி அரிசியில் பிறந்த பள்ளி!



தமிழக முதல்வராக இருந்த ராஜாஜி, ஒருமுறை விருதுநகர் வந்திருந்தார். அங்கே நாடார் சமுதாய மக்கள் நடத்தி வரும் பள்ளிகளில் முற்றிலும் இலவசக் கல்வி என்று கேள்விப்பட்டவருக்கு ஆச்சர்யம்! இது எப்படிச் சாத்தியம்? ஆர்வமாய் விவரம் கேட்டார் ராஜாஜி.

"விருதுநகரில் வியாபாரம் செய்யும், நாடார் சமுதாய வணிகர்கள் அனைவரும், தினசரி விற்பனையாகும் ஒவ்வொரு மூட்டைக்கும் தலா ஐந்து பைசா வீதம் 'மகமை' எடுத்து வைத்து, அன்று இரவே அதை மகமைநிதி முறைதாரர்களிடம் கொடுத்துவிடுவார்கள். இவ்வாறு வசூலாகும் மகமை பணம் மொத்தமாகச் சேர்ந்ததும், முறைதாரர்கள் அதை இந்தப் பள்ளிகளுக்குப் பகிர்ந்தளிப்பார்கள். எஞ்சும் பணத்தை ஊர்ப் பொதுக் காரியங்களுக்குச் செலவிடுவார்கள்."

விஷயத்தைக் கேள்விப்பட்ட ராஜாஜிக்கு அந்தக் கணமே மூளைக்குள் ஒரு மின்னல்! விருதுநகரில் வியாபாரிகள் விற்கும் பொருளுக்கே இவ்வளவு பணம் வந்தால், தமிழகம் முழுவதும் உள்ள வியாபாரிகளுக்கு, ரூபாய்க்கு இத்தனை பைசா என வரி விதித்தால் எவ்வளவு கிடைக்கும்? என யோசித்தார். சென்னை திரும்பியதும் 'விற்பனைவரி' என்ற பெயரில் இதை அறிமுகப்படுத்தி அமல்படுத்தவும் செய்தார். அதுதான் தமிழக அரசுக்கு இன்று அதிக வரி வருவாயைத் தரக்கூடிய அட்சயபாத்திரமாக இருக்கிறது. விற்பனை வரிக்கு மூலகாரணமாய் இருந்த நாடார் சமுதாய மக்களின் மகமைநிதிமுறை எப்படித் தோன்றியது? கைப்பிடி அரிசியிலிருந்து ஓர் உண்மைக்கதை:

திருநெல்வேலி மாவட்டத்தில் 1702,1703ஆம் ஆண்டுகளில் வறட்சியும் பஞ்சமும் கோரதாண்டவம் ஆடின! வாட்டும் வறுமையிலிருந்து தப்பிக்க, அங்கிருந்து மதுரை, திண்டுக்கல், விருதுநகர், அருப்புக்கோட்டை, சிவகாசி என்று குடிபெயர்ந்தனர் நாடார் இன மக்கள். அவர்கள் முதலீடாய்க் கையில் கொண்டு சென்ற பனைப் பொருட்களின் உபயோகம் குறித்துக் குடியேறிய நகரங்களில் இருந்த மக்களுக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை. தமிழகத்தின் பிற பகுதிகளில் விளையக் கூடிய பொருட்களைத் தருவித்து வியாபாரம் செய்வதுதான் சிறந்த வழி எனக் கண்டு

வணிகத்தில் இறங்கினர். விருதுநகர் வணிகத்தில் கொடிகட்டத் தொடங்கியது.

உற்பத்தி மற்றும் விளைபொருட்களைக் கொள்முதல் செய்ய, மும்பை, கொல்கத்தா, கராச்சிவரை குடியேறியவர்கள், வியாபார நிமித்தம் ஐரோப்பிய நாடுகளுக்கும் செல்லத் தொடங்கினர். வியாபாரத்தில் தந்தியின் பங்கு முக்கியமானதாக இருந்தது. ஆங்கிலத்தில் வரும் தந்திகளைப் படிக்க ஆங்கில அறிவு அவசியம் என்பதை உணர்ந்து, ஆங்கிலக் கல்வி முறையில் பள்ளியைத் தொடங்க முடிவு செய்தார்கள்.

விருதுநகரில் 1889ல் வே. வன்னியநாடார் சரக்கு குடோனில், ப.பெ.க. சண்முக நாடார் தலைமையில் ஊர்க் கூட்டம் நடந்தது. மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்காமல் இலவசப் பள்ளி நடத்த நிர்வாகச் செலவுக்கு, இந்து நாடார்களின் வீடுகள்தோறும் பிடி அரிசி மகமை சேர்க்க முடிவு செய்தார்கள். இல்லத்தலைவியர் உணவு சமைக்க அரிசி எடுக்கும்போது ஒரு கைப்பிடி அரிசியைத் தினசரி சேர்த்து வைக்கவேண்டும்.. இதற்கென்று ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு மண் கலயம் கொடுக்கப்பட்டது. மாதக் கடைசியில், வீடுதோறும் சென்று சேமிக்கப்பட்ட அரிசியைக் கணக்கர் பெற்று வ்ந்து, அதைப் பொதுச் சந்தையில் விற்பனை செய்வார். அந்தப் பணத்தில் பள்ளி இயங்கும்... கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் செயல்...? நம்பினால் நம்புங்கள். 1889ல் பிடி அரிசியில் முப்பத்திரண்டு மாணவர்களோடு தொடங்கப்பட்ட க்ஷத்திரியவித்தியாசாலை இன்று பதினைந்து கல்விக் கூடங்களாக வளர்ந்திருக்கிறது.

மகமையின் மகிமை, கல்வித் துறையோடு நின்று விடவில்லை. பிடி அரிசி மகமை மூலமே தங்களுக்கான கோவில், நந்தவனங்களையும் கட்டிப் பொதுச் சேவை, பொதுக் காரியங்கள் எல்லாவற்றிலும் இன்று மகமை பரவி நிற்கிறது. விருது நகரில் இன்றும் ஒரு பைசா செலவில்லாமல், முதல் வகுப்பு தொடங்கி, இளங்கலை பட்டப் படிப்பு வரை படித்துவிடலாம்... என்பது எத்தனை பெரிய அதிசயம்!

கல்கி

இணைந்து வழங்கும்

புன்னகைப் போட்டி; பொன்நகைப் பரிசு!

நச் டயலாக்!

''பாபா லேட்டா வந்தாலும்
லேட்டஸ்டா வருவான்''

- 'பாபா'வில் ரஜினி பயன்படுத்தப் போகும் டயலாக்காம் இது. விஜய காந்துக்காக இது போல 'நச்' டயலாக் எழுதுங்களேன். 'டச்' பண்ணும் இரு டயலாக்குகளுக்குத் தலா நான்கு கிராம் தங்கம் பரிசு

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

புன்னகைப் போட்டி - 21

என்று குறிப்பிட்டு எழுதி, முகவரியைக் குறிப்பிடுங்கள். தபால் உறை அல்லது தபால் கார்டில், கீழே உள்ள கூப்பனை வெட்டி ஒட்டி அனுப்புங்கள்.

கடைசி தேதி : **15.7.2002**

ஆசிரியர், கல்கி,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

குருஜி ஏ.எஸ்.ராகவன்

குற்றாலச் சாரல் வீசும் திசையிலேயே பயணத்தைத் தொடருங்கள்... செங்கோட்டையிலிருந்து ஐந்து கி.மீ. தொலைவில் உள்ள 'பண்பொழி' என்ற சிற்றூரை அடையலாம்.

பண் – அதாவது இசை – பொழிகின்ற ஊராக ஒரு காலத்தில் இருந்ததோ என்னவோ, பின்னாளில் பெயர் மருவி 'பம்புளி' என்று ஆகிவிட்டது. தென்காசியிலிருந்தோ செங்கோட்டையிலிருந்தோ பஸ்ஸில் போக வசதியுண்டு. திருமலை என்று இன்று அழைக்கப்படும் இத்தலம் இயற்கை அழகும், இறை வளமும், அடியவர்களின் மனவளமும் இணைந்து கொழிக்கிறது.

தன்னை வந்தடைந்தவர்களின் பிணிகளைத் தீர்க்கும் மருந்தாகக் கருதி வழிபடுகிறார்கள் திருமலை முருகனை.

மலைக்குன்றின் மேல் இருக்கிறது அவன் திருக்கோயில். உச்சி மீது ஏறிநின்று சுற்றிலும் ஒரு நோட்டம் விட்டால் அலையலையாய் பசுமைக் காட்சி, நாலாபக்கமும் விரியும். இளம் தென்றல் காற்று வீசி உடலுக்கும் மனத்துக்கும் இதமளித்துச் செல்லும்! மலையடிவாரத்தில், முதலில் வல்லப கணபதியை வணங்கிவிடுவோம். அவரிடம் 'டிக்கெட்' வாங்கிக் கொண்டு மேலே ஏற, 544 படிகளைக் கடக்க வேண்டியிருக்கிறது. இடையே இளைப்பாறுவதற்கு நந்தகோபாலன் மண்டபம் இருக்கிறது. திருமலையில் அந்த வேணுகோபாலன் நினைவாக மண்டபம் அமைத்ததில் ஆச்சர்யம் என்ன..! இந்த மண்டபத்தில் இடும்பன் சன்னிதி, நடுவட்டப் பிள்ளையாரின் சன்னிதி இரண்டிலும் வணங்கி முன்னேறுவோம்.

'மலையின் நடுவழியிலே ஒரு புளிய மரத்தடியில் வேலும் மயிலும் கொண்ட கற்சிலை உள்ளது. அதில் 'உத்தண்ட வேலாயுதம் ஆதிமூல நிலையம்' என்று பொறிக்கப்பட்டுள்ளது. இதுவே இத்தலத்தின் ஆதி சன்னிதி என்கிறார்கள். வேல்வழிபாடு வழக்கத்தில் இருந்திருக்க வேண்டும்.

மலையுச்சியில் உச்சிப் பிள்ளையார். அவரைக் காண பதினாறுபடிகள் ஏற வேண்டும். பதினாறு படிகளும் பதினாறு பேறுகளைக் குறிக்கும் என்கிறார்கள். உச்சிப் பிள்ளையார் கோயிலருகே பூஞ்சுனை இருக்கிறது; பசுமடம் இருக்கிறது. கோயிலுக்கென்று பசுக்கள் வளர்க்கப்படுகின்றன.

முருகன் கோயில், மிகுந்த பொலிவோடு தெற்கு நோக்கிய சன்னிதியுடன் அமைந்திருக்கிறது. இரு பிராகாரங்கள். வாயிலை அடுத்து வஸந்த மண்டபம் – அதற்கு அழகானதொரு பெயர் – ஷண்முக விலாஸம். இந்த மண்டபத்தில் உத்ஸவ காலங்களில் கலை நிகழ்ச்சிகள், பிரவசனங்கள் நடைபெறக் காண்பது மிக ரம்மியமாய் இருக்கும்.


உள் பிராகாரத்தில் சிறிதும் பெரிதுமாய்ப் பல திருச்சன்னிதிகளிடையே சிங்காரத் தோற்றத்துடன் முருகன் சன்னிதி தனித்துத் தெரிகிறது. கர்ப கிருஹத்தில் மூல மூர்த்தியாக கந்தப் பெருமான் காண்போரது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அழகுடன் காட்சி தருகிறான். ஒரு முகமும் நான்கு திருக்கரங்களுமாக மயிலோடு நிற்கிறான். ஒரு முகத்தழகே நம்மைக் கட்டிப்போடுகிறதெனில் ஆறு முகங்களின் பொலிவை ஒரு சேரக் காண எப்படித்தானிருக்குமோ...?

இந்தக் கேள்விக்கு உத்ஸவர் பதில் தந்துவிடுகிறார். அவர் ஆறுமுக சாமி. நம் இரு கண்களால் அவன் அழகைப் பருகி மாளாது என்பதால், பேசாமல் மனத்தை அவனிடமே ஒப்படைத்துவிட்டுப் போகவேண்டியது தான்!

திருமலை முருகனுக்குத் திருமலைக் குமாரசாமி, திருமலை ஆண்டி, திருமலை ஆண்டவர், திருமலை வாழ்ஜோதி, திருமலை வடிவேலன், திருமலைக் குருபரன், திருமலை நாயகன் என்றெல்லாம் பெயர்கள். திருமலைப் பெருமாள், திருமலைக் குடும்பி வித்தகன் என்று கூட அழைக்கப்படுகிறான்.

உத்ஸவருக்கோ ஷண்முகன், முத்தையன்


பன்ன பொழி
வேலவன்



என்று பொருத்தமாகப் பெயர்கள்.

மூர்த்தி பெருமையைப் போலவே தீர்த்த பெருமையும் மிகுதி திருமலைக்கு.

பூஞ்சுனை – சப்த கன்னிகைகள் வழிபட்ட நீர் நிலை. அதற்கு அடையாளமாக சப்த கன்னிகைகளின் சிலைகள் உள்ளன. இச்சுனைக்கு திருக்குவளைச் சுனை என்றும் பெயருண்டு. இச்சுனையில் மூன்று குழிகள் உண்டு. அவை இறைவனின் மூன்று நேத்திரங்களான சூரியன், சந்திரன், அக்னியைக் குறிப்பதாக நம்பப்படுகிறது. இத் தீர்த்தத்தில் முன் காலத்தில் தினமும் ஒரு மலர் பூத்ததென்றும் அதனைப் பறித்து பெருமாளுக்குச் சூடுவர் என்றும் சொல்லப்படுகிறது. பூஞ்சுனை என்ற பெயரே இதனால் ஏற்பட்டதுதான். இடும்பன் சுனை இருக்கிறது. இடும்பன் சந்நிதிக்கு அருகில் உள்ளது இது. முன்னர்



அடிவாரத்தில் இருந்த சரவணப் பொய்கை தூர்ந்து போய்விட்டது.

பூஞ்சுனையில் வழிபட்ட சப்த கன்னிகைகள் தொடர்பாகக் கதையொன்று இருக்கிறது. இவர்களைத் தினமும் வழிபட்டுப் பூஜித்த ஒரு தொண்டரின் கனவில்தான் முருகன் தோன்றி, தாம் அம்மலையின் வடக்கே அனுமன் நதிக் கரையில் ஒரு மூங்கில் காட்டுக்கு அருகே மண்ணால் மூடப்பட்டுக் கிடப்பதாகச் சொன்னாராம். அக் காலகட்டத்தில் அப்பகுதி மன்னன் நோய்வாய்ப்பட்டிருந்திருக்கிறான். 'அவனிடம் எம் இருப்பிடத்தைச் சொல்லி கோயில் கட்ட வை!' என்று முருகன் மெய்யன்பரிடம் ஆக்ஞாபித்திருக்கிறான். அவரும் மன்னரை அழைத்துப் போய், கட்டெறும்புகள் ஊர்ந்து செல்லும் வழித் தடத்தைப் பின்பற்றி முருகனைக் கண்டெடுத்திருக்கிறார்.

முருகன் சொன்னபடியே மன்னன் ஆலயம் அமைத்து மகிழ்ந்து, நோய் தீரப்பெற்றிருக்கிறான். அவர்கள் கண்டெடுத்த சிலையே இன்று திருமலை முருகன் கோயிலில் காணக் கிடைக்கிறது என்கிறார்கள்.

நெல்லை மாவட்டத்தில் முருகன் ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்வோர் திருச்செந்தூரில் தொடங்கி திருமலையில் முடிக்க வேண்டும் என்பார்கள்.

இரு தலங்களுக்கும் நிறைய ஒற்றுமைகள்:

திருச்செந்தூர் ஆறுமுக நயினாரும் பக்தர் கனவில் தோன்றி, தெரிவித்துக் கடலிலிருந்து எடுக்கப்பட்டார். திருமலை முருகனும் கனவில் உணர்த்தி மண்ணிலிருந்து வெளிப்பட்டார். இரு கோயில்களிலும் சண்முக விலாஸம் என்ற பெயருடன் மண்டபம் இருக்கிறது. இரண்டிலுமே விபூதி பிரசாதத்தைப் பன்னீர் இலையில் வைத்துத் தருவது வழக்கமாக இருக்கிறது. இரு உத்ஸவர்களுமே ஷண்முகர்கள்!

எதனுடனும் ஒப்புவமை சொல்ல முடியாத தனிச் சிறப்பு எல்லா தலங்களுக்குமே உண்டு. எத்தனை கோயில்களில் எத்தனை முருகன்கள் இருந்தால்தான் என்ன...? அத்தனையும் தனிச் சிறப்புடையவையே.


அத்தனையிலும் தமிழ் மக்கள் தரிசித்து மகிழ்கிறார்கள். தமிழ்க் கவிகள் பாடி மகிழ்கிறார்கள்.

திருமலை முருகன் குறித்தும் பாடல்கள் உண்டு. இதோ, கவிராஜ பண்டாரத்தையா என்ற புலவர் பாடிய திருமலை முருகன் பிள்ளைத் தமிழிலிருந்து சில வரிகள்:

அண்டத் திறைவன் பொன்முடிக்கும்
அமலக் கமலன் மணிமுடிக்கும்
அமரர் முனிவர் தலைகளுக்கும்
அணியப் பணியக் கிடையாத
தண்டைப் பதத்தை எனக்களித்த
தலைவா தாலோ தாலேலோ
தாமக் குவளைத் திருமலைவித்
தகனே தாலோ தாலேலோ

அவன் தண்டையணி பாதங்களைப் பெற்றுவிட்ட மகிழ்ச்சியில் பாடுகிறார் கவிராஜ பண்டாரத்தையா... அரியும் சிவனும் அடையாத, அமரரும் முனிவரும் பெறாத அப்பொற்பாதங்களை எவ்வாறு அடைந்தாராம் புலவர்..? அவனையொரு குழந்தையாக எண்ணித் தாலாட்டி குழந்தை மனத்துடன் வழிபட்டதால்தான் என்பதில் சந்தேகமென்ன!○

தைராய்டு கோளாறுகள்...



'தைராய்டு கோளாறுகள்' என்ற தலைப்பில் அனைவருக்கும் உபயோகப்படும் வகையில் புத்தகம் ஒன்றை ஏ.கே.பி ஹோமியோபதி மருத்துவ ஆராய்ச்சி மையம் வெளியிட்டுள்ளது. இதன் ஆசிரியர் பிரபல ஹோமியோபதி மருத்துவ நிபுணர் டாக்டர். ஆர்.ஞானசம்பந்தம். 'முடிவளம்', 'ஹோமியோபதி அற்புதங்கள்' புத்தகங்களின் அமோக வரவேற்பைத் தொடர்ந்து மூன்றாவது புத்தகமாக இதை வெளியிட்டுள்ளார்.

எளிய தமிழ் நடையில் தைராய்டு சுரப்பி அதிகமாக சுரத்தல் மற்றும் குறைவாக சுரத்தல் போன்றவைகளை ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் எவ்வாறு முழுமையாக தீர்வு காண்பது, அறுவை சிகிச்சை முறைகளை எப்படி தவிர்ப்பது என்பதை தெளிவாக கூறியுள்ளார். தைராய்டு கோளாறுகளால் ஏற்படும் முடிப்பிரச்சனைகள், தீட்டுக் கோளாறுகள், உடல்பருமன், சினைமுட்டைப்பை நீர்க்கட்டிகள் போன்றவற்றையும் கதை பாணியில், ஆதாரங்களுடன் எழுதியிருப்பது படிப்பதற்கு விறுவிறுப்பை ஏற்படுத்துகிறது. படங்கள் ப்ளஸ் பாயின்ட்.

இப்புத்தகத்தை தபாலில் பெற ஏ.கே.பி ஹோமியோபதி மருத்துவ ஆராய்ச்சி மையம், 6, லாயிட்ஸ் II லேன், இராயப்பேட்டை, சென்னை-14. (போன்: 8113300) என்ற முகவரியில் தொடர்பு கொண்டு புத்தக விலை ரூ.85/- M.O செலுத்தி, இலவச தபால் சலுகையுடன் பெற்றுக் கொள்ளலாம். இதே முகவரியில் 'முடிவளம்' ரூ.75/- 'ஹோமியோபதி அற்புதங்கள்' ரூ.150/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். பிரபல புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

பெங்களூரில் புத்தகங்களை இராஜாஜி நகர், ராம மந்திர் ரோடு, 'கன்வா டயக்னஸ்டிக்ஸில்' (போன்-3385455) பெற்றுக்கொள்ளலாம். மருத்துவரையும் பிரதி மூன்றாம் ஞாயிற்று கிழமைகளில் நேரில் சந்திக்கலாம்.

ஏ.கே.பி நிறுவனம் www.thyroidmiracles.com என்ற இணையத்தளத்தின் மூலம் இலவச ஆன்லைன் கன்சல்டேஷன் ஏற்பாடு செய்துள்ளது. gnanas@vsnl.com மூலம் தொடர்பு கொண்டும் சந்தேகங்களைக் கேட்கலாம்.



"**கா**தலிக்கு 'ஸாரி கார்டு' அனுப்பச் சொல்றதுக்குக் கூட ஒரு வி.ஐ.பி (!) பொரிக தேவைப்படுதா? அதுகூட உனக்கா தோணாதா?" என்று ராகுலை, ஒரு பிடி பிடித்து விட்ட ரோகிணி போன்ற அழகிய இளம் நெஞ்சங்களுக்கு இந்த வாரத் தொடர் சமர்ப்பணம்!

ராகுல் - ரோகிணி யார், என்ன கோத்திரம், எங்கே, எப்படி சந்தித்துக் கொண்டார்கள், காதலின் வேகம் மணிக்கு எத்தனை கிலோமீட்டர் போன்ற விவரங்கள் எல்லாம் இந்தத் தொடருக்கு அவசியமில்லை என்பதால், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக்க இயக்குநர் ஸ்ரீதர் சினிமா டைப் காதல் என்ற விளக்கத்தோடு நிறுத்திக் கொள்ளலாம்.

சமீபத்தில் அலுவலக வேலையாக டெல்லி போயிருந்த ராகுல், ரோகிணிக்குப் பரிசு வாங்கி வந்தான். வாரத்தின் ஏழு நாட்களுக்கும், தனித்தனியாக, வெவ்வேறு நிறங்களில் எம்பிராய்டரி செய்யப்பட்ட 'ரெயின்போ' கர்ச்சீப் செட் அது!

"ஐயோ... இது எனக்கு வேணாம்பா..!"

"ஏன் ரோ? உனக்குப் பிடிக்கலையா?"

"காதலர்கள் கர்ச்சீப் பரிசு கொடுத்துக்கிட்டா, அவங்க பிரிஞ்சுடுவாங்க. ஒத்தெல்லோ - டெஸ்டிமோனா கதை தெரியாதா உனக்கு?"

"சரியான செண்டிமெண்ட் கப்பம்மா நீ!"

"பரவாயில்லை... நீ பகுத்தறிவு பழனியப்பனாவே இரு... எனக்கு வேண்டாம்!"

அதற்குள் ரோகிணியின் தோழி, வத்ஸலா அங்கே வரவே, அவளுடைய காண்டாக்ட் லென்ஸ் கண்ணில் சிந்துவாரற்று கிடந்த கர்ச்சீப் பட்டதே! அது கொடிய விதி விளையாட்டின் செமி ஃபைனல்ஸ்!

"ஹேய்... ரியலி பியூட்டிஃபுல்யா... நான் எடுத்துக்கட்டுமா?"

"'ஷ்யூர்..!' பேகன், ஓரி, காரி, பாரி வரிசையில் பெயர் பெறத் துடித்தவனாய், ராகுல் அன்புடன் எடுத்து நீட்ட, வத்ஸலா அள்ளிக் கொண்டு போயே விட்டாள்.

அப்புறம் வந்தது எல்லாம் டபிள்யூ. டபிள்யூ.எஃப் ஃபைனல்ஸ்!

"அதெப்படி தரலாம்...? எனக்குன்னு வாங்கிட்டு வந்ததை?"

"நீதான் வேண்டாம்னு சொன்னியே!"

"என் முன்னாடியே ஜொள்ளுவிடறியே! என் மனசு என்ன பாடுபடும்..!"

"ஓவரா ஸீன் காட்டாதே!" ராகுல் எரிச்சலில் பல்லைக் கடிக்க,

"என்னது... இது உனக்கு ஸீனா?"

ரோகிணிக்குப் பேசப் பிடிக்காமல், எழுந்து போய்விட்டாள்.

'**சி**ன்ன ஊடல்தான்... மறுநாள் சரியாகிவிடும்' என்று ரோகிணி நினைக்க, கிட்டதட்ட எழுபத்து இரண்டு மணி நேரம் ராகுல் ஃபோன் பண்ணவேயில்லை. எழுபத்து மூன்றாவது மணி நேரத்தில், ரோகிணி தாங்க முடியாதவளாய், தானே ஃபோன் செய்தாள்.

"ரொம்ப பிஸியா இருக்கேன். அப்புறமா பேசறேன்..." வைத்துவிட்டான். மறுநாளும் அவன் பேசவில்லை.

"ஏன் ராகுல்... பேசவேயில்லை?"

"நத்திங் ஸ்பெஷல்... அதான் பேசலை!"

"வைச்சுடட்டுமா?"

"சரி..!"

ரோகிணிக்கு வருத்தம், எரிச்சல், ஆற்றாமை, பிரிவுத் துயரம், கழிவிரக்கம் என ஏதேதோ உணர்ச்சிகள் ரெயின்போ வண்ணங்களில்...

ஆதாம், ஏவாள் - ஆதி தியரி - 8

எங்கே அவன்?

மறுநாள் அவன் வீட்டுக்குப் பேசினால், அவன் மும்பை போய்விட்டதாகத் தகவல் சொன்னார்கள்.

ஒண்ணேகால் ரூபாய் செலவு பண்ணி, ஒரு ஃபோன் செய்து, 'மும்பை போறேன்'னு சொல்லிட்டுப் போகத்தோணலியா... என்ன ஒரு திமிர்...!

அவனுடைய நெஞ்சில் ஆர்டிஎக்ஸ் குண்டு வெடித்ததில், காதல் கோட்டையின் ஒரு பகுதி வெடித்துத் தூள் தூளானது.

ராகுல் தரப்பில் சொல்லப்படுவது என்ன?

"எனக்கு ரோகிணி மீது எந்தக் கோபமும் இல்லை. ஆபீஸில் வேலை ஜாஸ்தி... திடீர்னு மும்பை கிளம்ப வேண்டியதாப் போச்சு... போயிட்டு வந்ததும் நேரே அவளோட ஆபீசுக்குத்தான் போனேன்... அவதான் என்னைப் புரிஞ்சுக்காம சண்டை போடறா" என்கிறான் வருத்தத்துடன்.

ஆதாமின் கண்ணுக்குப் பிடித்த மாதிரி ஒரு பெண் தென்பட்டுவிட்டால், உடனே அவன் அவளைத் துரத்தி துரத்திக் காதலிக்கிறான். ஒருவேளை, ஏவாளுக்கும் அவனில் வசீகரம் இருந்து 'ஓகே' சொல்லிவிட்டால், இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் உத்தேசத்தில் நெருங்கிப் பழக ஆரம்பிக்கிறார்கள். பெண்களைப் பொறுத்தவரை, இந்தக் காதலுக்கு இடைவெளியோ, தேய்மானமோ இருக்கவேகூடாது. அது இந்தியாவின் ஜனத்தொகை போல தினமும் பெருகிக் கொண்டே இருக்க வேண்டும்.

ஆனால் ஆண்கள், காதல் விவகாரங்களில் சின்ன இடைவெளியை எடுத்துக் கொள்கிறார்கள். பல சமயங்களில் அது திட்டமிட்டுச் செய்யப்பட்டதாக இருக்காது. இயற்கையான உந்துதலால் அப்படி நேர்ந்து விடுவதுண்டு. இந்த மனோபாவத்தை 'மேல் இன்டிமஸி சைக்கிள்' என்று மனவியலாளர் சொல்கிறார்கள்.

மிகவும் நெருக்கத்துடன் பழகிக் கொண்டிருப்பவர்கள், சட்டென்று பின் வாங்கிக் கொண்டு, உறவைத் தவிர்ப்பார்கள். அந்தப் புறக்கணிப்பும் கொஞ்ச காலம்தான். மறுபடி புதிய உத்வேகத்தோடு, உறவு கொண்டாடிக் கொண்டு, சுற்றிச் சுற்றி வருவார்கள்.

ஆதாமின் இவ்வித மனநிலையை ரப்பர் பேண்டுடன் ஒப்பிடலாம். ரப்பர் பேண்டை இழுத்தால், நன்றாக விரிந்து கொடுக்கும். ஒரு குறிப்பிட்ட அளவு விரிந்ததும், விசையைத் தளர்த்தினால், பலத்த வேகத்தோடு பழைய நிலைக்கே திரும்பும்.

இந்த அந்தரங்க இடைவெளி பெண்களுக்குத் தெரியாது என்பதால், "நம்மை ஏமாற்றப் பார்க்கிறான்... கடுக்காய் தர்றான்" என்று ஜாக்கிரதை உணர்வுடன் ஜகா வாங்கிக் கொள்கிறார்கள்.

காதலித்துக் கொண்டிருக்கும் பெண், தன்னுடைய பார்ட்னரைத் தவிர்த்தால், அதற்கு ஏமாற்றம், அவநம்பிக்கை, வெறுப்பு, குடும்பச் சூழ்நிலை, மனக்கலக்கம் என ஏதேனும் காரணமிருக்கலாம். ஆனால் ஆதாம்களைப் பொறுத்தவரை, அவர்கள் எடுத்துக் கொள்ளும் சிறு இடைவெளிக்கு, மகத்தான காரணம் இருக்க வேண்டிய அவசியமேயில்லை. ஆண்கள் தனியாக, சுதந்திரமாக, ஆசுவாசப்படுத்திக் கொள்ள விரும்புகிறார்கள் என மட்டுமே அர்த்தம் கொள்ளலாம்.

நம்ம ரோகிணிக்குச் 'சர்வ நிச்சயமாய் இது ரப்பர் பேண்ட் விஷயம்தான்' என ராகுல் சார்பாக எடுத்துச் சொல்லப்பட்டது. பிரிந்தவர்கள் மறுபடி கூடி தொலைபேசியில் பல மணி நேரம் கதைத்துக் கொள்வதால், அவர்கள் வீட்டு ஃபோன் லைனும் எங்கேஜ்ட்... அவங்க திருமணமும் எங்கேஜ்ட்!

அடுத்த வாரத் தொடர் கைங்கரியம் விஜி - ரவி தம்பதி. கல்யாணமான ஒரே வருஷத்திலேயே தாம்பத்யம் போரடிச்சுப் போனதா புகார் வந்திருக்கு...

ஊடலிற் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலிற் காணப் படும்.
- திருக்குறள்



சுமி சூப்பர்மார்க்கெட்

ஒரு பட்டியல் படிக்கறீங்களா...?
62 கம்ப்யூட்டர் கீ போர்ட்,
26 செல்ஃபோன்,
15 டீவி ரிமோட்கள்,
9 கதவு கைப்பிடிகள்,
2 நாற்காலி,
1 ரப்பர் ஸ்டாம்ப்

- இத்தனையும் என்னன்னு நினைச்சீங்க...? அமெரிக்கால வெள்ளை மாளிகையைக் காலி பண்ணி கிளின்டன் வெளியேறியபோது, அங்கே உடைஞ்சு போய்க் கிடந்த ஐட்டம்ஸ் லிஸ்ட்தான் இது!

வெள்ளை மாளிகையிலேயே இத்தனை 'வான்டலிஸம்' இருக்கும் போது நம்ம ஊர் வியாதி மாளிகை (அதான் சென்னை ஜி.எச்) கதி என்ன...! ரீசன்டா ஒரு நியூஸ் கவனிச்சீங்களா தெரியலை... எட்டு லட்சம் மதிப்புள்ள ஒரு முக்கியமான மெடிகல் எக்விப்மென்டைச் சில சமூக விரோதிகள் உள்ளே பூந்து உடைச்சு வைச்சிருக்காங்க!



ஜிஎச்ல 24 மணி நேர பிளட் பாங்க் உண்டு. அந்த பாங்க்லே எய்ட்ஸ் பரிசோதனையான 'எலிஸா டெஸ்ட்' பண்றதுக்காக வாங்கி வைச்ச எக்விப்மென்ட் அது. வாங்கி ஒரு வருஷம்தான் ஆச்சு!

தங்களை டிரான்ஸ்ஃபர் பண்ணிட்டதனால எரிச்சல் அடைஞ்ச சில ஊழியர்களே இந்த வன்முறையில் ஈடுபட்டிருக்கக் கூடும்னு சந்தேகிக்கிறாங்க.

உண்மையைக் கண்டுபிடிச்சு குற்றவாளிகளைத் தண்டிக்கறாங்களான்றது ஒரு பக்கம் இருக்க... அமைதியும் அன்புமான அட்மாஸ்பியர் இருக்க வேண்டிய ஹாஸ்பிடல்ல ஏன் இப்படிப்பட்ட வன்முறை கொடூரங்கள் நடக்குது...?

அடிக்கறது, நொறுக்கறது, உடைக்கறது ஏன்...? கொல்றதுகூட நம்மோட உரிமைன்ற மாதிரி ஒரு அபத்தமான ஆபத்தான 'லாஜிக்' இன்னிக்குப் பேசப்படறது ஒரு முக்கியமான காரணம்.

இந்த 'லாஜிக்' எவ்வளவு சுலபமாவும் தீவிரமாவும் பரவும்; 'பிரெயின் வாஷ் பண்ணும்'ன்றதை 'தி லெஜண்ட் ஆஃப் பகத்சிங்' சினிமா பார்க்கும்போது புரிஞ்சுக்க முடிஞ்சுது.

பகத்சிங்கோட வாழ்க்கை வீரமும் தியாகமும் நிறைஞ்சதுன்றதுல சந்தேகமில்லை. ஆனா, அதைச் சரித்திரமா பார்க்கணுமேயொழிய அன்னைக்கு நடந்த நிகழ்ச்சிகளுக்காக இன்னிக்கு நாம் பிரிட்டிஷ்காரங்களோட பகைமை பாராட்டலாமா...? அது நியாயமும் இல்லை; புத்திசாலித்தனமும் இல்லே.

ஆனா படம் பார்க்கிறபோது தியேட்டர்ல ஜனங்க பயங்கரமா உணர்ச்சி வசப்படறாங்க. பிரிட்டிஷ் பாத்திரங்களைக் கிண்டலும் கேலியும் பண்றாங்க.

அதைவிட கவலைக்குரிய விஷயம் இந்தப் படத்துல காந்திக்கு இழைக்கப் பட்டிருக்கற அநீதி.

பகத்சிங் புரட்சியாளர்ன்றதாலே காந்தியோட சாத்விகப் போராட்டம் ஏதோ கோழைத்தனம்ங்கற மாதிரியான ஒரு சித்திரிப்பு ரொம்ப சைலன்டா இந்தப் படத்துல பதிவாகியிருக்கு.

காந்தி வர காட்சிகள்ள எல்லாம் தரை மகா ஜனங்க முதல் பால்கனி ராஜாக்கள் வரை அத்தனைப் பேரும் இளக்காரமா கூப்பாடு போட்டு சந்தோஷப் படறாங்க!

சரித்திர பூர்வமா ஆராய்ச்சி பண்ணி நடந்த சம்பவங்களைத்தான் படமாக்கியிருக்கோம்னு இயக்குனர் சொல்றார். பட், படமாக்கப்பட்டிருக்கற விதம் கொஞ்சம் விஷமத்தனமாகத்தான் இருக்கு. தோற்றத்துலயும் பேச்சுலயும்கூட காந்தியோட கம்பீரத்தையும் பகத்சிங்குக்கு இணையான அவர் ஆளுமையையும் காட்டாம ஒரு வீக் பெர்சனாலிடி மாதிரி காட்டியிருக்காங்க.

பகத்சிங் ஹீரோவா இருந்தார். ஆனா காந்தி நிச்சயமா ஒரு வில்லன் இல்லையே.

அப்படினா இந்த மாதிரி பாத்திரப் படைப்பு ஏன் அமையணும்? 'எல்லாரும் மதிக்கற ஒரு விஷயத்தை எதிர்க்கறோம்'ன்ற பரபரப்பை உண்டாக்குறதுக்காக இருக்கலாம்.

காணாமலே காதல்: கற்பனையல்ல!

ஆனா இது ரொம்ப அபாயகரமான ட்ரெண்ட். வன்முறைதான் வீரம்; சாத்வீகப் போராட்டம்ன்றது வீரமில்லைன்னு சொல்லாம சொல்ற போக்கு. நம்ம தேசத்தோட ஃபிலாஸஃபிக்கு நேர் எதிரான போக்கு இது.

தியேட்டர்ல பகத்சிங் டயலாக்ஸ்க்கு விசிலடிச்சு, காந்தி வர்றப்போ கூப்பாடு போடற கூட்டத்தைச் சேர்ந்தவங்க பகத்சிங் மாதிரி சொந்த வாழ்க்கைல தியாகங்கள் பண்ணத் தயாராயிருப்பாங்களான்னு யோசிக்க வேண்டியிருக்கு!

காதல் கதைகள்ளாம் சலிச்சுப் போய், குடும்பக் கதைகள்ளாம் புளிச்சுப் போய் தான் சினிமா உலகம் பகத்சிங் ரேஞ்ச்ல படங்களெடுக்க ஆரம்பிச்சிருக்குன்னு சிம்பிளா சொல்லிட முடியாது. அஞ்சு தயாரிப்பாளர்கள் ஒரே நேரத்துல பகத்சிங் பத்திப் படம் பண்றாங்கன்னா அதுக்குக் காரணம் என்ன...? மார்க்கெட் இப்படிப்பட்ட 'தேசபக்தி' போர்வை போர்த்திய படங்களை ரிசீவ் பண்ணக் காத்துக்கிட்டிருக்குன்னு அர்த்தம்.

இன்னைக்கு நமக்குத் தேவை பிரிட்டிஷ் ஆட்சி காலத்து எதிர்ப்புணர்வு ரகமான தேசபக்தி இல்லை; ஆக்க பூர்வமான தேச பக்தின்றதைப் புரிஞ்சுக்கிட்டு யாராவது படம் பண்ணுவாங்களா...?

சினிமாவுல காணாமலே காதல்னு வந்தா யதார்த்தமில்லேன்னு சாடுற அறிவு ஜீவி விமர்சகர்கள், கலீல் ஜிப்ரான் காதல் கடிதங்களைப் படிக்கணும். காதலி 'மே'க்கு அவர் எழுதிய கடிதங்கள் ரொம்ப உயர்ந்த காவிய தெறிப்புகள்.

சமீபத்தில் ஒருவிதமான பந்தத்தை தான் ஏற்படுத்திக்கொண்டேன். புலன்களால் உணர முடியாதது. மென்மையானது. உறுதியானது. விநோதமானது. தன் இயல்புகளாலும் அமைப்பிலும் வேறெந்தத் தளையைப் போலவும் அல்லாதது. குடும்பப் பந்தங்களோடு ஒப்பிட முடியாதது. அதைவிடவும் உறுதியானது. ஒழுக்க நெறிகள் பாற்பட்ட பந்தங்களை விடவும் நித்தியமானது.

மனித நெஞ்சிலிருந்து துள்ளிக் கிளம்பும் எதையும் விட விநோதமான ஆழமானக் கனவுகள் இருக்கின்றன.

கனவுகளுக்குள் கனவாக, அந்தக் கனவுக்குள் கனவுகளாக...

அந்தப் புரிதல் மே, ஓர் ஆழமான அமைதியான பாடல்.



• பகத்சிங்

(இந்தத் தமிழ் மொழி பெயர்ப்பை ரொம்ப அற்புதமா பண்ணிருக்கற டாக்டர் ரமணிக்கு யாராவது பாராட்டு விழா எடுக்கலாமே!)

ஜிப்ரான் - மே ஆயுசுக்கும் சந்திச்சுக்கலைன்னு சொன்னா யாராவது நம்புவாங்களா...?

கல்கி இதழின் முன்னாள் அஸிஸ்டெண்ட் எடிட்டர் எஸ்.வி.எஸ்.ஸின் நினைவுச் சொற்பொழிவுக்கு லாஸ்ட் வீக் ஏற்பாடு செஞ்சிருந்தது, 'ஆதர்ஸ் கில்ட் ஆஃப் இந்தியா'வின் சென்னை கிளை.

வைஷ்ணவா காலேஜ் முன்னாள் தமிழ் ஹெச்.ஓ.டி கலாதாக்கர், 'நான் கண்ட எஸ்.வி.எஸ்.'ங்கற தலைப்புல பேசினாங்க. நல்ல லெக்சர்தான். ஆனா அவரைப் பற்றிய விஷயங்கள் குறைவாத்தான் இருந்தது.

"ரசிகமணி, ராஜாஜி, கல்கி மூன்று பேரோட சாரத்தைக் கொண்டவர்தான் எஸ்.வி. எஸ். இந்திய நூலாசிரியர் மன்ற சென்னைக் கிளையை ஆரம்பிக்க முயற்சி பண்ணினவர் அவர்தான். அவரில்லைனா இந்தச் சென்னை கிளை வந்திருக்க சாத்தியமில்லை. பிறமொழி சிறுகதைகளை அதிகமா மொழி பெயர்த்தவர். தாம் பேச வேண்டும், எழுத வேண்டும்னு நினைக்கறவங்க மத்தியில, மத்தவங்களை வளர்த்து விட்டவரு இவர். ஒவ்வொரு மாதமும் தம் வீட்டிலேயே இலக்கியக் கூட்டங்களை நடத்திய எஸ்.வி.எஸ், விளம்பரம் எதிர்பார்க்காமல் இலக்கிய தொண்டு செய்தார்"னு ரொம்ப சொல்லிட்டே போனாங்க கலா தாக்கர்.

மிஜோராம் முன்னாள் கவர்னர் பத்மநாபன், தன்னோட ஸ்பீச்ல கூட்டம் குறைவா வந்ததைப் பத்தி ரொம்ப கவலைப்பட்டார், 'நூறு இருநூறு பேராவது வந்திருக்க வேண்டாமா?'ன்னு. பிறகு அவரே, "ராமகிருஷ்ண பரமஹம்சர் கூட்டம் நடத்தினாரு. பத்து பேர்தான் இருந்தாங்க. கொஞ்சம் இருங்க. ஆள் வரட்டும்ன்னு எல்லோரும் சொல்ல, ராமகிருஷ்ணர் சொன்னார்: நான் ரத்தினத்தை வைக்கப் போறேன். வந்தவங்களுக்கு லாபம். வராதவங்களைப் பத்தி கவலையில்லைன்னு சொன்னாராம்!"னு சொல்லி சமாளிச்சாரு.

- சுமி

படம்: வெங்கடேஷ்

• ஜே.எஸ். ராகவன்

(டாக்டர் பத்மா சுப்ரமண்யத்தால் பயிற்சி அளிக்கப்பட்டு அரங்கேற்றம் ஆகிய போலீஸ்காரரின் 'பரதநாட்டி'யைச் சுப்புடு இவ்வாறு விமர்சிப்பாரா?)

ஓர் ஆச்சர்யம் ஸ்வாமி! சொன்னால் நம்ப மாட்டீர்கள்! அங்கே ஸ்ருதியும் - லயமும், சங்கீதமும் - சர்ச்சையும் போல சங்கமிக்கும் நாற்சந்தியில் என் கார் டயர் வைத்த வேளை 'பொசுக்'குன்னு டிராபிக் லைட் அணைந்துவிட்டது.

அந்தக் களேபரத்தில்தான் அதிசயம் நிகழ்ந்தது.

வந்தாரய்யா டிராபிக் 'திருத்திய' மணி நடன சுந்தரம்.

சுமார் ஒரு மாத்திரை காலப் பிரமாணத் திகைப்பு. திடீரென்று சுதாரித்துக் கொண்டு ஆடினார் பாருங்கோ - அபாரமான ஆட்டம்.

அடவுகள்?

- சிற்பம்!

பாதவேலை?

– அட்டகாசம்

அபிநயம்:

- ஒன்னாங்கிளாஸ்!

பக்கத்தில் உட்கார்ந்திருந்த கிருஷ்ணகான சபா யக்ஞராமன், அந்த நடன சுந்தரத்தின் சிட்சையைப் பற்றிச் சொன்னபோது வாயைப் பிளந்தேன். சரிதான்! பத்மா சுப்ரமணியத்தின் வித்யார்த்தியா? அதானே! பத்மாவா? கொக்கா?

எதைச் சொல்ல? எதை விட?

சாம்பிளுக்கு ஒரு 'பளிச்' அடவு.

டி.டி.கே சாலையிலிருந்து ஒரு சிருங்கார டோயோட்டோ. ஸ்டியரிங் பின்னால் விரகதாபத்தோடு ஒரு நாயகி. பிரிந்த நாயகனுடன் சல்லாபிக்கும் அவசரம். ஆனால் பிரம்மராட்சசன் மாதிரி குறுக்கே ஒரு தண்ணி லாரி. சட்டென்று ஸ்டியரிங்கை வளைத்து அத்துமீறி நுழைய முயன்ற லாரியை, நடன சுந்தரம் மடக்கிய பார்வை ஒன்றே போதுமய்யா! போனசாகக் கச்சிதமான அடவுகள். எல்லாமே 'ஏ' ஒன்!

'ஆடி மாசமடி. அவசரம் கூடாதடி!' என்ற முத்திரைத் தாண்டவரின் அடாணாராகப் பத அபிநயத்தைக் கண்களிலேயே கொண்டு வந்து நாயகியை 'ஸ்டாப்' செய்தபின், 'சிற்றின்பத்தைத் துற. பேரின்பத்தை நாடு' என்ற வகையில் காண்பித்த முத்திரை 'சின்' முத்திரையா? இல்லை ஐயா! 'ஜின்' முத்திரை. அவ்வளவு 'கிக்' அதில்!

இத்தனைக்கும் நடன சுந்தரத்துக்கு அரங்கம் சரியாக அமையவில்லை. குண்டும் குழியுமாக ஒரே கோணல். வாத்தியக் குழுவின் ஏக இரைச்சல். அத்துமீறி வாசித்த பக்க வாத்திய தண்ணி லாரிகளின் ராட்சச ஹாரன் சப்தம். லைட்டிங்? வேண்டாம்! கைகேயியின் கோபாக்கிரகம் கெட்டது!

இந்தப் பாடாவதி சூழ்நிலையிலே நடன சுந்தரம் பக்காவா பண்ணினது ஜிஞ்சாமிர்தம். நசுங்கின ஈயச் சொம்பிலே வெச்ச மணக்கும் தக்காளி ரசம்!

போக்குவரத்துப் போலீசின் தலையான சாமுத்ரிகா




நாட்டியக் 'காவலர்!'

லட்சணமான தொப்பை அவரிடம் லவலேசமும் இல்லை. மிருதங்கப் பக்க வாட்டைப் போல் 'கிண்'ணென்ற தட்டை வயிறு. ஸ்டாம்ப் பேப்பரில் எழுதித் தருகிறேன் - ஜோதிகா பார்த்தா பெருமூச்சு விடுவான்னு!

ஜதி மாறும் வேளையில் நடன சுந்தரம் செய்த இடைத் தீர்மானங்கள் அவர் இடைத்தேர்வில் வென்று சூடிய வாகை ஐயா. அப்புறம் ஸ்டேஜ் பிரசென்ஸ் (stage presence)? கண்ணைப் பறிச்சது. கோப்புத் திறனைப் பற்றி (Choreographic gift) சொற்கட்டுகளாகச் சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் இடம்? சென்னை நடைபாதை இடமின்மை ஒரு தடை.

அருமையான ஆட்டத்தைக் கெடுக்க வந்தாரய்யா ஒரு டிராபிக் சார்ஜென்ட். சதிர் அவருக்குப் புரியாத புதிர். அரங்கில் இருவர் நாட்டியமா? தாயாதி சண்டைதான். 'நடராஜா'ன்னு தலையிலே கையை வெச்சுண்டேன். ஒழுங்கா அப்யாஸம் செய்யாம அரங்கேற்றத்துக்குக் குறி வைத்த 'பெரிய மனுஷ' பாஸ்ட் புட் அவசரம் அன்னாரது மூவ்மெண்டில் தெரிந்தது. அரக ஆக்கிரமிப்பு ஒரே அவலம். மேடை கோதாவாக மாறியது. சமாராதனை சமையலிலே சிக்கன் வாசனை!

ஆமா, அவர் எங்கே 'மூவ்' பண்ணினார்- பாத வேலையைப் பற்றி எழுத?



பக்கத்தில் இருக்கும் கல்யாணி பிரசவ ஆஸ்பத்திரிக்கு அவரைக் கொண்டு போயிருந்தால் இரண்டாவது நிமிஷம் அவருக்குக் குவா குவா! அவ்வளவு பெரிய வயிறு!

அப்புறம் நடந்தது இதுதானய்யா.

'சட்'டென்று ஒரு ஆளுங்கட்சி அம்பாசடர் டிராபிக்கில் புகுந்து முன்னுரிமை கேட்டது. அதற்கு அவர் 'போகலாம்' என்று காட்டிய அபிநயத்தில், வாயில் நவநீதத்துடன் கோபிகையிடம் பிடிபட்ட கண்ணனின் அசால்டான குறும்புத்தனம் மருந்துக்குக் கூட தென்படலே. வீரப்பனின் வலது கை சேத்துக்குளியின் அப்பட்ட கள்ளத்தனம்தான் புலப்பட்டது. அட தேவுடா!

நாட்டியத்துக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் பிராப்தம் இல்லாத காவல்காரர்கள் -

வெண்ணெய் திருடும் கண்ணனைப் பிடிக்கத்தான் வேண்டாம். பிடிக்கிற மாதிரி அபிநயம்கூடக் காட்டத் தெரியாதவர்கள் -

நிஜத் திருடனை 'லபக்'குனு பிடிக்க யாரிடம் சிட்சை எடுத்துக்கணும்?

பத்மா சுப்ரமண்யத்திடமா?

சேச்சே! என்ன பிதற்றல்!

ஸ்காட்லண்ட் யார்டுனு சொல்வானே...

தெரியாது ஸ்வாமி. ஊதற சங்கை ஊதிட்டேன்! ○



''எனக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது. சாகலாம்னு தோணுது.''

''ஒரு நாள் பவர் கட்டாகி ஒரு எபிசோடு பார்க்காததுக்கு இப்படி டென்ஷனாகலாமா..?''

- இரா. வேல்முருகன், சேலம்

''நான் தேர்தல்லே 13வது வார்டுலே ஏஜண்டா இருந்தேன்!''

''அப்புறம் என்னாச்சி?''

''எதிர்க்கட்சிக்காரங்க அடிச்ச அடியிலே இப்போ 33வது வார்டுலே பேஷண்டா இருக்கேன்.''

- நெல்லையப்பபுரம் செல்வன்



'குரு' கொண்டு போய்ட்டாரு!

''கட்சியில் நீங்க இளைஞர் அணியில் இருக்கிறீங்களா அல்லது இலக்கிய அணியில் இருக்கிறீங்களா?''

''ஓரம் கட்டப்பட்டோர் அணியில் இருக்கேன்!''

- நாஞ்சில் சு. நாகராஜன்

''குரு பெயர்ச்சி பலன்களைப் பற்றி தெரிஞ்சுக்க பத்து விதமான புத்தகங்களை வாங்கி வைச்சிருக்கியே... என்னாச்சு?''

''பதினோராவதா நானே ஒரு புத்தகம் வெளியிடற அளவுக்கு ''குரு'' கொண்டு போயிட்டாரு!''

- மீனா முருகேசன், திருச்சி





என்ன நினைக்கிறாங்க?


ஒரு வழியாக த.மா.க. - காங்கிரஸ் இணைப்புக்கு நாள் குறித்தாயிற்று. தமிழகத்தில் நீதிக் கட்சியும், காங்கிரசும் வேர்விட்டுப் பரவிய மையப்புள்ளியான விருது நகர்க்காரர்கள் இணைப்பு பற்றி என்ன நினைக்கிறார்கள்?

க. பாலசுப்ரமணியம் *(மாவட்டச் செயலாளர் த.மா.கா.)*

அன்று நரசிம்மராவ் எடுத்த முடிவால், த.மா.கா. உருவானது. ஆனாலும் இந்தியாவை வலுப்படுத்த காங்கிரஸ் பேரியக்கம்தான் மத்தியில் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதில்



• க. பாலசுப்ரமணியன்



• பாப்கான
கார்த்திகேயன்

தொடர்ந்து உறுதியாக இருந்தோம். இப்போது சோனியாகாந்தியின் தலைமையில் காங்கிரஸ் எழுச்சியோடு நிற்கிறது. சோனியா எதையும் காது கொடுத்துக் கேட்கக் கூடிய தலைவர். தமிழகத்தில் இனி யாரோடும் கூட்டணி சேரக்கூடாது என்ற விழிப்புணர்ச்சியும் தொண்டர்கள் மத்தியில் ஏற்பட்டுவிட்டது.

இணைப்புக்குப் பிறகு நாங்கள் யார் முதுகிலும் சவாரி செய்யாமல் தனித்துப் போட்டியிடுவது எங்களுக்கொன்றும்



• சோனியா



• வாசன்

சிரமமாக இருக்காது. அடிமட்டத் தொண்டர்கள் வரையிலும் இணைப்பிற்கு அமோக ஆதரவு இருக்கிறது. காமராஜர் நூற்றாண்டு தொடங்குவதை முன்னிட்டு இணைப்பு விழாவை மதுரையில் நடத்துவது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியான விஷயம்...

பாப்கார்ன் கார்த்திகேயன் *(காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை வர்த்தகப் பிரிவுச் செயலாளர்)*

கொள்கைகள், குறிக்கோள்களைக் காற்றில் பறக்க விடுகிற கட்சிகளுக்கு என்ன கதி நேரும் என்பதற்கு, த.மா.க. ஒரு நிகழ்கால உதாரணம். அ.தி.மு.க.வுடன் கூட்டணி கூடாது என்று மூப்பனார் த.மா.கா.வைத் தொடங்கினார். பிறகு அவரே அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்தார். காங்கிரசிலிருந்து எதற்காக வெளியே வந்தார்களோ அதே தவறை இவர்களே செய்துவிட்டு காங்கிரசுக்குத் திரும்பினால், அங்கே இவர்களுக்கு என்ன மரியாதை கிடைக்கும் என்று தெரிந்தே போகிறார்கள். தாய் வீட்டிலிருந்து சண்டையிட்டுத் தனிக்குடித்தனம் போனவர்கள், திரும்பி வந்தால் அந்தக் குடும்பத்தில் எத்தனைக் கூச்சலும் குழப்பமும் ஏற்படுமோ அதையெல்லாம் இணைப்பிற்குப் பிறகு பார்க்கலாம். தவிர த.மா.க. தனது தன்மான நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தவரை நடுத்தர மக்களின் வாக்குகளைப் பெற்றது. இனி அந்த வாக்குகள் எங்களுக்குத்தான்.”

தென்காசிப்பட்டணம்

கதை உண்டு. மெலோ டிராமா இல்லை. அக்ஷன் உண்டு. ரத்தக்களரி இல்லை. சென்டிமென்ட் உண்டு. அதில் செயற்கைத்தனம் இல்லை. நகைச்சுவை நிறைய உண்டு. ஆனால் விரசம் இல்லை. வில்லன் உண்டு. ஆனால் சூழ்நிலைக்குக் கட்டுப்படுகிற அசடு.

அட! தமிழில் இப்படியொரு படமா? எனச் சந்தோஷப்பட வைக்கும் புதிய இயக்குனர் ராஃபி. ஒரு



மலையாள வரவு.

படத்தின் கதை என்னவோ பழசுதான். ஆனால் அதைப் புதிய தொனியில், புதிய காட்சிகளின் பின்னணியில் போரடிக்காமல் சொன்னதில்தான் இயக்குனரும், திரைக்கதையாசிரியரும் சிம்மாசனம் போட்டு உட்கார்ந்துகொள்கிறார்கள்.

பிள்ளை பிராயம் முதல் பிரிக்க முடியாத உயிர் நட்புக்குச் சொந்தக்காரர்கள் கண்ணனும், தாஸும். எடுத்ததற்கெல்லாம் அடி, உதை என்று அடாவடியில் இறங்கும் இந்த முரட்டு ஆசாமிகள், மனத்தளவில் இலவம் பஞ்சு மனிதர்கள். கண்ணனும் மீனாட்சியும் காதலிக்கிறார்கள். தாஸ் தொடக்கத்தில் சங்கீதாவைக் காதலிக்கிறான். ஆனால் சூழ்நிலைக் காரணமாக பரஸ்பரம் தவறாகப் புரிந்துகொண்டு, ஜோடி மாறும் அபாயம் நோக்கி கதை நகர, நமக்கோ நெஞ்சுக்குள் பக்... பக்...

இத்தனை 'பெப்'புள்ள திரைக்கதையை இன்னும் சுவாரஸ்யமாய் ஆக்கிவிடுகிறது, பசுமாடு வேடம் போட்டுக்கொண்டு விவேக்கும் சார்லியும் அடிக்கும் லூட்டிகள். சமயத்தில் விவேக்கையே ஜுஜுபி என்பது போல் ஆக்கி விடுகிறார் சீனியர் சார்லி. விவேக்கின் காதலை, ஒரு காமெடியனின் காதல் என்று கொச்சைப்படுத்தாமல், அதை யதார்த்த உணர்ச்சியோடு சித்திரிக்கப்பட்டிருப்பதில் மலையாள டச். கண்ணன், தாஸாக வரும் சரத், நெப்ஸ் இருவருக்குமே பிரேக் கொடுத்திருக்கும் படம். வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் இருவரும் நடிப்பிலும் உயரமாய் தெரிகிறார்கள்.

மற்றொரு மலையாள வரவு சம்யுக்தா நடிக்கிறார் என்பதைவிட, இயல்பாக தனது பாத்திரத்தை உணர்ந்து உணர்ச்சிகளை ஜோராய் வெளிப்படுத்துகிறார் என்று சொல்வது பொருத்தம்.



சுரேஷ் பீட்டரின் கை வண்ணத்தில் மலையாள வாசனையோடு மனத்தைத் தட்டுவது போல மென்மையான மெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன.


ராஃபி போன்ற மலையாள இயக்குனர்கள் தமிழுக்கு வரட்டும், வரவேற்போம். ஆனால் தமிழுக்குத் தகுந்த மாதிரி படமெடுக்கிறேன் என்று தரம் தாழ்ந்து போய் விடக் கூடாது என்பதுதான் நமது கவலை...

- விஷுவல்தாசன்

• அபவ் ஆவெரஜ்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

வாழ்வில் முடிவெடுத்த அந்தத் தருணம் என்றும் பசுமையானது...



அதற்கு ஈடான மற்றொரு தருணம் நீங்கள் யெஸ்டி அஸோஸியேடட் பில்டர்ஸிடம் இல்லம் வாங்கும் இனிய தருணம்தான்!



அண்ணா நகர், தி. நகர், நங்கநல்லூர், வேளச்சேரி, முகப்பேர் (கிழக்கு) மற்றும் பிற இடங்களில் அழகிய தரமான டீலக்ஸ் ஃபிளாட்டுகள் மற்றும் தனி வீடுகள் வாங்க

அணுகுங்கள்

CREATORS
NOT JUST BUILDERS

YESDE ASSOCIATED BUILDERS LTD.

(FLAT PROMOTERS & PROPERTY DEVELOPERS)
402, "Challamall" 17, Thyagaraya Road, (Pondy Bazaar),T. Nagar,
Chennai - 600 017. Phone: 4340224/4333636/4342667 Fax: 044-4340210

E.Mail:yesde@md3.vsnl.net.in Web:www.yesde-builders.com

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2002 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka.